Vol.4, Issue 5 | Annual Subscription ₹ 420

அக்டோபர் 2021

@NewsRotary /RotaryNewsIndia

ரோட்டரி நியூஸ்

INDIA
www.rotarynewsonline.org

Rotary

உங்களுடைய சிறந்த திட்டங்களை ரோட்டரி நியூஸ்-இல் இடம்பெறச்செய்யுங்கள்

உள்ளூர்ச் சமூகத்துக்குப் பலன் தரும் வகையில், மக்களுடைய வாழ்க்கைகளை மாற்றும் வகையில் நன்கு திட்டமிடப்பட்ட, கவனத்துடன் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை நடத்தும் ரோட்டரியன்கள், ரோட்டரி சங்கங்கள் அல்லது மாவட்டங்கள், அவை மற்ற ரோட்டரி சங்கங்களுக்குத் தெரியவேண்டும் என்று விரும்புவது இயல்புதான். உங்களில் பலர் இதற்குச் சிறந்த வழியாக எண்ணுவது, 1.33 லட்சத்துக்கு மேற்பட்ட ரோட்டரியன்கள், சுமார் 1,000 பொது நூலகங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவர்களுடைய காத்திருத்தல் அறைகள், மருந்தகங்கள் போன்றவற்றுக்குச் செல்கிற, மாதந் தோறும் 4 லட்சம் வாசகர்களால் படிக்கப்படுகிற ரோட்டரி நியூஸில் அந்தத் திட்டத்தைக் காட்சிப்படுத்துவது.

முக்கியமான திட்டங்களைச் செயல்படுத்துவதில் ரோட்டரியன்கள் செலவிடும் உழைப்பும் பணமும் உங்கள் இதழால் போதுமான அளவு பேசப்படவேண்டும் என்பதை ரோட்டரி நியூஸ் ஏற்றுக்கொள்கிறது. ஆனால், எங்களுடைய பிரச்சனை, பல நேரங்களில் இது போன்ற திட்டங்களைப்பற்றி எங்களுக்கு ஏதும் தெரிய வருவதில்லை.

அதனால், உங்கள் தகவல் தொடர்பை மேம்படுத்துவதற்கு ஓர் அழைப்பு, இதோ: உங்களுடைய மிகப் பெரிய திட்டங்களைப்பற்றி எங்களுக்குச் சொல்லும் பொறுப்பை உங்கள் சங்கத்தில் ஒருவரிடம் ஒப்படையுங்கள். திட்டத்தின் வெவ்வேறு நிலைகளைத் தயவுசெய்து ஆவணப்படுத்துங்கள் அல்லது ஒரு தகவல் தாளைத் தயாரியுங்கள், அப்போது, இதழியலின் அடிப்படை அளவுகோல்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

- இந்தத் திட்டம் எப்போது சிந்திக்கப்பட்டது.
- இந்தத் திட்டம் ஏன் திட்டமிடப்பட்டது (உள்ளூர்ச் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கா?). இந்தத் தேவையை விவரியுங்கள்.
- இதற்கான பணம் எப்படித் திரட்டப்பட்டது? அது ஒரு TRF நல்கையா?
- இதற்கெனப் பணம் திரட்டுவது ஒரு பிரச்சனையாக இருந்ததா? அரசு அனுமதிகள் தேவைப்பட்டனவா? ஆம் எனில், அவற்றை எப்படிப் பெற்றீர்கள். பிற சவால்கள், தீர்வுகளைக் கண்டறிதல்.
- திட்டம் நிறைவுசெய்யப்பட்ட நேரம், வெவ்வேறு நிலைகள்.
- சில மனித ஆர்வக் கதைகளுடன் இதைத் தொடர்புபடுத்துங்கள்... பலன் பெற்றோருடைய படங்கள், அவர்களுடன் உரையாடல்.
- திட்டம், அதனால் பலன் பெற்றோருடைய நல்ல, செயல்தன்மை கொண்ட புகைப்படங்களை எடுங்கள், அவற்றை உயர் பகுப்புத்திறனில், உண்மை அளவில் அனுப்புங்கள்.
- இந்தத் திட்டத்தில் பேரார்வத்துடன் ஈடுபட்ட ரோட்டரியன்களைச் சிறப்பித்துக் காண்பியுங்கள், அவர்கள் சங்கத் தலைவர்களாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை.
- பெண்கள், இளம் உறுப்பினர்களைக் கூடுதலாகப் பெற ரோட்டரி விரும்புகிறது என்பதால், இந்தக் குழு செய்த திட்டங்களை எங்களுக்கு அனுப்புங்கள்.

இவை அனைத்தும் தயாரானதும், உங்கள் திட்டத்தைப் பார்க்க



எங்களை அழையுங்கள். நாம் மாதம் ஓர் இதழ்தான் வெளியிடுகிறோம் என்பதையும், இந்த இடத்துக்கு மிகுந்த தேவை உள்ளது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள். இதழுக்கு உங்களுடைய மிகச் சிறந்த திட்டத்தைக் கொடுங்கள், போர்வைகள், புத்தகங்கள் அல்லது இருக்கைகள் வழங்குதல் போன்ற எல்லா வகைச் செயல்பாடுகளையும் அனுப்பாதீர்கள்.

நிறைவாக, பல நூறு அல்லது பல ஆயிரம் டாலர்கள் செலவாகிற, பன்னாட்டு நல்கைகளைக் கொண்ட மிகப் பெரிய திட்டங்களைமட்டும் நாங்கள் எதிர்பார்ப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். தனித்துவமான யோசனையைக் கொண்ட, உள்ளூர்ச் சமூகத்துக்கு ஓர் எளிய, நேரடியான தீர்வை அளிக்கிற ஒரு சிறிய திட்டத்தைக்கூட நாங்கள் வரவேற்கிறோம்.

உங்கள் ஆலோசனைகளை அனுப்பவேண்டிய முகவரிகள்:
ஆசிரியருடைய மின்னஞ்சல் முகவரி:
rushbhagat@gmail.com

மூத்த உதவி ஆசிரியருடைய மின்னஞ்சல் முகவரி:
jaishri67@gmail.com

ஆசிரியர்

உள்ளே

12 குழந்தைகளின் இதயம் காக்கும் "சஞ்சீவனி"
நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த, இதய நோய் கொண்ட குழந்தை நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனைகளுக்கு ஆதரவு அளிப்பதாக ரோட்டரி சங்கங்கள் வாக்களிக்கின்றன.

20 ரோட்டரி மகுடத்தில் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம் ஆப்பிரிக்கா
RI தலைவர் சேகர் மேத்தா ரோட்டரி நியூஸ்-யிற்கு அளித்த பேட்டியில், தன்னுடைய 7-நாடுகள் ஆப்பிரிக்க பயணத்தைப் பற்றிப் பேசுகிறார், அங்கு நாட்டுத் தலைவர்களைச் சந்தித்து, உள்ளூர்ச் சமூகங்களுக்கு ரோட்டரி உதவும் என்று உறுதியளித்தது பற்றிக் கூறுகிறார்.

32 கோவிட்டை எதிர்த்துப் போராடுவதில் எச்சரிக்கை தேவை
RI கோவிட் செயல் படைத் தலைவர் PRIP K R ரவீந்திரன் நோய்ப்பரவலைக் கையாள்வது, உலகெங்கும் தடுப்பு மருந்துகளை முன்னிறுத்துவதற்கான ரோட்டரியின் செயல் திட்டத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.

38 கனவு நூல்கள்
RC பிலாஸ்பூர் க்வீன்ஸின் திட்டம் ஒன்று, உம்ரேலி கிராமத்தைச் சேர்ந்த பெண் பட்டு நெசவாளர்கள் தங்களுடைய படைப்புகளை மேம்பட்ட விலைகளில் சந்தைப்படுத்த உதவுகிறது, அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குகிறது.

42 அரசுடன் இணைந்து ஒட்டுமொத்த நகரத்துக்கும் தடுப்பு மருந்து வழங்கியது RC கொடைக்கானல்
நோய்ப்பரவலின்போது கொடைக்கானலில் உள்ள உள்ளூர்ச் சமூகத்துக்கு உதவுவதற்காக ரூ.1.13 கோடி செலவழித்த சங்கம்.

62 வாழ்க்கை முறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் "ஸ்மார்ட் ஹோம்"
உங்கள் வீட்டை முழுதும் தானியங்கியாக, சுற்றுச்சூழலுக்கு இதமாக மாற்றக்கூடிய சில மிகச் சிறந்த கருத்துகளைப்பற்றிப் படியுங்கள்.

64 உழைப்பால் உயர்ந்து நிற்கும் பண்டிட் ஜஸ்ராஜ்
தன்னுடைய ஆன்மாவைத் தொடும் குரல், பல ஆக்டேவ் வீச்சுக்காக அறியப்பட்டுள்ள இவர், இந்துஸ்தானி செவ்வியல் இசையின் மிகப் புகழ் பெற்ற கலைஞர்களில் ஒருவர்.

அட்டையில்: பிறவி இதயக் குறைபாட்டு நோய்க்குறிக்காகச் சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் ஒரு குழந்தை.

QR codeஐ ஸ்கேன் செய்து எங்கள் வலைதலத்தை காணலாம்.

QR codeஐ ஸ்கேன் செய்து பத்திரிக்கையை படிக்கலாம்.

மோடியைச் சந்தித்த மேத்தா

செப்டம்பர் இதழில் PM மோடி RI தலைவர் சேகர் மேத்தாவை வரவேற்கும் அட்டைப் படம் நன்றாக அமைந்திருந்தது. பெண் குழந்தைகளுடைய கல்விபற்றிய மேத்தாவின் செய்தி மிகச் சரியானது. தாலிபன் ஆட்சியின் கீழ் ஆஃப்கான் பெண்களுடைய நிலையை ஆசிரியர் குறிப்பு விளக்குகிறது. RI இயக்குநர் மகேஷ் கோட்பாகி உறுப்பு நன்கொடையில் சரியாகக் கவனம் செலுத்துகிறார். 45 நாட்களில் ரூ.20 கோடி மருத்துவமனையை உருவாக்கிச் சாதனை படைத்த ஈரோட்டு ரோட்டரியன்களுக்குப் பாராட்டுகள். கோயம்பத்தூரில் தீக் காயத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ மனையைப்பற்றிப் படித்தது மிகச் சிறப்பாக அமைந்தது. RC டெல்லி-யின் பேட்டி சிக்ஷா ஒரு புதுமையான திட்டம்.



PRIP ராஜேந்திர சாபு எழுதிய மாரத்தான் மனிதர் படிக்கவேண்டிய கட்டுரை.

ஃபிலிப் முலப்பொனெ MT
RC திருவனந்தபுரம்
சப்-அர்பன் — D 3211

அட்டை, முன் உள் பக்கத்தில் RI தலைவர் மேத்தா PM மோடியைச் சந்திக்கும் படங்கள் ரோட்டரியன் களுக்கு ஊக்கம் தரும் ஊசியாக வந்துள்ளன. அவர்களுடைய சந்திப்பைப்பற்றிய தகவல்களைப் படிப்பதற்காக நான் இதழின் எல்லாப் பக்கங்களையும் புரட்டினேன், ஆனால் அதைக் காண இயலவில்லை.

R ஸ்ரீனிவாசன், RC மதுரை
மிட்-டவுன் — D 3000

PM மோடி தலைவர் மேத்தா-வுடன் இருக்கிற அட்டைப் படத்தைக் கண்டு நாங்கள் பெருமைப்படுகிறோம், அவருடைய பொறுப்புக் காலம் ரோட்டரியன்களுக்கு, குறிப்பாக இந்திய ரோட்டரியன்களுக்கு ஒரு பொற்காலமாக இருக்கும் என்று நம்புகிறோம்.

அனில் சக்சேனா
RC லக்னோ — D 3120

ஆஃப்கான் பெண்களுடைய நிலைமை

ஆஃப்கான் பெண்களுடைய நிலையைப்பற்றிய ஆசிரியர் பக்கம் சரியான நேரத்தில் வந்துள்ளது. ஆஃப்கானிஸ்தானில் கல்விக்கு உதவுவதற்காக, அங்கு ஒரு புதிய பள்ளியைக் கட்டியுள்ள உள்ளூர் ஆஃப்கான் NGOஆன விவசாயம், நலன் மற்றும் முன்னேற்ற அமைப்பின் (AHDO) செயல்பாடுகளை ஆதரிப் பதற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதாக RC எமரால்ட் சிட்டி மற்றும் RID 5030, சியாட்டில், USல் உள்ள மற்ற சங்கங்கள் தெரிவித்துள்ளன. அப்போதைய கல்வி அமைச்சகம் பள்ளியை இயக்குவதற்குப் பயிற்றுநர்கள், ஆதரவு ஊழியர்களை வழங்கியது, அவர்கள் இதைத் தொடரக்கூடும். பெண்களுடைய கல்வி புறக்கணிக் கப்படாது என்று நாம் நம்புவோம்.

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

உங்கள் ஆசிரியர் பக்கத்தைப் படிக்கும் போது என் கண்களில் கண்ணீர் வழிந்தது, "தீக்காயத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு நம்பிக்கை தரும் 10 ஆண்டுகள்" கட்டுரை ஊக்கம் தந்தது, எங்கள் சங்கத்தின் பேட்டி சிக்ஷா திட்டம் பற்றிய கட்டுரை மகிழ்ச்சி தந்தது.

க்ரிதி மகிஜா, RC டெல்லி
சவுத் — D 3011

தாலிபன்கள் ஆஃப்கானிஸ்தானைக் கைப்பற்றியபின் ஆஃப்கான் பெண்களுடைய நிலைமை என்ன என்பது ஆசிரியர் பக்கத்தில் தெளிவாக விவரிக்கப்பட்டிருந்தது.

எட்வர்ட் மென்டோன்சா
RC ஷங்கெர்புரா — D 3182

ஈரோடு மருத்துவமனை, ஒரு மாபெரும் பணி

RID 3203 ரோட்டரியன்கள் ஈரோட்டில் 400க்கும் மேற்பட்ட படுக்கைகளைக் கொண்ட, ரூ.20 கோடி மதிப்புள்ள ஒரு மிகச் சிறப்பான மருத்துவமனையை வெறும் 45 நாட்களில் கட்டியுள்ள விரைவு, ஆற்றலை எண்ணி நான் வியக்கிறேன். PDG Dr சகாதேவன், அவருடைய குழுவினர் DG ஷண்முக சுந்தரம் ஆதரவுடன் செய்துள்ள இந்தப் பணி உண்மையில் மிகப் பெரியது.

S மோகன், RC மதுரை
வெஸ்ட் — D 3000

ஈரோட்டில் வெறும் 45 நாட்களில் கட்டப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்ட ரோட்டரி சிறப்பு மருத்துவமனையை எண்ணி ரோட்டரியன்கள் பெருமைப் படுகிறார்கள். சமூகத்துக்குச் சேவை புரிவதற்காக ஈரோட்டு ரோட்டரியன்கள் செய்துள்ள மிக உயர்ந்த பணி இது.

T D பாட்டியா, RC டெல்லி
மயூர் விகார் — D 3012

ஈரோடு ரோட்டரி மருத்துவமனை ரூ.20 கோடி முதலீட்டில் 45 நாட்களில் கட்டப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டது. ரோட்டரி யன்கள் தங்களைத் தாங்களே நம்பினால் இன்னும் பெரிய விஷயங்களைச் சாதிக்கலாம் என்பதை இது மீண்டும் நிரூபிக்கிறது.

Rm முத்துக்கருப்பன்,
RC சங்கரபுரம் — D 2982

TANKERன் நவீன டயாலிஸ் மையம் மற்றும் RC பாம்பே செய்யும் சிக்கலான இதய அறுவைச் சிகிச்சைகள் ஆகியவை படிக்க வேண்டியவை.

Dr சஞ்சய் கோல்டெ
RC நாக்பூர் — D 3030

உறுப்பினர் எண்ணிக்கையை மிகுதியாக்குவதுபற்றிய தலைவர் மேத்தா அவர்களின் செய்தி சரியான நேரத்தில் வந்துள்ளது. ரோட்டரியன்கள் புதிய உறுப்பினர்களுடன் உரையாடுகிற தோழமையின் வழியாக நிறையப் பங்களிக்கலாம்.

நவீன் கார்க், RC சுனாம் — D 3090

மிகச் சிறந்த கலைஞரான திலீப் குமாருக்காக ஒரு கருப்பு, வெள்ளை அட்டைப் பக்கத்தைப் பதிப்பித்தது உங்களுடைய நல்ல சிந்தனை. மறைந்த இந்த நடிகரைப்பற்றிய நல்ல கட்டுரைகளை வெளியிட்டதற்காக பாராட்டுகள்.

பிரபாத் கேடியா
RC குவஹாத்தி — D 3240

மகாராஷ்டிரத்தின் ஷெகாவ்ன் வட்டத்தில் உள்ள ஒரு சிறு குக்கிராமத்தில் ரோட்டரி ஒரு பாலத்தைக் கட்டியது குறிப்பிட வேண்டியது. ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட பெண்களுக்கு ஹாக்கிப் பயிற்சி அளிக்கும் பாராட்ட வேண்டிய பணியை ரோட்டரி ஹாக்கி அறக்கட்டளை செய்கிறது; ரோட்டரியன் வழிகாட்டி இந்த முயற்சிக்காகத் தன் சொந்தப் பணம் ரூ.20 லட்சத்துக்குமேல் செலவிட்டிருப்பது பாராட்ட வேண்டியது.

பொன் முத்தையன்
RC ஆடுதுறை — D 2981

உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்துவதற்காகவும், பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் முயற்சியாகவும் ரோட்டரி நாட்களைக் கொண்டாடும்படி தலைவர் மேத்தா சங்கங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார். பெண்களுக்கு ஆற்றல் அளித்தல் மற்றும் சிறுமிகள் கல்விபற்றிய கட்டுரைகளை எழுதுவதற்கு ஆசிரியர் முக்கியத்துவம் அளிப்பது மிகவும் வரவேற்கவேண்டியது. ஒடிசா மாநிலப் பெண்களுக்கு ஹாக்கிப் பயிற்சி அளிப்பதன்மூலம் Rtn ஜதீந்தர் சர்மா ரோட்டரியை வளமாக்கியுள்ளார். ஒரு திருமண வரவேற்பு ஒரு கிராமப்புறக் கண் மருத்துவமனையின் உருவாக்கத்துக்கு வழிகாட்டியது எப்படி என்ற கட்டுரை ஆர்வத்தை அளித்தது; தில்லி சங்கங்கள் ராஜஸ்தானில் தடுப்பணையைக் கட்டியது பாராட்டவேண்டியது.

R தாயுமானவன், RC கடலூர்
மிட்-டவுன் — D 2981

ரோட்டரி ப்ளஸ்

பழங்குடியினக் குக்கிராமங்களில் கோவிட் விழிப்புணர்வுப் பணி என்கிற கட்டுரையை ஆகஸ்ட் ரோட்டரி ப்ளஸ் இதழில் வெளியிட்டதற்கு எங்கள் நன்றி, பாராட்டுகள்.

D K ஜரேக்கர்
RC நாசிக்-அம்பாத் —D 3030

இப்போது புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படும்போது தங்கள் கையை முன்னால் நீட்டி, திறந்த உள்ளங்கை கீழ்நோக்கிப் பார்க்கும்படி வைக்கிறார்கள், இது ஹிட்லருடைய ஜெர்மனியில் ஒரு நாசி வணக்கம் ஆகும். ரோட்டரி அமைதி, நட்பு, நல்லெண்ணத்தை முன்னிறுத்தும் ஓர் அமைப்பாகும். ஆனால் நாசிக்கள் இனவாதம் கொண்டவர்கள், கொடூரமானவர்கள். அதனால், சேரப்போகும் உறுப்பினருடைய வலப்பக்க முன் கை முழங்கையில் நேராக வைக்கப்படவேண்டும், திறந்த உள்ளங்கை முன்னோக்கிப் பார்க்கவேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இது அமைதி வாழ்த்து நிலையாகும். தயவுசெய்து இதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

ராமகிருஷ்ணா K
RC புத்தூர் — D 3181

ரூ.20 கோடி மருத்துவமனையை 45 நாட்களில் அமைத்துச் சமூகத்துக்குப் பெரிய அளவில் உதவிய ஈரோட்டு ரோட்டரியன்களுக்குப் பாராட்டுகள்.

ஷிவ்குமார் இஸ்ரானி
RC பாம்பே —D 3141

400 படுக்கைகளைக் கொண்ட கோவிட் மருத்துவமனையை அமைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு வழங்கிய ஈரோட்டு ரோட்டரியன்களுடைய மிகச் சிறந்த பணியை நாம் பாராட்டவேண்டும்.

N ஜெகதீசன், RC எலுரு — D 3020

திருத்தம்

செப்டம்பர் இதழில், 63வது பக்கத்தில், கிஷோரி அமன்கருடனான புகைப்படத்தின் தலைப்பில் பண்டிட் ஹரிபிரசாத் சௌராசியா தவறாகப் பீம்சென் ஜோஷி என்று குறிப்பிடப் பட்டுள்ளார். இந்தப் பிழைக்கு வருந்துகிறோம்.

ஆசிரியர்

We welcome your feedback. Write to the Editor:
rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com.
Mail your project details, along with hi-res photos,
to **rotarynewsmagazine@gmail.com.**

Messages on your club/district projects, information and links on zoom meetings/ webinar should be sent only by e-mail to the Editor at **rushbhagat@gmail.com** or **rotarynewsmagazine@gmail.com.** WHATSAPP MESSAGES WILL NOT BE ENTERTAINED.

Click on **Rotary News Plus** on our website **www.rotarynewsonline.org** to read about more Rotary projects.

வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க செயல்படுவோம்

SERVE TO CHANGE LIVES

ரோட்டரியில் உங்களுடைய தொடக்க நாட்களை நீங்கள் எப்போதாவது எண்ணிப்பார்ப்பதுண்டா? நான் பல நேரங்களில் அவ்வாறு எண்ணிப்பார்ப்பேன், ஏனெனில், சேவையின் ஆற்றலைக் கண்டறிந்த அந்த முதல் கணங்கள்தான் நான் இன்று எப்படி உள்ளேன் என்பதை வடிவமைத்தன. நான் என்னுடைய ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தபோது, எங்கள் முயற்சிகள் இந்தியாவின் கிராமப்புறச் சமூகங்களில் கவனம் செலுத்தின, அங்கு மக்கள் கழிப்பறை இன்றி வாழ்ந்தார்கள், தாங்கள் குளிக்கும் அதே குளத்திலிருந்து தங்கள் குடி நீரைப் பெற்றார்கள், ஒரு மரத்தின் கீழ் அமைந்த வெளி வகுப்பறைகளுக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்பினார்கள். ஆனால், ரோட்டரி சங்கங்கள் சில சேவைத் திட்டங்களை நடத்தியபின், அந்தக் கிராமங்களில் கழிப்பறைகள், தூய குடி நீர், தொடக்கக் கற்றலுக்கான ஒரு வகுப்பறை, அருகில் நலப் பராமரிப்பு மையம் ஆகியவை இருந்தன.

போதுமான அளவு சேவையைப் பெறாத சமூகங்களில் உள்ள மக்களுடைய வாழ்க்கைகளை மேம்படுத்த நாம் பணியாற்றும்போது, எடுத்துக்காட்டாக, தொழில்சார்ந்த பயிற்சி, நிதி வளங்களுக்கான அணுகல் போன்றவற்றை வழங்கும் திட்டங்களின் வழியாகப் பணியாற்றும்போது, உள்ளூர்ப் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கவும் நீடிக்கச்செய்யவும் உதவுகிறோம்.

இந்தத் தேவை மிகப் பெரியது. உலக மக்கள் தொகையில் 9%, அதாவது, 700 மில்லியன் மக்கள் (பெரும்பாலும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர்கள்) ஒரு நாளுக்கு $1.90ஐவிடக் குறைவான தொகையில் வாழ்கிறார்கள் என்கிறது ஐக்கிய நாடுகள் அமைப்பு, வலுவான சமூக மேம்பாடு, தொழில்முனைவோரை ஆதரிப்பதன் மூலம், அந்தப் பகுதி யிலும் பிற பகுதிகளிலும் உள்ள மக்களுக்கான நிலைகளை மேம்படுத்த நாம் உதவலாம்.

உங்கள் சங்கம் உங்கள் சொந்தச் சமூகத்திலும் பொருளாதார மேம்பாட்டை முன்னிறுத்தலாம், இதற்கு நீங்கள் உள்ளூர்ப் பள்ளிகள், சமூகக் கல்லூரிகளின் வழியாகத் தொழில் சார்ந்த பயிற்சி வாய்ப்புகளை விரிவாக்கலாம், கடன் வழங்குவோருடன் இணைந்து நிதிச் சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தலாம், அல்லது, தொழில்முனைவோருக்கு வளங்களை வழங்குகிற, அவர்களைத் தொழில் சமூகத்துடன் இணைக்கிற, லாப நோக்கம் கருதாத ஒரு நிறுவனத்துடன் பணியாற்றலாம்.

அக்டோபர் 24 உலக இளம்பிள்ளைவாத நாள் அன்று, இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் முயற்சியில் நம்முடைய மிகச் சிறந்த முன்னேற்றத்தை நாம் கொண்டாடுவோம். ஆனால், இந்தப் போர் இன்னும் முடியவில்லை என்பதும் நமக்குத் தெரியும். அனைத்துக் குழந்தைகளுக்கும் இளம்பிள்ளைவாதத்துக்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக நிதி திரட்டவும் விழிப்புணர்வை உண்டாக்கவும் உங்கள் உதவி இன்னும் தேவை. தயவுசெய்து, இந்த முக்கியமான நாளில் உங்கள் சங்கங்கள் அனைவரையும் செயல்படுத்துங்கள், இங்கு நன்கொடை அளிக்கும்படி அவர்களை ஊக்குவியுங்கள்: endpolio.org/world-polio-day.

என் வாழ்க்கை முழுவதும் சேவை எனக்கு நிறைவைத் தந்துள்ளது. உங்களில் பலரும் அப்படிதான் உணர்கிறீர்கள். நாம் ஒன்றாகச் சேர்ந்தால், வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை செய்யலாம்.



Shekhar Mehta

சேகர் மேத்தா
RI தலைவர்

மகளிர் மேம்பாடு: நம்பிக்கையும் இருண்ட மேகங்களும்!

உலகம் முழுவதும் இளம் பெண்கள் மற்றும் பெண்களின் நிலையை மேம்படுத்துவது அவசரத் தேவை என்பதை விழிப்புணர்வுடன் புரிந்துகொண்டுள்ளனர் என்பதை இரண்டு வெவ்வேறு மற்றும் தொடர்புடைய பிரச்னைகளிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவரது சமூக ஊடகப் பதிவுகள் மற்றும் ரோட்டரி நியூஸ்-ற்கு அவர் அளித்த நேர்காணலில் இருந்து தெரிந்துகொள்ள முடிந்ததால் RI தலைவர் சேகர் மேத்தா, தனது பதவிக்காலத்தில் உலகம் முழுவதும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், பெண்கள் மேம்பாட்டில் கவனம் செலுத்தி வருகிறார். ஆப்பிரிக்க கண்டத்தில் 7 நாடுகளுக்கு 20 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர், பெண்கள் மேம்பாட்டுக்காக ஆப்பிரிக்காவில் உள்ள ரோட்டேரியன்கள் ஆர்வமும் ஆதரவும் காட்டி வருவது மகிழ்ச்சியளிப்பதாகத் தெரிவித்துள்ளார். நான் எங்கு சென்றாலும் பெண்கள் மேம்பாட்டுக்கான திட்டங்களை ரோட்டேரியன்கள் மிகுந்த உற்சாகத்துடன் செயல்படுத்தி வருவதைக் காண முடிந்தது. Pad-a-Girl திட்டத்தின் கீழ் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பேடுகளை தயாரிக்க பெண்களுக்கு பயிற்சி அளிக்கும்போது சுகாதாரம், தூய்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவையும் வலியுறுத்தப்பட்டன என்றார். அவரைக் கவர்ந்த மற்றொரு திட்டம் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்த பெண்களுக்கு உதவித்தொகை வழங்குவது.

உலகெங்கிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள் பெண்கள் கல்வி மற்றும் பெண்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருவது நமக்கு தெரிந்ததுதான். சத்தீஸ்கர் மாநிலம், பிலாஸ்பூரில் உள்ள பிலாஸ்பூர் குயீன்ஸ் ரோட்டரி சங்கம், (முழுவதும் பெண் உறுப்பினர்களை உள்ளடக்கியது) கோசா பட்டுப் புடவைகளை நெசவு செய்யும் பெண்களின் முன்னேற்றத்திற்கு உதவிவருவது குறிப்பிடத்தக்கது. இதற்காக சங்கம் “சப்னோகேதாகே” என்னும் திட்டத்தைத் தொடங்கி பட்டு நெசவில் ஈடுபட்டுள்ள பெண்கள், தங்கள் தயாரிப்புகளை சந்தைப்படுத்துவதிலும், தையல் மற்றும் எம்பிராய்டரி ஆகியவற்றில் கூடுதல் திறன் பெறவும், சுயமாக தொழில் செய்ய கடனுதவி பெறவும், அவர்கள் வீட்டுப் பெண்களின் திருமணச் செலவை சமாளிக்கவும் உதவி வருகிறது.

மற்றொருபுறம் ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் ஆட்சியில் சிறுமிகள், பெண்களின் மோசமான நிலைமையும் அவர்களின் உரிமைகள் நசுக்கப்படுவதும் கவலை அளிக்கிறது. ஆனால், ஆறுதல் அளிக்கும் விஷயம் என்னவெனில், நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் ஆப்கான் பெண்கள் துணிச்சலாக குரல் கொடுக்க தொடங்கியுள்ளதுதான். கடந்த செப்டம்பர் மாதம் ஆப்கான் பெண்கள் துணிச்சலுடன் *Do Not Touch My Clothes* என்று சமூக ஊடகங்கள் மூலம் பிரசாரம் நடத்தினர், படங்களையும் பதிவிட்டிருந்தனர். இளைஞிகள், அவர்களின் தாயார், அத்தைகள், சகோதரிகள் என அனைவரும் வண்ண வண்ண உடைகளுடன் ஆப்கான் கலாசாரப்படியான ஒப்பனைகளுடன் முகம் மற்றும் தலையை மூடாமல் காட்சியளித்தனர். இது தாலிபான்கள் ஆட்சியில் குறைந்துவரும் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான முயற்சியாகும். ஆண்கள் கல்வியைத் தொடர அனுமதித்த தாலிபான்கள், பெண் கல்விக்கு அனைத்துவிதமான கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளது. இந்த பிரசாரத்தின் மூலம் ஆப்கானிஸ்தான் பெண்கள், நிகாப் மற்றும் புர்கா ஆகியவை ஆப்கான் பெண்களுக்கான ஆடை குறியீட்டின் ஒரு பகுதியாக இல்லை என்பதை ஆட்சியாளர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

காபூலில் உள்ள பெண்கள் பள்ளியில் இயக்குநராக உள்ள அகில்லா, “தி நியூயார்க் டைம்ஸ்” பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில், மகளிர் கல்வி குறித்து தாலிபான் ஆட்சியாளர்களின் திட்டங்கள் என்பதை அறிய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். ஆனால், கல்வி தொடர்பான தாலிபான் குழு கூட்டங்களில் அவரால் கலந்துகொள்ள முடியாது. ஏனெனில் அவற்றில் ஆண்களுக்கு மட்டுமே அனுமதி. அவர்கள் சொல்வதெல்லாம், நீங்கள் உங்கள் சார்பாக ஆண் பிரதிநிதியை அனுப்புங்கள் என்பதுதான் என்று தெரிவித்துள்ளார்.

பெண் கல்வியில் ஈடுபாடு காட்டும் அவரும் மற்றவர்களும் பெண் கல்வி தொடர்பான கூட்டங்களில் பங்கேற்கக்கூடாது என்று தடுக்கப்படுகிறார்கள். தாலிபான்கள் ஆட்சியில் பெண் கல்வியும், பெண்களுக்கான உரிமைகளும் நசுக்கப்படுகிறது.

ரஷீதா பகத்

Governors Council

RID 2981 S Balaji
RID 2982 K Sundharalingam
RID 3000 R Jeyakkan
RID 3011 Anup Mittal
RID 3012 Ashok Aggarwal
RID 3020 Rama Rao M
RID 3030 Ramesh Vishwanath Meher
RID 3040 Col Mahendra Mishra
RID 3053 Sanjay Malviya
RID 3054 Ashok K Mangal
RID 3060 Santosh Prdhan
RID 3070 Dr Upinder Singh Ghai
RID 3080 Ajay Madan
RID 3090 Parveen Jindal
RID 3100 Rajiv Singhal
RID 3110 Mukesh Singhal
RID 3120 Samar Raj Garg
RID 3131 Pankaj Arun Shah
RID 3132 Dr Omprakash B Motipawale
RID 3141 Rajendra Agarwal
RID 3142 Dr Mayuresh Warke
RID 3150 K Prabhakar
RID 3160 Thirupathi Naidu V
RID 3170 Gaurishkumar Manohar Dhond
RID 3181 A R Ravindra Bhat
RID 3182 Ramachandra Murthy M G
RID 3190 Fazal Mahmood
RID 3201 Rajasekhar Srinivasan
RID 3203 Shanmugasundaram K
RID 3204 Dr Rajesh Subash
RID 3211 Srinivasan K
RID 3212 Jacintha Dharma
RID 3231 Nirmal Raghavan W M
RID 3232 Sridhar J
RID 3240 Dr Mohan Shyam Konwar
RID 3250 Pratim Banerjee
RID 3261 Sunil Phatak
RID 3262 Santanu Kumar Pani
RID 3291 Prabir Chatterjee

Printed by PT Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by PT Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions — original content — is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced with permission and attributed to RNT.

RI இயக்குனர்

ஓர் அமைதியான உலகைக் கொண்டுவருவோம்

அன்புள்ள ரோட்டரியன்களுக்கு,

RIக்கு அமைதியைக் கட்டமைக்கும் முன்னெடுப்புகளை நடத்திய ஒரு நீண்ட வரலாறு உண்டு. முதல் உலகப் போருக்கு முன்னால், அமைதியைப் பராமரிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்த தீர்மானம் ஒன்றில் தொடங்கி, அமைதி மையங்களை அமைத்தல், இப்போது சுற்றுச்சூழலை ஆதரித்தல் என்று, அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுவதால் நம் உலகில் உண்டாகும் முரண்களைக் கையாளத் தேவையான வளங்கள், எண்ணச் செயல்முறை ஆகியவை ரோட்டரியன்களிடம் உள்ளன. எதுவும் செய்யாமல் அமைதியைப்பற்றி அறிவுரை கூறுவதை ரோட்டரி எப்போது நம்புவதில்லை. அதற்குப் பதிலாக, ஈடுபடுதல், நாம் சேவை புரியும் மக்களிடையில் ஊக்கத்தை உண்டாக்குதல் ஆகியவற்றின் மூலம் நாம் அமைதிச் செயல்முறையை நடத்திவந்துள்ளோம்.

ஆனால், இன்றைய உலகில், 70 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் முரண், வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அமைதியைக் கொண்டுவரும் படைகள், மாநில, பன்னாட்டு அமைப்புகள் என யாராலும் பரவலாக உள்ள மனித உரிமை மீறல்களைக் குறைக்க இயலாது. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு, ஆஃப்கான் நெருக்கடி.

பாதிக்கப்பட்ட மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதிப் பேர் குழந்தைகள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தச் சூழலை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள இயலாது.

நம்மிடம் அனைத்துக் கருவிகள், வளங்களும் உள்ளன. அமைதியைக் கட்டமைத்தல், நம் திட்டங்களின் வழியாகச் சமூகங்களைப் பிணைத்தல் ஆகியவற்றில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுகள் நம்மிடம் உள்ளன. இதற்குமுன், ரோட்டரி தன்னார்வலர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது, மக்கள், சமூகங்களுக்குத் திறன்களை வழங்கியுள்ளது. அமைதிச் செயல்முறையை மீண்டும் வலியுறுத்தி, அமைதியில் முதலீடு செய்யவேண்டிய நேரம் வந்துவிட்டது.

உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு குழந்தைகள், 6ல் 1 குழந்தை மிகுந்த ஏழைமையில் வாழ்கிறார். ஒவ்வோர் ஆண்டும், ஊட்டச்சத்து பற்றாக்குறையால் 5 வயதுக்கு உட்பட்ட 6 மில்லியன் குழந்தைகள் இறக்கிறார்கள், இன்னும் பலர் தவறாகப் பயன் படுத்தப்படுகிறார்கள்.

அதனால், நாம் முரணை ஒரு வாழ்க்கை வழியாக ஏற்றுக்கொள்ள மறுப்போம், அமைதியைச் சிந்திப் போம், சொல்வோம், செய்வோம். நம் செயல்பாடுகள் அனைத்தின் இதயத்தில் அமைதி முயற்சிகளை வைக்க வேண்டும். ஒவ்வொரு செயலும் அமைதியை உள்ளடக்குவதற்காக ஆராயப்படவேண்டும், மறு வடிவமைப்பு செய்யப்படவேண்டும். நம் நோக்கும் போக்கும் அமைதிக்கு நம்பிக்கை தரவேண்டும். மனித குலத்துக்கான சேவையில் இரண்டாவது நூற்றாண்டில் உள்ள நாம், முன்பைவிட இன்னும் வெற்றியடையவேண்டும், தாக்கத்தை உண்டாக்கவேண்டும்.

Dr மகேஷ் கோட்பாகி
RI இயக்குனர், 2021–23

களின் செய்திகள்

உறுப்பினர் பங்கேற்பு சங்கங்களை வலுப்படுத்துகிறது

நம் நாடு முழுவதும் உள்ள சங்கங்களும் மாவட்டங்களும் நோய்ப்பரவலுக்கு முந்தைய செயல்பாட்டு நிலைகளுக்கு மெல்லத் திரும்புவதைக் காண்பது மகிழ்ச்சியளிக்கிறது. நான் கவனிக்கிற இன்னொரு விஷயம், சங்கங்கள் தேவையான இடத்தில் பொருத்தமான தொழில்நுட்பத்தை விரைவாகக் கற்றுக்கொண்டு பின்பற்றுகின்றன. நாம் தொடர்ந்து கவனமாக இருக்கவேண்டும், ஆனால் அதே நேரம், வாழ்க்கை தொடரவேண்டும்.

என்னைச் சுற்றி இதைப் பார்க்கும்போது, என் எண்ணங்கள் இருபது ஆண்டுகள் பின்னோக்கிச் செல்கின்றன. அப்போது நான் புதிய ரோட்டரியனாக இருந்தேன், என் சங்கம் ஒரு பள்ளிக்குப் புதிய இருக்கைகளை நன்கொடையாக அளித்தது, ஓர் இளம் பெண் அந்த இருக்கையிலிருந்து இறங்க மறுத்தார். “என்னுடைய வாழ்க்கையில் முதன் முறையாக நான் தரையில் உட்காராமல் ஓர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிறேன். இந்த மகிழ்ச்சியை இன்னும் சிறிது நேரம் அனுபவிக்க விரும்புகிறேன்” என்று அந்த இளம் பெண் சொன்னது என் மனத்தில் அழுத்தமாகப் பதிந்து விட்டது. அது அவருக்கு மட்டுமில்லை, எனக்கும் வாழ்க்கையை மாற்றிய ஒரு நிகழ்ச்சி. வாழ்க்கையைப்பற்றிய என் பார்வை அந்தக் கணத்தில் மாறியது. ரோட்டரியுடனான என் பிணைப்பு இன்னும் வலுவாக வளர்ந்தது.

நம்முடைய சங்க உறுப்பினர்களைச் செயல்பாடுகளில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காகதான் நான் இந்த நிகழ்ச்சியை நினைவு கூர்கிறேன். ஏனெனில், எந்த அனுபவம் வாழ்க்கையை மாற்றுவதாக அமையும் என்று யாருக்கும் தெரியாது. மக்கள் பல காரணங்களுக்காக ரோட்டரியில் சேர்கிறார்கள்; சிலர் இந்த வாய்ப்புகளை உணர்ந்து தேடலாம், மற்றவர்கள் அது தங்களுக்கு வழங்கப்படுவதற்காகக் காத்திருக்கலாம். நம் பகுதிகளில் உள்ள சங்கங்களில் எல்லா உறுப்பினர்களும் அவர்கள் விரும்பும் ஏதாவது ஒரு செயல்பாட்டில் ஈடுபடுவதை அவர்களுடைய தலைவர்கள் உறுதிசெய்யவேண்டும்.

அடுத்த தலை முறையினர் தங்களுடைய சமூகத்தில் நேரடியாகப் பணியாற்றும் அனுபவத்தைப் பெற விரும்புகிறார்கள், தங்கள் சங்கங்களின் வழியாக ஒரு மாற்றத்தை உண்டாக்க விரும்புகிறார்கள், அவர்கள் ரோட்டரியில் சேர்வதற்கு அல்லது தொடர்வதற்கு அது ஒரு முக்கியக் காரணமாக இருக்கும்.

ஒருவர் நன்றாக உணர்ந்தால்தான் நல்லதைச் செய்ய இயலும். நம் உறுப்பினர்கள் நம் அமைப்பில் தாங்கள் உறுப்பினர்களாக இருப்பதை எண்ணி நன்றாக உணரும்படி செய்கிற செயல்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்வதற்குப் பொருந்தும் வாய்ப்புகளை நாம் கிடைக்கச்செய்வோம்.

மக்கள் உறுப்பினர்களாகச் சேர்கிறார்கள். அவர்களுடைய அனுபவங்கள்தான் அவர்களை ரோட்டரியன்களாக ஆக்குகின்றன!

A S வெங்கடேஷ்
RI இயக்குனர், 2021–23

Board of Trustees

Shekhar Mehta RID 3291
RI President

Dr Mahesh Kotbagi RID 3131
RI Director &
Chairman, Rotary News Trust

AS Venkatesh RID 3232
RI Director

Gulam A Vahanvaty RID 3141
TRF Trustee

Rajendra K Saboo RID 3080
Kalyan Banerjee RID 3060
Panduranga Setty RID 3190
Sushil Gupta RID 3011
Ashok Mahajan RID 3141
P T Prabhakar RID 3232
Dr Manoj D Desai RID 3060
C Basker RID 3000
Dr Bharat Pandya RID 3141
Kamal Sanghvi RID 3250

Executive Committee Members (2021–22)

Gaurish Dhond RID 3170
Chairman
Governors Council

Anup Mittal RID 3011
Secretary
Governors Council

Ramesh Meher RID 3030
Secretary
Executive Committee

V Thirupathi Naidu RID 3160
Treasurer
Executive Committee

Jacintha Dharma RID 3212
Member
Advisory Committee

Editor
Rasheeda Bhagat

Senior Assistant Editor
Jaishree Padmanabhan

Rotary News Trust
3rd Floor, Dugar Towers,
34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India.
Phone: 044 42145666
rotarynews@rosaonline.org
www.rotarynewsonline.org

Now share articles from
rotarynewsonline.org
on WhatsApp.

சவாலைச் சமாளிப்போம்



24 அக்டோபர் உலக இளம்பிள்ளைவாத நாள். இந்த நாளில் நாம் நம்பிக்கையுடன் செயல்படுவோம், தொடர்ந்து முன்னேறுவோம், ஆஃப்கானிஸ்தான், பாகிஸ்தானில் வைல்ட் போலியோ வைரஸின் இப்போதைய குறைந்த பரவுதல் விகிதங்களால், பரவுதலைத் தடுக்கும் தனித்துவமான வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. நாம் ஒரு புதிய வியூகத்தையும் வகுத்துள்ளோம், இளம்பிள்ளைவாதத்தை அகற்றும் நம் முயற்சிகளை வலுவாக்கும் ஒரு தடுப்பு மருந்தும் நம்மிடம் உள்ளது.

வைல்ட் போலியோவைரஸை அகற்றவும், சுற்றி வருகிற தடுப்பு மருந்தால் உண்டாகும் போலியோவைரஸ் (cVDPV) தீவிர நோய்ப் பரவல்களைத் தடுக்கவும், பன்னாட்டு இளம்பிள்ளைவாதத்தை அகற்றல் முன்னெடுப்பின் புதிய வியூகம் பல முக்கியப் பகுதிகளைச் சுற்றி மையம் கொள்கிறது: நோய் ஒழிக்க இயலாத அளவு கடினமாதல் (endemic) மற்றும் நோயின் தீவிரப் பரவல் (outbreak) நாடுகளில் இன்னும் கூடுதல் விரைவை, பொறுப்புணர்வை உண்டாக்குவதற்கான அரசியல் வாதிடுதல், கூடுதல் ஆபத்து கொண்ட சமூகங்களுடன் மேம்பட்ட உரையாடல், மேம்பட்ட செயல்பாடுகள், இளம்பிள்ளைவாதக் கண்காணிப்பு மற்றும் அகன்ற நலத் திட்டங்களில் இளம் பிள்ளைவாதத் தடுப்பு மருந்து வழங்கலைச் சேர்த்தல்.

நம்முடைய புதிய வியூகத்துடன், ரோட்டரியும் அதன் கூட்டாளர்களும் 2ம் வகை cVDPV தீவிரமாகப் பரவுவதைத் தடுக்க உதவுவதற்காகப் புதுமையான வாய்வழி இளம்பிள்ளைவாதத் தடுப்பு மருந்து (nOPV2) என்ற புதிய கருவியைப் பயன்படுத்துகிறார்கள். இந்தப் புதிய தடுப்பு மருந்து பல நாடுகளில் செயலுக்கு வந்துள்ளது, இளம் பிள்ளைவாதத்தை நிரந்தரமாக முடித்துவைக்கிற நம்முடைய தேடலில் இது நம்பிக்கை அளிக்கும் முன்னேற்றமாகும். ஆனால், இன்னும் நிறைய வேலை மீதமுள்ளது. குறிப்பாக, ஆஃப்கானிஸ்தானில் சமீபத்தில் நடந்துள்ள நிகழ்ச்சிகளின் பின்னணியில், நாம் தொடர்ந்து நம்முடைய இலக்குகளுக்கு நம்மை வலுவாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அரசியலற்ற அமைப்பாகிய ரோட்டரி, எங்கும் குழந்தைகளுடைய நலனைப் பாதுகாக்கத் தேவையானவற்றைத் தொடர்ந்து செய்யும்.

இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து $50 மில்லியன் திரட்டுவோம். நினைவிருக்கட்டும்: நீங்கள் அல்லது உங்கள் ரோட்டரி அல்லது ரோட்டராக்ட் சங்கம் வழங்கும் எந்தப் பங்களிப்புக்கும் பில் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை 2க்கு 1 என்ற விகிதத்தில் இணைப் பங்களிப்பை வழங்குகிறது.

ஜான் F ஜெர்ம்
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

உதவி கரம் நீட்டும் TRF

நோய்ப்பரவலின் மிகக் கடினமான நாட்களின்போது, நேரடிச் சந்திப்புகள் சாத்தியமாகவில்லை, தொழில்நுட்பம் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்தது, மெய்நிகர் முறைதான் என்றாலும், தொடர்ந்து இணைப்பில் இருப்பதற்கான மதிப்பு மிக்க வளமாக இருந்தது. ஜூம் அல்லது பிற நல்ல தளங்கள் இந்தக் கடுமையான நேரத்திலும் நாம் தொடர்பில் இருக்க உதவின. அதே நேரம், தொழில் நிறுவனங்கள் மதிப்பிட இயலாத அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன, நேரடி மற்றும் சமூகத் தொடர்பு இன்றிக் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அத்துடன், மெய்நிகர் கற்றலானது நம்முடைய மிகப் பெரிய வருவாய்ப் பிரிவினையை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. ஸ்மார்ட் தொலைபேசிகளை வாங்கும் அளவு வசதி இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகள் பள்ளிப் படிப்பைப் பெற இயலவில்லை. மேலும் மேலும் மக்கள் தடுப்பு மருந்துகளைப் பெறுவதால், நோய்ப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும், இயல்பு நிலை விரைவில் மீண்டும் திரும்பும் என்று நாம் நம்புகிறோம், வேண்டுகிறோம்.

இந்தக் கடினமான நேரத்தில், ரோட்டரியன்கள் நலிந்த மக்களை அணுகி உதவுவதில் சிறப்பாகச் செயல்பட்டார்கள். உண்மையில், அவர்கள் தங்கள் முயற்சிகளை இன்னும் தீவிரமாக்கினார்கள், 20–21ல் $143.55 மில்லியன் மொத்த நிதியைக் கொண்ட 2,066 பன்னாட்டு நல்கைகள் அங்கீகரிக்கப்பட்டுச் சாதனை படைக்கப்பட்டது.

ஒவ்வொரு கவனப் பகுதியிலும் பன்னாட்டு நல்கைகளின் எண்ணிக்கை, மதிப்பு பின்வருமாறு: நோய்களுக்கு எதிராகப் போரிடுதல் – 1,020 ($74.75 மில்லியன்), தூய நீர், சுகாதாரம், தூய்மையை வழங்குதல் – 341 ($25.71மில்லியன்), உள்ளூர்ப் பொருளாதாரங்களை வளர்த்தல் – 264 ($16.95 மில்லியன்), கல்வியை ஆதரித்தல் –184 ($12.12 மில்லியன்), தாய்மார்கள், குழந்தைகளைக் காப்பாற்றுதல் – 129 ($8.38 மில்லியன்) மற்றும் அமைதியை முன்னிறுத்துதல் – 128 ($5.64 மில்லியன்).

உங்களுக்கு என்னுடைய முன்கூட்டிய இனிய தீபாவளி வாழ்த்துகள். இந்த மகிழ்ச்சியான நேரத்தில் உங்கள் இதயங்கள், பணப்பைகளைத் திறக்கவேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அறக்கட்டளைக்கு நீங்கள் வழங்கும் பரிசு, உதவிக் கரம் தேவைப்படுகிறவர்களுக்கு நலன், கல்வி மற்றும் நல்ல ஆரோக்கிய ஒளியைப் பரப்பும்.

குலாம் வாஹன்வதி
TRF அறங்காவலர்

Rotary at a glance

Rotary clubs	:	36,866
Rotaract clubs	:	10,530
Interact clubs	:	16,496
RCCs	:	11,820
Rotary members	:	1,191,046
Rotaract members	:	223,785
Interact members	:	377, 039

As on September 20, 2021

Membership Summary

As on September 1, 2021

RI District	Rotary Clubs	No of Rotarians	Women Rotarians (%)	Rotaract Clubs	Interact Clubs	RCC
2981	130	6,005	7.68	34	51	227
2982	76	3,524	7.18	44	97	69
3000	135	5,259	9.34	89	259	213
3011	122	4,491	27.68	70	117	36
3012	127	3,990	26.44	60	76	61
3020	76	4,552	6.81	29	166	350
3030	95	4,982	14.85	115	237	361
3040	102	2,628	14.61	42	78	196
3053	66	2,725	16.15	31	48	117
3054	183	7,400	20.24	101	173	563
3060	111	5,078	14.77	62	69	147
3070	120	3,223	15.39	36	23	59
3080	96	3,999	13.03	125	156	113
3090	89	2,272	4.31	34	20	123
3100	104	2,304	10.24	10	19	146
3110	134	3,607	10.31	12	17	106
3120	88	3,547	16.49	59	30	55
3131	139	5,404	23.69	103	224	131
3132	89	3,475	10.53	30	122	165
3141	116	6,230	26.84	132	175	101
3142	102	3,586	20.80	76	137	80
3150	113	4,100	13.29	74	135	118
3160	76	2,442	6.39	14	20	82
3170	137	6,027	14.29	82	237	171
3181	86	3,381	8.75	32	194	115
3182	84	3,333	9.60	42	124	104
3190	157	6,709	18.56	151	195	69
3201	151	5,854	8.93	96	87	57
3203	87	4,551	8.17	71	232	36
3204	61	1,954	6.09	16	22	13
3211	145	4,741	7.72	6	24	133
3212	141	5,148	11.77	74	204	153
3231	96	3,579	7.74	28	81	419
3232	147	7,372	16.74	106	209	99
3240	101	3,519	15.83	57	402	216
3250	103	3,863	20.17	61	73	185
3261	86	3,058	17.89	14	23	44
3262	118	3,967	13.76	65	48	86
3291	163	3,966	22.89	130	95	642
India Total	**4,352**	**165,845**		**2,413**	**4,699**	**6,161**
3220	76	2,292	16.62	86	131	75
3271	127	2,026	16.44	88	134	24
3272	160	1,922	17.22	45	18	47
3281	302	8,404	19.12	261	144	208
3282	173	3,939	11.75	196	47	47
3292	152	5,990	16.79	164	126	127
S Asia Total	**5,342**	**190,418**		**3,253**	**5,299**	**6,689**

Source: RI South Asia Office

குழந்தைகளின் இதயம் காக்கும் "சஞ்சீவனி"

ரஷீதா பகத்

கடவுள் நமக்குக் கொடுத்த செல்வத்தின் அறங்காவலர்கள் நாம் என்று நான் நம்புகிறேன். நாம் பிறப்பதற்கு முன்பு அது வேறு ஒருவருக்குச் சொந்தமானது. நாம் இறந்த பிறகு அது வேறு ஒருவருக்குச் செல்லும் என்று ஸ்ரீ சத்யசாய் மருத்துவ மற்றும் கல்வி அறக்கட்டளையின் மூன்று அறங்காவலர்களில் ஒருவரான விவேக் கௌர் தெரிவித்தார். இந்த அறக்கட்டளை இந்தியாவில் மூன்று இடங்களில் குழந்தைகளின் இதய சிகிச்சைக்காக மையங்களை அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்கள் சத்தீஸ்கரில் ராய்ப்பூரிலும், ஹரியாணாவில், பரீதாபாத் அருகே உள்ள பல்வல் என்ற இடத்திலும் நவி மும்பையிலும் செயல்பட்டு வருகின்றன.

கௌர், RID 3011க்கு உட்பட்ட குர்கான் ஹார்மனி ஐபெரிஸ் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர். சத்ய சாய்பாபா, தனது பக்தரான C ஸ்ரீனிவாஸ் என்பவரிடம், குழந்தைகளுக்கு இலவசமாக இதய சிகிச்சை அளிக்கும் ஐந்து மருத்துவமனைகளை நிறுவுமாறு கேட்டுக்கொண்டார். இந்த கனவை நனவாக்க சாய்பாபா பக்தர்களான நானும் சுனில் காவஸ்கரும் ஸ்ரீனிவாஸுடன் சேர்ந்து கொண்டோம். நாங்கள் ஏற்கெனவே மூன்று மையங்களை அமைத்துள்ளோம். மேலும் இரண்டு மையங்களை அமைக்கவிருக்கிறோம் என்று கௌர் மேலும் கூறினார். அவர்கள் அனைவரும் இந்த மருத்துவமனைகளை அமைப்பதில் முக்கியப் பங்களித்துள்ளனர். பிறவியிலேயே இதய குறைபாடு களுடன் பிறக்கும் குழந்தைகளுக்கு இங்கு முற்றிலும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது.

பெருநன்கொடையாளர்கள், ரோட்டரி சங்கங்களின் சர்வதேச மானிய உதவி, கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதியுதவி என மொத்தமாக மூன்று மருத்துவமனைகளிலும் சுமார் ரூ.150 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளின் அறுவைச்சிகிச்சைக்காக மட்டும் ரோட்டரி மூலம் சர்வதேச மானியம் உள்பட 2.5 மில்லியன் டாலர் கிடைத்துள்ளதாக அவர் மதிப்பிடுகிறார்.

ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் 3 லட்சம் குழந்தைகள் பிறவி இதயக் குறைபாடுகளுடன் பிறக்கிறார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த குழந்தைகளில் நான்கில் ஒருவர் தங்கள் முதல் பிறந்தநாளைக் காண்பதே இல்லை.

பிறவி இதயக்குறைபாடுகள் உள்ள ஒரு குழந்தை இந்த மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக இரண்டு

வாரங்கள் தங்கலாம். அவளின் பெற்றோர் கையில் ஒரு நயா பைசா இல்லாமல் உள்ளே நுழையலாம். தங்கள் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்னை என்ன என்பதைக் கண்டறிந்து சிகிச்சை பெறலாம் அல்லது அறுவைச்சிகிச்சை செய்து கொள்ளலாம். எந்தவித பதற்றமும் இல்லாமல், பணத்தைப் பற்றி கவலைப்படாமல் மருத்துவமனையை விட்டு வெளியேறலாம். பெரும்பாலும் குழந்தைகளை குணப்படுத்த பல்வேறு நடைமுறைகள் தேவைப்படுகின்றன. மூன்று அறங்காவலர்கள் மட்டுமே இருப்பதால் விரைவாக முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

எங்களிடம் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மனநிறைவு அளிக்கும் ஊதியமும் தங்குமிடமும் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு கிடைக்கும் வெகுமதி, ஏழை நோயாளிகளை மிகவும் ஏழை என்பதால் திருப்பியனுப்பாதது தான். இதைத்தான் தனியார் மருத்துவ மனைகள் செய்கின்றன. அறுவைச் சிகிச்சை செய்யாவிட்டால் அந்தக் குழந்தை இறந்துவிடும் என்று தெரிந்திருந்தும், பெற்றோர்களால் பெருந்தொகையை கொடுக்க முடியாது என்று தெரிந்திருந்தும் திருப்பியனுப்புவது அவர்களை வேதனைப்படுத்துவதாகும்.

இந்த நிறுவனம் 9 ஆண்டுகளை கடந்துவிட்டது. ஏழைகளுக்கான அரசு மருத்துவமனைகள் கூட எங்கள் மருத்துவமனையை பரிந்துரைக்கிறார்கள். இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் குழந்தைகள் சிகிச்சை பெற இங்கு வருகிறார்கள். எங்களின் காத்திருப்பு பட்டியலில் 4,000 பேர் உள்ளனர்.

மேலும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாளம், வங்கதேசம், இலங்கை, ஃபிஜி,

தன்ஸானியாவைச் சேர்ந்த 4 வயது இவானா.

உஸ்பெகிஸ்தான், நைஜீரியா, யேமன், எத்தியோப்பியா, இராக் உள்ளிட்ட 14 வளரும் நாடுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கும் நாங்கள் சிகிச்சை அளித்துள்ளோம். ஃபிஜி மற்றும் நைஜீரியாவில் சர்வதேச அளவில் குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சை முகாம்களை நடத்தியுள்ளோம்.

2012ம் ஆண்டு மருத்துவமனை தொடங்கப் பட்டதிலிருந்து இது வரை 1,35,000 குழந்தைகளுக்கு வெளிநோயாளிகளாக சிகிச்சை அளித்துள்ளோம். மேலும் 16,000த்துக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு இதய அறுவைச்சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம். இதற்கு தனியார் மருத்துவ மனைகளில் ரூ.2 லட்சம் முதல் ரூ.7 லட்சம் வரை செலவாகும். ஆனால், இங்கே ரூ.1.5 லட்சம் மட்டுமே செலவு.

ஸ்ரீ சத்ய சாய் மருத்துவமனை அறங்காவலர் விவேக் கௌர் ஒரு குழந்தையுடன்.

குழந்தைகள் இதய அறுவைச்சிகிச்சைக்கு பணம் வாங்குவதில்லை என்ற எங்களின் குறிக்கோள் கண்டு RI இயக்குநர் மகேஷ் கோட்பகி வெகுவாக ஈர்க்கப்பட்டார். அவர் RI தலைவர் சேகர் மேத்தா, PRID கமல் சங்வி, மாநிலங்களவை உறுப்பினர் விவேக் தன்கா ஆகியோருடன் ஆகஸ்ட் மாதம் ராய்ப்பூர் மருத்துவ மனையைப் பார்வை யிட்டார். RID 3261க்கு உட்பட்ட ராய்ப்பூர் ராயல் ரோட்டரி சங்கம், சர்வதேச நிதியுதவி திட்டத்தின் மூலம் ரூ.1 கோடி நன்கொடை அளித்த ஆக்சிஜன் ஆலையை திறப்பதற்காக RI தலைவர் சேகர் மேத்தா ஆகஸ்ட் மாதம் வந்திருந்தார்.

புணேயில் சொந்த மருத்துவமனையை நிர்வகித்து வரும் மருத்துவரான கோடப்கி கூறுகையில், சாதாரணமாக குழந்தைகளுக்கு பிறவியில் ஏற்படும் இதயக் குறைபாடுகளுக்கு சிகிச்சை அளிப்பதானால் அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய பரிசோதனைகள், மருந்து மாத்திரை, தங்குவதற்கான செலவு, அறுவைச்சிகிச்சை க்கு பின் உள்ள செலவு என குறைந்தது ரூ.5 லட்சம் செலவாகும். ஆனால், இங்கு மொத்த செலவே ரூ.1.5 லட்சம் தான் என்றார்.

பொதுவாக சஞ்சீவனி மருத்துவமனைகளில் ஒரு மாதத்தில் 350 முதல் 500 அறுவைச்சிகிச்சைகள் வரை செய்யப்படுகின்றன. பிறந்த குழந்தைக்கு தீவிர சிகிச்சை பிரிவில் இதய அறுவைச்சிகிச்சை என்பது சவால்கள் நிறைந்ததாகும். சில குழந்தைகள் பிறந்து சில நாட்களே அல்லது சில வாரங்களே ஆனவை. என்னால் மூச்சுவிட முடியவில்லை என்று குழந்தைகளால் வாய்திறந்து சொல்லமுடியாத நிலை.

தீவிர சிகிச்சை பிரிவில் குழந்தைகளுக்கான அறுவைச்சிகிச்சை பிரிவில் செவிலியர் பணி என்பது எளிதானதல்ல. அது முழுநேரப் பணி. குழந்தைகளுக்கு நாப்கினை மாற்றுவது, பஞ்சில் நனைத்து குழந்தைகளுக்கு உணவளிப்பதுவரை தனி கவனம் செலுத்த வேண்டிய வேலையாகும் என்றார் கோட்பகி.

சில சிக்கலான அறுவைச்சிகிச்சைகளும் இங்கு செய்யப்படுகின்றன. பிறந்து ஒருவாரமே ஆன குழந்தைகளுக்கும் நாங்கள் அறுவைச்சிகிச்சை நடத் தியிருக்கிறோம். அவர்களில் பலருக்கு பலமுறை அறுவைச்சிகிச்சைகள் செய்ய வேண்டியிருக்கும். நாங்கள் அதைச் செய்யாவிட்டால் வேறு யாரும் செய்யமாட்டார்கள். முடிவில் அந்த குழந்தை இறந்துவிடும் என்பது எங்களுக்குத் தெரியும் என்றார் கௌர்.

ஜார்க்கண்ட் மாநிலம் பலமு என்ற இடத்தை சேர்ந்த ஆலியா பாத்திமா என்ற குழந்தைக்கு மூன்று வயதுக்கு சற்று அதிகமாக இருக்கும். அவள் பிறந்து ஒரு மாதமே ஆனபோது அவளுக்கு கண்ணில் பிரச்னை இருப்பது தெரியவந்தது. அவளுக்கு மருத்துவப் பரிசோதனை நடத்திய போது இதயத் தில் கோளாறு இருப்பது தெரியவந்தது. இதய அறுவைச்சிகிச்சை செய்ய வேண்டுமானால் ரூ.6.5 லட்சம் செலவாகும் என்று கூறியுள்ளனர். அவள் அந்த குடும்பத்தின் நான்காவது குழந்தை. அவளது தந்தை ஜாவித் அகமது சிறியதான காலணி கடை வைத்திருக்கிறார். அறுவைச்சிகிச்சைக்குத் தேவையான பணம் அவர்களிடம் இல்லை என்றார் ராய்ப்பூர் மையத்தின் அறக்கட்டளை அதிகாரியான ரவிகுமார் ஸ்ரீபாத. ஆலியாவுக்கு ஆகஸ்ட் மாதம் 10ம் தேதி அறுவைச்சிகிச்சை நடந்தது. அடுத்த 10 நாட்களில் வீட்டுக்குச் செல்ல தயாரானாள்.

தஷிதா ஷர்மிதாவின் கதை மனதை சஞ்சலப் படுத்தும். அவரது தாயார் ஜோதி கர்ப்பிணியாக இருந்த போது, சோனோகிராஃப் சோதனை நடத்தப்

RI இயக்குனர் மகேஷ் கோட்பாகி ஒரு குழந்தையுடன்.

பட்டது. அதில் சிசுவின் இதயத்தில் பிரச்னை இருப்பதைக் காட்டியது. குழந்தை 3 கிலோ எடையுடன் பிறந்தது. ஆனால், பிறந்து மூன்று மாதங்கள் ஆனபின் அவளுக்கு கடுமையான சளி, இருமல் தொல்லை இருந்தது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் எக்கோ கார்டியோகிராம் பரிசோதனை நடத்தியபோது அவரது இதயத்தில் ஓட்டை இருப்பது தெரியவந்தது. அந்த குடும்பத்தினர் ஹரியாணா மாநிலம், ஹிஸார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தந்தை ரமேஷ் சர்மா, மும்பையில் இயந்திரவியல் பொறியாளராகப் பணியாற்றி வந்தார். அந்த குழந்தைக்கு உடனடியாக அறுவைச்சிகிச்சை செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதை யடுத்து அவர்கள் மும்பையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்குச் சென்றபோது ரூ.10 லட்சம் முதல் ரூ.12 லட்சம் வரை செலவாகும் என்றும் ஒரு கணிசமான தொகையை முன்பணமாகச் செலுத்த வேண்டும் என்றும் கூறினர். பெங்களூரில் உள்ள ஒரு மருத்துவமனையில் விசாரித்தபோது மிகவும் சிக்கலான அறுவைச்சிகிச்சை ரூ.7 லட்சம் செலவாகும் என்று தெரிவித்துள்ளனர்.

இந்த சமயத்தில் பெற்றோர்களுக்கு ராய்ப்பூரில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனை பற்றி வாட்ஸ் ஆப் மூலம் ஒரு செய்தி வந்துள்ளது. அவர்கள் குழந்தையை இங்கு அழைத்து வந்தனர். அவர்களிடம் சிக்கலான அறுவைச் சிகிச்சை என்றாலும் குழந்தையை குணப்படுத்த முடிந்தவரை சிகிச்சை அளிக்கிறோம் என்று மருத்துவக்குழுவினர் உறுதியளித்தனர் என்றார் ஸ்ரீபாத.

2015ம் ஆண்டு நவம்பர் மாதம் அந்த குழந்தைக்கு வெற்றிகரமாக அறுவைச்சிகிச்சை நடைபெற்றது. சிகிச்சைக்குப் பிந்தைய காலத்தில் அக்குழந்தை அடிக்கடி மருத்துவ மனைக்கு வரவேண்டியிருந்தது. மேலும் அக்குழந்தைக்கு மூச்சுக் குழாய் அழற்சிக்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டது. இறுதியில் செயற்கை சுவாசக் கருவியிலிருந்து அவள் விடுவிக்கப்பட்டாள். பிப்ரவரி மாதம் 8ம் தேதி மருத்து வமனையிலிருந்து வீடு திரும்பினார். அவளது பிறந்தநாள் சத்ய சாய் மருத்துவமனையிலேயே கொண்டாடப்பட்டது. அப்போது அவளது தந்தை, எங்களுக்கு உண்மையில் வீட்டுக்குச் செல்ல மனமில்லை. இங்கு நீங்கள் காட்டிய அன்பும் ஆதரவும் மறக்கமுடியாதது.

இராக்கிலிருந்து வந்து சிகிச்சை பெறும் ஒரு குழந்தை.

புதிய இதயம்

அறுவைச் சிகிச்சைகள் முடிந்தவுடன், தனிநபர்களின் உடல்நிலையைப் பொருத்து ஒரு மாதம், 6 மாதங்கள் அல்லது ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்கள் கழித்து மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இங்கு இதய அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட மூன்று பேரில் இருவர் மருத்துவமனையிலேயே வேலை கிடைத்து பணி செய்து வருகின்றனர். 21 வயதான இளைஞர் ஒருவர் ஆய்வக தொழில்நுட்ப வல்லுநராக வேலை செய்து வருகிறார் என்றார் விவேக் கௌள். ஒரு குழந்தை இங்கு சிகிச்சை பெற்று நலமுடன் வீடு திரும்பிய பின் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் வரை வருடத்துக்கு ஒரு முறை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள்? பள்ளிக்குச் செல் கிறார்களா? என்பது உள்ளிட்ட பல கேள்விகளைக் கேட்டு பதில் தெரிந்து கொள்வோம். குழந்தைகள் 100 சதவீத உடல்நலத்துடன் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம் என்றார் அவர்.

அவர் சுருக்கமாக கூறினார்: எனது இதயத்துக்கு 60 வயதாகிறது. மற்றும் நான் 60 ஆண்டுகளாக சாப்பிட்ட நெய், எண்ணெய் மற்றும் சாக்லேட்டுகளால் நிரம்பியுள்ளது. ஆனால், 3 அல்லது 6 மாத குழந்தையின் இதயம் தூய்மையானது மற்றும் சுத்தமானது. பிறவிக் குறைபாடுகள் காரணமாகவே சிக்கல் உள்ளது. அந்த குறைபாடு சரி செய்யப்படும்போது அந்த இதயம் புதிய இதயம் போல் செயல்படத் தொடங்குகிறது. எனவே ஒரு வாரத்துக்குள் குழந்தை வார்டுகளை சுற்றி ஓடுகிறது. கால்பந்து விளையாடுகிறது. தாயால் குழந்தையை கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு குழந்தை முதன்முறையாக புத்துணர்ச்சியையும் ஆற்றலையும் பெறுகிறது.

124 குழந்தைகளுக்கான ரோட்டரி பரிசு ரூ.2 கோடி

ராய்ப்பூரில் உள்ள சஞ்சீவனி மருத்துவ மனையை பார்வையிட்ட RID மகேஷ் கோட்பாகி மற்றும் RI தலைவர் சேகர் மேத்தாவும் மருத்துவமனையின் செயல்பாடுகளை கேட்டு மிகவும் பூரித்துப்போனார்கள். தாமாகவே ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதாவது எங்கள் தலைவர் சேகர் மேத்தாவுக்கு அக்டோபர் மாதம் 62வது பிறந்தநாள் வருகிறது. அதைக் கொண்டாடும் விதமாக 62 அறுவைச்சிகிச்சை களுக்கான செலவை ஏற்கிறேன் என்றார். இதைக் கேட்டு நெகிழ்ந்து போன சேகர் மேத்தா, நான் மேலும் 62 அறுவைச்சிகிச்சைகளுக்கான செலவை ஏற்றுக்கொள்கிறேன் என்றார்.

ஒவ்வொரு அறுவைச் சிகிச்சைக் கும் சராசரியாக ரூ.1.5 லட்சம் என்று கணக்கிட்டால் அது ரோட்டரியின் ரூ.2 கோடி திட்டமாகும். மேலும் ரோட்டரி நியூஸ் மூலம் தனிப்பட்ட முறையில் ரோட்டேரியன்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கான செலவை ஏற்குமாறு வேண்டுகோள் விடுக்கிறேன். ஏனெனில் இது உண்மையில் மனதைக் கவரும் சேவைத் திட்டமாகும். சர்வதேச மானிய உதவியும் உள்ளது. ஆனால், அதை நான் அதிகம் நம்பியிருக்கவில்லை. ஏனெனில் அது பிரபலமானது மற்றும் அதற்கு தேவையும் அதிகம் உள்ளது. கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு நிதிக்கு ஏற்பாடு செய்யலாம் என்றார் சேகர் மேத்தா. என் நண்பர்களிடம் சில குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற உங்கள் உதவி தேவைப்படுகிறது. உங்களால் உதவ முடியுமா? ரூ.1.5 லட்சம் செலவாகும். வரிச் சலுகையும் உண்டு என்று வேண்டுகோள் விடுத்தேன். இரண்டே நாளில் ரோட்டரி மற்றும் வெளியிடங்களிலிருந்து 20 பேர் அதற்கு முன்வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வார்டுகளை சுற்றிப் பார்த்த போது ஒரு கென்ய தாய் மற்றும் குழந்தையை சந்தித்ததாக கோட்பாகி தெரிவித்தார். கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் குழந்தைகளுக்கான இலவச இதய அறுவைச்சிகிச்சைக்காக ஒருவர் 8 முதல் 10 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டியுள்ளது. யாரோ ஒருவர் கூறிய தகவலின் அடிப்படையில் இந்தியாவுக்கு வந்த ஒரு கென்ய பெண், தன் குழந்தைக்கு இங்கு இலவசமாக இதய அறுவைச்சிகிச்சை நடத்தப்பட்டது கண்டு வியப்பு தெரிவித்தார்.

இந்த மருத்துவமனையின் தனித்துவம் என்னவென்றால் இங்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட குழந்தை களை மருத்துவமனை நிர்வாகம் கவனித்துக் கொள்வதால் பெற்றோர்கள் தாங்களாக முன்வந்து சேவை செய் கின்றனர். திலேஷ்வரின் தாய் சமை யலறையில் ரொட்டி தயாரித்தார். விவசாயம் தெரிந்த தந்தை ஒருவர், தோட்டத்தை கவனித்துக் கொண்டார். சிலர் தரையையும், கழிவறையையும் சுத்தமாக வைத்திருக்க உதவினார்கள். பிளம்பிங் மற்றும் எலெக்டிரிகல் துறையில் திறமைபெற்றவர்கள் பழுது பார்ப்பு பணிகளில் ஈடுபடுகின்றனர். இது ஒரு புதுமையான செயல்பாடாகும். புதிதாக மருத்துவமனைக்கு வரும் பெற்றோர்கள் முன்னர் வந்த பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்துக்கொண்டு அதை பின்பற்றி சேவை செய்கிறார்கள். சமையல், துப்புரவு, காய்கறிகள் பயிரிடுவது என தங்களுக்கு தெரிந்த சேவைகளை செய்கிறார்கள் என்றார் கோட்பாகி.

சஞ்சீவனி மருத்துவமனையுடன் ரோட்டரி நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்று தெரிவித்த கோட்பகி, இது ஒரு அறக்கட்டளை சார்ந்த மருத்துவமனை என்பதால் ரோட்டேரியன்கள் மற்றும் ரோட்டேரியன்கள் அல்லாதவர்கள் இதற்கு எந்த உதவி வேண்டுமானாலும் செய்யலாம். நீங்கள் நன்கொடை அளிக்கலாம், மருத்துவ உபகரணங்கள் வாங்கிக் கொடுக்கலாம். சமீபத்தில் அனைத்து மகளிர் சங்கமான ராய்ப்பூர் குயீன்ஸ் ரோட்டரி சங்கம், ராய்ப்பூர் வளாகத்தில் ஒரு அழகான கலையரங்கத்தை கட்டித்தந்துள்ளதாக கேள்விப்பட்டேன். ஒரு தளத்தில் உருவங்கள் இல்லாத வழிபாட்டுத்தலம் உள்ளது. எந்த மதத்தினரும் இங்கு பிரார்த்தனை செய்யலாம். இந்த கட்டடம் ஒரு அழகான பிரிஸம் வடிவில் அமைந்துள்ள மண்டபம். இங்கு யார் வேண்டுமானாலும் பிரார்த்தனை செய்யலாம். அமைதியான இடம் என்று தெரிவித்தார்.

மருத்துவமனையிற்கு வருகை தந்த RI தலைவர் சேகர் மேத்தா மற்றும் ராஷி.

ராய்பூரில் உள்ள சாய் சஞ்சீவனி மருத்துவமனையில் ஆக்ஸிஜன் ஆலை ஒன்றை RI தலைவர் சேகர் மேத்தா (வலதிலிருந்து) ரஜ்ஜோ சயினி, ராஷி, PDGs ரஞ்சித் சிங் சயினி, விவேக் தன்கா, PRID கமல் சங்வி, RID கோட்பாகி மற்றும் DGE ஷஷாங்க் ரஸ்தோகி ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.

வேறு எங்கும் இது கிடைக்காது என்றார்.

திலேஷ்வர் என்ற குட்டிக் குழந்தையும் இதய அறுவைச் சிகிச்சைப் பின் வீடு திரும்ப தயாராக இருந்தது. குழந்தை குணமடைந்ததற்கான சான்றிதழைப் பெற்றுக் கொண்ட பெற்றோர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர். அவனுடைய தந்தை மேகானந்த் மகி ஒடிஸா மாநிலம், காலஹண்டியில் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்த சிறுவனுக்கு இப்போது 7 வயதாகிறது. பிறந்து 18 நாள்களே ஆனபோது அவனுக்கு காய்ச்சல் வந்ததை அடுத்து பெற்றோர் அருகில் உள்ள மருத்துவரிடம் அழைத்துச் சென்றுள்ளனர். அப்போது மருத்துவர்கள் பெற்றோரிடம் குழந்தையின் இதயத்தின் செயல்பாடுகள் சரியாக இல்லை, எனவே பெரிய மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறியுள்ளனர். சஞ்சீவனி பற்றி உறவினர் ஒருவர் தெரிவிக்க, குழந்தையை இங்கே 2016ம் ஆண்டு அழைத்து வந்தனர். சமீபத்தில் அச்சிறுவனுக்கு அறுவைச்சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. அவன் இப்போது பள்ளி செல்ல தொடங்கிவிட்டான்.

சுனில் காவஸ்கரின் பங்கு என்ன என்று கௌரிடம் கேட்டபோது, சஞ்சீவனி மருத்துவ மனைக்கு நிதி திரட்டுவதில் அவர் மிகப்பெரிய பங்கு வகித்துள்ளார். மேலும் அவரும் ஒரு சாய் பக்தர். அவரை எங்களுக்கு முன்பே தெரியும். அவர், ஒரு பிரபலமான கிரிக்கெட் வீரர் என்பது எங்களுக்கு பலமாக இருந்தது.

மேலும் இரண்டு மருத்துவ மனைகளில் ஒன்றை உத்தரப் பிரதேசத்தின் கிழக்கு பகுதியிலும், மேற்கு வங்கத்தில் நிறுவ திட்டமிட்டுள்ளோம். மக்கள் தொகை அதிகம் இருப்பதால் உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம், பிகார் மற்றும் ஜார்க்கண்டில் உள்ள குழந்தைகள் மீது அதிக கவனம் செலுத்த விரும்புகிறோம். அங்கு மருத்துவமனை அமைக்க எங்களுக்கு நிலம் கிடைத்தால் மருத்துவமனைகள் விரைவில் உருவாகும்.

வடிவமைப்பு:
S கிருஷ்ணப்ரதீஷ்

our commitment to diversity, equity, and inclusion

Rotary

At Rotary, we understand that cultivating a diverse, equitable, and inclusive culture is essential to realising our vision of a world where people unite and take action to create lasting change.

We value diversity and celebrate the contributions of people of all backgrounds, across age, ethnicity, race, colour, disability, learning style, religion, faith, socioeconomic status, culture, marital status, languages spoken, sex, sexual orientation, and gender identity as well as differences in ideas, thoughts, values, and beliefs.

Recognising that individuals from certain groups have historically experienced barriers to membership, participation, and leadership, we commit to advancing equity in all aspects of Rotary, including in our community partnerships, so that each person has the necessary access to resources, opportunities, networks, and support to thrive.

We believe that all people hold visible and invisible qualities that inherently make them unique, and we strive to create an inclusive culture where each person knows they are valued and belong.

In line with our value of integrity, we are committed to being honest and transparent about where we are in our DEI journey as an organisation, and to continuing to learn and do better.

Download a copy of Rotary's commitment to DEI at ***rotary.org/dei.***

Dear Rotary members,

In Rotary, we celebrate diversity, equity, and inclusion. It doesn't matter who you are, who you love, how you worship, whether you have a disability, or what culture or country you (or your family) are from. All that matters is that you want to take action to create lasting change.

Rotary is working to ensure that everyone sees us as a just and welcoming organisation. Diversity has long been one of our core values, and we're proud of the organisation we've built. But there's more we can do to exemplify diversity, equity and inclusion (DEI); to expand our ability to reflect the communities we serve; and to respond to our communities' needs.

Based on input from our DEI Task Force, Rotary International's Board of Directors strengthened the DEI statement we adopted in 2019. The result is a heightened commitment to diversity, equity, and inclusion focused on celebrating everyone's contributions, advancing equity, and creating an inclusive culture where each person knows they are valued.

Diversity, equity, and inclusion are not political issues. Each of us has the right to be treated with dignity and respect, to have our voices be heard, and to access the same opportunities to succeed and lead at Rotary. Our members consistently tell us that being a welcoming organisation is vital to our future and that by being diverse and inclusive is how we'll remain the preeminent place for people of action to connect with one another and make a difference.

We look forward to your continued support as we make Rotary more diverse, equitable and inclusive, ensuring that everyone who engages with Rotary knows they are valued and belong.

Shekhar Mehta
RI President, 2021-22

Jennifer Jones
RI President, 2022-23

5 ways your club can support diversity, equity and inclusion

1. Share our updated statement about Rotary's commitment to DEI with your members via email or at a club meeting.
2. Post the updated statement to your club website and social media accounts, and link to it in your club's email signatures.
3. Use the statement to discuss how your club can be more diverse, equitable, and inclusive for current and future members.
4. Encourage your fellow members to be respectful of one another and speak up when a person's actions don't reflect our ideals and values.
5. Expand your knowledge by taking a DEI course in the Learning Center.

Find more resources at *rotary.org/dei.*

© Rotary

ரோட்டரி மகுடத்தில் ஒரு பட்டை தீட்டப்படாத வைரம் ஆப்பிரிக்கா: RI தலைவர் மேத்தா

ரஷீதா பகத்

RI தலைவர் சேகர் மேத்தா ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் ஏழு ஆப்பிரிக்க நாடுகளுக்குச் (கேமரூன், கானா, நைஜீரியா, எத்தியோப்பியா, கென்யா, உகாண்டா மற்றும் ஐவரி கோஸ்ட்) சென்றார், அந்த நாடுகளின் தலைவர்களைச் சந்தித்தார், அவர்களுடைய உள்ளூர்ச் சமூகங்களுக்கு ரோட்டரி எப்படி உத வலாம் என்பதற்கான பல வழிகளை விவாதித்தார். இதை அவர் ரோட்டரி நியூஸ் பத்திரிக்கையிற்கு வழங்கிய ஒரு பேட்டியில் தெரிவித்தார்.
இந்தப் பேட்டியிலிருந்து சில பகுதிகள்:

எத்தியோப்பியாவின் தலைவர் சாஹ்லே-வர்க் செவ்டே-யுடன் RI தலைவர் சேகர் மேத்தா.

RI தலைவராகிய நீங்கள் 20 நாளில் 7 ஆப்பிரிக்க நாடுகளைப் பார்த்துள்ளீர்கள். ஆப்பிரிக்கக் கண்டத்துக்கு இவ்வளவு நேரத்தையும் முக்கியத்துவத்தையும் நீங்கள் வழங்கியது ஏன்?

உறுப்பினர் எண்ணிக்கையில் வளர்ச்சி, சேவைத் திட்டங்களில் வளர்ச்சி ஆகியவற்றுக்கான மிகப் பெரிய சாத்தியம் எங்கு உள்ளது என்று தெற்கு ஆசியாவை விட்டுவிட்டு யோசித்தால், அது ஆப்பிரிக்காவில்தான் உள்ளது என்று நான் உணர்கிறேன். நான் இதுவரை அங்கு சென்றதில்லை, ஆனால் எப்போதும் இப்படி உணர்ந்துவந்துள்ளேன்.

சேவை என்பது ரோட்டரியின் முதன்மைப் பணியாக ஆன நேரத்திலிருந்து, சேவைக்கான தேவை உள்ள இடங்களில் நம் அமைப்பு நன்கு வெற்றியடைந்துள்ளது. இதுபோன்ற இடங்களில், ரோட்டரி செய்யும் பணியையும் நாம் சேவைத் திட்டங்களின் வழியாகக் காட்சிப்படுத்தலாம். இந்தியாவிலும் தெற்கு ஆசியாவின் மற்ற பகுதிகளிலும் ரோட்டரி அடைந்துள்ள வெற்றிக்கு முதன்மைக் காரணம், நாம் செய்யும் பணியை நம்மால் காட்சிப்படுத்த இயலுகிறது, ரோட்டரியின் வழியாக

அந்தப் பணியில் பங்கேற்க மக்கள் விரும்புகிறார்கள்.

ஆனால், ஏனோ, இது ஆப்பிரிக்காவில் போதுமான அளவு பயன்படுத்தப்படவில்லை. அதனால், நான் ஆப்பிரிக்கா வுக்குச் சென்று பார்க்கத் தீர்மானித்தேன். மேலும், ஆண்டின் பிற்பகுதியில் அங்கு செல்வதைவிட, முற்பகுதியில் செல்ல விரும்பினேன், அதன்மூலம், நம்மால் உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்த இயலுமானால் அதை முன்கூட்டியே செய்யலாம், அவற்றின் தாக்கத்தைப் பெருக்க லாம். அந்த வியூகம் நன்கு பலன் தந்தது என்று நான் நம்புகிறேன்.

இதற்கு ஓர் எடுத்துக்காட்டு அளிப்பீர்களா?

கேமரூனுடைய தலைநகரமான யாவுன்டெ-யில் நடைபெற்ற Zone 22 சந்திப்பில் நாங்கள் கலந்துகொண்டோம், இதில் 54ல் 52 நாடுகள் இடம்பெற்றன. நாங்கள் மிகச் சிறந்த பன்முகத் தன்மையைக் கண்டோம்... சுமார் 400 பேர் நேரடியாகவும், 900 பேர் இணையம் வழியாகவும் இதில் கலந்துகொண்டார்கள். ஆப்பிரிக்காவைச் சேர்ந்த சக ரோட்டரியன்களை நேரில் சந்திப்பது, அவர்களுடன் பேசுவது, ரோட்டரி வழியாக வாழ்க்கைகளை மாற்றுவதற்குச் சேவை புரியும்படி அவர்களை ஊக்குவிப்பது ஆகியவை மிகவும் ஆற்றல் அளிப்பவையாக அமைந்தன. எங்கள் வருகையின்போது, 17 மாவட்ட ஆளுநர்களில் 9 பேரை நாங்கள் சந்தித்தோம். தங்கள் உறுப்பினர் எண்ணிக்கைத் தலைவர்களுடன் வரும்படி நான் அவர்களைக் கோரியிருந்தேன். உங்கள் உறுப்பினர் எண்ணிக்கை இலக்கு என்ன என்று கேட்ட போது, அவர்கள் மொத்தமாக 12,000 உறுப்பினர்களைச் சே ர்ப்ப தாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் மொத்தம் 17 ஆளுநர்கள் உள்ளார்கள், அதன் அடிப்படையில் நான் இந்த எண்களைக் கணக்கிட்டுப்

1. RI *தலைவர் மேத்தா மற்றும் ராஷி கானா தலைவர் நானா-அகுஃபோ-அடோவுடன்.*
2. RI *தலைவர் மேத்தா மற்றும் ராஷி ஐவரி கோஸ்ட் பிரதமர் பேட்ரிக் ஜெரோம் ஆச்சியுடன்.*
3. *தலைவர் மேத்தா நைஜீரிய தலைவர் முகமது புஹாரியுடன்.*
4. *கென்ய தலைவர் உஹூரு கென்யட்டாவுடன்* RI *தலைவர் மேத்தா மற்றும் ராஷி.*



பார்த்தேன், இந்த ஆண்டில் மொத்தக் கூடுதல் உறுப்பினர்கள் 20,000 என்று ஊகித்தேன். அது நடக்காவிட்டாலும், 15,000 உறுப்பினர்கள்கூட எனக்கு மகிழ்ச்சி அளிப்பார்கள். ஏனெனில், முன்பு எனக்குத் தரப்பட்ட மதிப்பீடு 5,000 தான். ஆப்பிரிக்கா போன்ற மிகப் பெரிய கண்டத்துக்கு அது மிகக் குறைவு என்று நான் எண்ணினேன். இப்போது, நம்மால் சுமார் 15,000 உறுப்பினர்களைச் சேர்க்க இயலும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நீங்கள் பார்த்த ஒரு திட்டத்தில் 13 வயதுச் சிறுமிகள் மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பேட்களைச் செய்வதாகவும், அது உங்களை மிகவும் ஈர்த்தது என்றும் ஒரு சமூக ஊடகப் பதிவில் நீங்கள் சொல்லியிருந்தீர்கள். அதைப்பற்றிச் சில கூடுதல் தகவல்களை எங்களுக்குச் சொல்லுங்கள். ஏனெனில், உங்களுடைய தலைமை ஆண்டில் நீங்கள் விரும்பிப் பின்பற்றும் கருப்பொருள்களில் ஒன்றான பெண்களுக்கு ஆற்றல் அளித்தலுடனும் அது இணைந்துள்ளது.

உண்மைதான். பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் திட்டம் மிக நன்றாக வளர்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன். நான் எந்த இடத்துக்குச் சென்றாலும் சரி, பெண்களுக்கு ஆற்றல் அளிக்கும் திட்டங்களை முன்னணியில் கண்டேன்… ராஷியும் நானும் இதனுடன் தொடர்புடைய பல திட்டங்களைப் பார்த்தோம்.

கேமரூனில் உள்ள யாவுண்டெ-யில், பேட்-எ-கேர்ள் என்று அழைக்கப்படும் திட்டம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. 500க்கும் மேற்பட்ட பெண்களுக்குத் திரும்பப் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பேட்களைத் தயாரிக்கிற இரண்டு நாள் பயிற்சி வகுப்பு ஒன்றை RID 9141 நடத்தியது. 13 வயதே ஆன

சிறுமிகளெல்லாம் சொந்தமாகச் சானிடரி பேட்களைத் தயாரிப்பதைப் பார்த்தோம், அந்த உணர்வை விவரிக்க இயலாது. ராஷி-யும் அவர்களுடன் அமர்ந்து ஒரு பேட்-ஐத் தைத்தார். இந்தத் தொழிலில் ஒரு நிறுவனம் ஈடுபடுகிறது, அதன் பிரதிநிதிகள் இந்த இளம் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள், மூலப் பொருட்களை வழங்குகிறார்கள், அவர் களுடைய பணியைக் கண்காணிக்கிறார்கள், தரக் கட்டுப்பாட்டைச் செய்கிறார்கள். அவர்களுடைய நோக்கம், 2,000 பெண்களுக்குப் பயிற்சி அளிப்பது, அவர்கள் இன்னும் 20,000 பேருக்குப் பயிற்சி அளிக்கலாம்.

இப்போது, வளர் இளம் பருவத்தில் இருக்கிற ஒரு பெண் பயன்படுத்தி விட்டுத் தூக்கி எறியக்கூடிய சானிட்டரி பேட்களை இரண்டு ஆண்டுகளுக்குப் பயன்படுத் தினால், அதற்குச் சுமார் 50 செலவாகும். ஆனால், திரும்பப் பயன்படுத்தக்கூடிய சானிட்டரி பேட்களின் விலை மிகக் குறைவு (வெறும் $2). அதனால், ஒவ்வொரு பெண்ணுக்கும் $48 சேமிக்கப்படும். அத்துடன், பேட்களை ஒருமுறைமட்டும் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறியாமல் இருப்பதால் சுற்றுச் சூழலுக்கு, அதாவது, ரோட் டரியின் சமீபத்திய மற்றும் ஏழாவது கவனப் பகுதிக்குக் கிடைக்கிற பலன்களைப் பாருங்கள்.

உண்மையில், இந்தத் திட்டம் நம் கவனப்பகுதிகள் பலவற்றுக்குச் சேவை யாற்றுகிறது: சுற்றுச்சூழல், பெண்களுக்கு ஆற்றல் அளித்தல், நலன் மற்றும் தூய்மை. இந்தத் திட்டம்

மேலே: RI *தலைவர் மேத்தா மற்றும் ராஷி உகாண்டா அரசின் தலைமை கொறாடா தாமஸ் டயேப்வா (இடதிலிருந்து 4வது),* DG *ஜான் மகேசி டமீரா (இடதிலிருந்து 5வது) மற்றும் ரோட்டரியினருடன் உகாண்டா பாராளுமன்ற வாசலில்.*

கீழே: *முன்னாள்* RI *துணை தலைவர் இன்கா பாபலோலா மற்றும்* DG *டமீராவுடன்* #RotaryCancerRun10 *நிகழ்ச்சியில்* RI *தலைவர் மேத்தா.*

உண்மையில் என் நெஞ்சைக் கத கதப்பாக்கியது.

உங்களை ஈர்த்த மற்ற மிகச் சிறந்த திட்டங்கள் எவை?

ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில், தீவிரவாதச் செயல்பாட்டினால் மக்கள் இடம் பெயர்கிறார்கள். இந்த உள் இடப்பெயர்ச்சி மக்கள் தொகை (IDP) அங்கு பெரிய பிரச்சனையாக உள்ளது. IDPல் உள்ள பெண்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்பெண்கள் தங்கள் சொந்த நாடுகளில் தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி தாற்காலிக இடங்களில் வசிக்கவேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பெண்களின் கல்விக்கு ரோட்டரி உதவுகிறது.

ஐவரி கோஸ்ட் மற்றும் கென்யாவில் ஒரு மிகப் பெரிய மரம் நடுதல் திட்டத்திலும் நான் கலந்துகொண்டேன். அங்கு ரோட்டரியன்கள் 10 மில்லியன் மரக் கன்றுகளை வழங்குகிறார்கள்.

நீங்கள் சந்தித்த நாடுகளின் தலைவர்களுடன் நீங்கள்

விவாதித்த முக்கிய விஷயங்களில் ஒன்று, மக்களுக்குத் தடுப்பு மருந்து வழங்குவதில் ரோட்டரியின் உதவிபற்றியது. ஆனால், ஆப்பிரிக்க நாடுகள் சந்திக்கும் மிகப் பெரிய சவால், கோவிட் தடுப்பு மருந்து சமமாகக் கிடைக்காததுதான், இல்லையா?

நாங்கள் ஒரு விஷயத்தில் தெளிவாக இருக்கிறோம்: தடுப்பு மருந்துகளைப் பெறும் பகுதியில் நாங்கள் நுழைவதில்லை, ஏனெனில், அதன் பொருள், தடுப்பு மருந்துகளை வாங்குதல் என்பதாக இருக்கும். நம்முடைய பார்வை இன்னும் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதலில்தான் இருக்கிறது என்றும் நாம் கோவிட் தடுப்பு மருந்துகளை வாங்கப்போவதில்லை என்றும் RI தீர்மானித்துள்ளது.

அதனால், நான் நாடுகளின் தலைவர்களைச் சந்தித்தபோது இந்த அம்சத்தில் நான் தெளிவாக இருந்தேன்... தடுப்பு மருந்துகளை வாங்குவதைமட்டும் விட்டுவிடுங்கள், மற்றபடி உங்கள் விருப்பத்தை எங்களுக்குச் சொல்லுங்கள், நாங்கள் உதவுவோம் என்றேன்.

விழிப்புணர்வை உண்டாக்குவது ஒரு பெரிய சவால். ஏனெனில் அங்கு மிகுந்த தடுப்பு மருந்துத் தயக்கம் உள்ளது. மக்கள் தடுப்பு மருந்து எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. காமரூனில், நாம் வலுவான மூலிகைகளை எடுத்துக்கொள்வதால் நமக்குக் கோவிட் வராது என்றுதான் மக்கள் பொதுவாக நினைக்கிறார்கள், சில ரோட்டரியன்களும் இப்படி நினைக்கிறார்கள். அமெரிக்கா அல்லது இந்தியாவுடன் ஒப்பிடும்போது, இந்த நாடுகளில் கோவிட் வந்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவு... அங்கு கோவிட் நோய்த்தொற்றைச் சந்திக்கிறவர்கள் அல்லது அதனால் இறக்கிறவர்கள் மிக மிகக் குறைவு. இதற்குக் காரணம், அவர்களுடைய உள் நோய் எதிர்ப்பு ஆற்றல் மேம்பட்டு இருக்கலாம் அல்லது வேறு காரணம் இருக்கலாம்.

அதனால், தடுப்பு மருந்து வழங்கல், குளிர்ச் சங்கிலியைப் பராமரித்தல், விழிப்புணர்வைப் பெருக்குதல் போன்றவற்றுடன் தொடர்புடைய அனைத்த உதவியையும் வழங்க ரோட்டரியன்கள் தயாராக உள்ளார்கள் என்று நான் அவர்களுக்குச் சொன்னேன்.

ஆப்பிரிக்காவில் ரோட்டரியன்கள் வேறு எந்த விஷயங்களில் கவனம் செலுத்தவேண்டும்?

ரோட்டரி மகுடத்தில் ஒரு சிறந்த வைரம் ஆப்பிரிக்கா. ஒரே விஷயம், அதைச் சிறிது பட்டை தீட்டவேண்டும், அதற்கு, ரோட்டரி தலைமை அங்கு செல்லவேண்டும். நான் அங்கு சென்றதை எண்ணி மகிழ்கிறேன், என்னுடைய தலைமை ஆண்டில் இன்னும் இருமுறை நான் ஆப்பிரிக்கா செல்வேன்: மார்ச் 2022ல் தலைமைக் கருத்தரங்குக்காக மொசாம்பிக் செல்வேன், அதற்குமுன்னால், நான் வட ஆப்பிரிக்காவுக்கு, அதாவது, எகிப்து, மொராக்கோ, துனீசியா போன்ற நாடுகளுக்குச் செல்ல விரும்புகிறேன், காரணம், ஆப்பிரிக்காவின் அந்தப்

மகரேரே பல்கலை கழகத்திலுள்ள
Rotary Peace Center-*ல்* RI *தலைவர் மேத்தா.*

எதியோப்பியாவில் ரோட்டராக்டர்களுடன்.

பகுதிகளில் உறுப்பினர் எண்ணிக்கை மேம்பட்டுள்ளது.

உங்கள் ஆப்பிரிக்கப் பயணத்தில் நீங்கள் சுட்டிக்காண்பிக்க விரும்பும் வேறு அம்சங்கள் என்ன?

என்னுடைய பயணத்தின் மிக முக்கியமான அம்சம், நான் எந்தெந்த நாடுகளுக்குச் சென்றேனோ, அந்த நாடுகளின் தலைவர் அல்லது பிரதமரைச் சந்தித்தேன். இது ஒரு மிக முக்கியமான விஷயம். மக்களுடைய பார்வையில் ரோட்டரியின் முக்கியத்துவம் என்பது, நாம் அதை எப்படி முன்னிறுத்துகிறோம் என்பதைப் பொறுத்து மாறும் என்று நான் உணர்கிறேன். ரோட்டரியை முறையாக முன்னிறுத்துவது மிக முக்கியம். ஒருபக்கம், நாம் செய்யும் மிகச் சிறந்த பணி, அது உருவாக்கும் பொதுத் தோற்றம். நாம் நம் கதையைச் சொல்லாவிட்டால், யாருக்கும் ரோட்டரியைப்பற்றித் தெரியாது. ஆனால், அந்தக் கதையை மிக உயர்ந்த நிலையில் சொல்ல வேண்டும்.

ரோட்டரியின் கதையை நான் மிக உயர்ந்த நிலையில் சொல்ல விரும்புகிறேன்; ஆப்பிரிக்காவில் நான் சந்தித்த நாட்டுத் தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் நான் அதைச் சொன்னேன். நாம் நம்மை எப்படி

ப்ராக் (செக் குடியரசு) மண்டல மாநாட்டில் PRIP ஹோல்கர் நாக் அவர்களுடன் RI தலைவர் மேத்தா மற்றும் ராஷி.

எதியோப்பியாவில் நடைபெற்ற TRF விழாவில் RI தலைவர் மேத்தா மற்றும் ராஷி.

முன்னிறுத்துகிறோம் என்பதன் முக்கியத்துவத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். நாம் அதை இயல்பாகச் செய்தால், அவர்கள் நம்மை இயல்பாக எடுத்துக் கொள்வார்கள். நம்மைப்பற்றிய ஒளிவட்டத்தை உருவாக்கவேண்டும், ஏனெனில், அது நம்மைப்பற்றிய மக்கள் பார்வையை மேம்படுத்தும்.

என் பயணத்தின் இன்னொரு முக்கியமான அம்சம், அந்த நாட்டுத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ரோட்டரி எதையோ வழங்கியது, எதற்கும் கோரிக்கை வைக்கவில்லை, எதையும் கேட்கவில்லை.

இதைக் கொஞ்சம் விரிவாகச் சொல்ல இயலுமா?

RI சார்பாக, நான் அந்த அரசுத் தலைவர்களிடம் பேசியபோது, எங்கள் கவனப் பகுதிகளில் நீங்கள் ஏதாவது செய்ய விரும்பினால், நாங்கள் உங்களுக்கு உதவுவோம் என்றேன். என் பயணத்துக்கு முன்னால்,

கேமரூன் தலைநகர் யாவுண்டேயில் நடைபெற்ற சானிடரி பேட்கள் தைக்கும் நிகழ்ச்சி ஒன்றில் ராஷி மற்றும் RI தலைவர் மேத்தா.

கென்யா-வில் நைரோபி-க்கு வெளியில் எத்தனைக் கண் மருத்துவமனைகள் உள்ளன என்று நான் கண்டறிந்தேன். அது பெரிய எண்ணிக்கையாக இல்லை. பின்னர், நான் கென்யத் தலைவரிடம் பேசியபோது, நீங்கள் எங்களுக்குக் கட்டடம் வழங்கினால், நாங்கள் உங்களுக்காகக் கண் மருத்துவமனை அமைக்கத் தயாராக உள்ளோம் என்றேன். உங்களால் எத்தனைக் கண் மருத்துவமனைகள் அமைக்க இயலும் என்று அவர் கேட்டார். நீங்கள் எத்தனைக் கட்டடங்கள் வழங்குகிறீர்களோ, அத்தனைக் கண் மருத்துவமனைகள் அமைக்க இயலும் என்று நான் சொன்னேன். அவர் சொன்னார்: "திரு. மேத்தா, நீங்கள் உங்கள் இடத்துக்குச் செல்லுமுன் கட்டடங்கள் வழங்கப்படும்." ரத்த வங்கிகளுக்கும் அவர் இதையே சொன்னார்.

மற்ற ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றுடன் ஒப்பிடும்போது, கென்யா சில குறிப்பிட்ட அளவுருக்களில் நன்கு செயல் படுகிறது, ஆனால், தேவைகள் உள்ளன. ஒரு கண் மருத்துவமனை அமைப்பதற்கு 2 பன்னாட்டு நல்கைகள் தேவை: அதை அமைப்பதற்கு ஒன்று, சுமார் 18 மாதங்கள் அதை இயக்குவதற்கு ஒன்று. நான் பல கண் மருத்து வமனைகளை அமைத்திருப்பதால், இதை அனுபவத்திலிருந்து அறிவேன்.

அடுத்து, நான் மின் கற்றல் திட்டத்தை வழங்கினேன், அவர்கள் எல்லாரும் அதை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்.

ஐவரி கோஸ்ட்டில் எனக்கு ஒரு மகிழ்ச்சியான வியப்பு, நான் எழுத்தறிவுத் திட்டத்தைப்பற்றிப் பேசத் தொடங்கியபோது, அந்த நாட்டின் தலைவர் "TEACH திட்டத்தைப்பற்றி எனக்கு எல்லாம் தெரியும்" என்றார்.

நாம் ஏற்கெனவே டோகோ-வில் ஒரு வெள்ளோட்டத் திட்டத்துக்காகச் சில மின் கற்றல் உள்ளடக்கங்களை உருவாக்கியுள்ளோம், அந்த உள்ளடக்கம் ஃபிரெஞ்சில் மொழி பெயர்க்கப்பட்டு, படங்கள் ஆப்பிரிக்கப் படங்களாக மாற்றப் பட்டன. இப்போது, மிகுந்த ஆர்வம், தேவை மற்றும் எதிர்பார்ப்பினால், நாம் அதைக் கானா, கென்யா, எத்தியோப்பியா போன்ற நாடு களுக்கு அனுப்பலாம்.

பெண்களுக்கு ஆற்றல் வழங்கும் திட்டங்களில் ஆழமான ஆர்வத்தை நான் இன்னொருமுறை குறிப்பிடவேண்டும்.

இந்தக் கேக்கின் உச்சியில் அமர்ந்த செர்ரி, உகாண்டப் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்த மசோதா. அவர்கள் எங்களில் 23 பேரை அழைத்தார்கள்; இந்த மசோதா உலகெங்கும் ரோட்டரி செய்துள்ள மனிதத் தன்மைப் பணியைப் பற்றியும், உகாண்டா உள்படப் பல நாடுகளில் இளம்பிள்ளை வாதத்தை அகற்றுதலில் அது உண்டாக்கியுள்ள தாக்கத்தைப்பற்றியும் பேசியது.

அனைத்து நாடுகளிலும், நாட்டுத் தலைவர் ஒருவருக்குக் கிடைக்கிற மதிப்பு RI தலைவரான எனக்குக் கிடைத்தது. ஆப்பிரிக்காவில் ரோட்டரி இந்த அளவு முதிர்ச்சி பெற்றிருப்பதை, மிகச் சிறந்த அடையாளம், மிகச்சிறந்த இணைப்பைக் கொண்டிருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ந்தேன்; பேச எழுந்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 20 பேர் ரோட்டரியன்களாக இருந்தார்கள்; நான் பார்த்த நாடுகளில் குறைந்தது 30 முதல் 40 MPக்கள் ரோட்டரியன்களாக இருந்தார்கள்.

ஐவரி கோஸ்ட்-ல் மரம் நடும் நிகழ்ச்சியில் RI தலைவர் மேத்தா.

வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்

கோவிட் உதவிப் பணிகளைச் செய்யும் ரோட்டரியன்களுக்குப் பாராட்டு

கிரண் ஜெஹரா

இடதிலிருந்து: PDG G ஒளிவண்ணன், RC மெட்ராஸ் நார்த் தலைவர் ஜான் ஃப்ரெட்ரிக், DG J ஸ்ரீதர், RID மகேஷ் கோட்பாகி மற்றும் Dr நாராயணசுவாமி கோவிட் மையத்தில்.

சென்னையில் உள்ள கிண்டியில் இருக்கும் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சிக்கான அரசக் கல்வி நிறுவனத்தின் கோவிடுக்குப் பிந்தைய பராமரிப்பு மையத்துக்கு வருகை தந்த RID மகேஷ் கோட்பாகி, RC மெட்ராஸ் நார்த், RID 3232ஐச் சேர்ந்த, இந்தச் சங்கத்தின் கோவிட் உதவித் திட்டங்களுக்குப் பங்களித்த 7 ரோட்டரியன்களைப் பெருமைப்படுத்தினார். அவரும் DG J ஸ்ரீதர், PDG G ஒளிவண்ணன், சங்கத் தலைவர் ஜான் ஃபெட்ரிக் ஆகியோரும் இந்தக் கோவிட் வளாகத்தைப் பார்வையிட்டார்கள், இங்கு இந்தச் சங்கம் ரூ.1 கோடி மதிப்புள்ள ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் மருத்துவக் கருவிகளை நிறுவியுள்ளது. சங்கத்தின் முயற்சிகளைப் பாராட்டிய கோட்பாகி, இந்தத் திட்டம் RI தலைவர் சேகர் மேத்தாவின் "பெரிதாகச் சிந்தித்துச் செயல்படுதல்" என்ற மந்திரத்துக்கு இணங்க நடைபெறுகிறது என்று குறிப்பிட்டார். இந்தச் சங்கம் ஒரு மிக முக்கியமான நேரத்தில் பங்களிக்கத் தொடங்கியது, சென்னையைச் சேர்ந்த நலிந்த மக்களுக்கு உதவுவதற்காக அசாதாரணமான விரைவில் பணியாற்றியது.

கோவிட் மையத்தின் இயக்குநர் டாக்டர் நாராயணசுவாமி, அவருடைய குழுவினரையும் இவர் சந்தித்தார், அவர்களுக்கு ஏதேனும் தேவைப்பட்டால், உங்களுக்கு உதவுவதற்கு ரோட்டரி காத்திருக்கிறது என்று அவருக்கு உறுதியளித்தார். மருத்துவர்கள், மருத்துவ ஊழியர்களை உண்மையான நாயகர்கள்" என்று அழைத்த கோட்பாகி, மனித குலத்தின் பாதுகாப்பு, நலனுக்காக நீங்கள் செய்யும் தியாகங்கள் விலைமதிப்பு மிக்கவை, மக்கள் வாழ்நாள்முழுக்க உங்களுக்கு நன்றியுணர்வுடன் இருக்கவேண்டும் என்றார்.

RI இயக்குநருக்கு நன்றி தெரிவித்த Dr நாராயணசுவாமி, இந்தக் கொடுமையான வைரஸ் உலகம்முழுவதும் நலப் பராமரிப்பு அமைப்புகளின் போதாமைகளை வெளிக்கொண்டு வந்துவிட்ட போதும், ரோட்டரியைப் போன்ற அமைப்புகள் மருத்துவ மனைகளுக்குப் பொருட்களை வழங்குதல், நலப் பராமரிப்புப் பணியாளர்களை ஆதரிப்பதில் ஒரு முக்கியப் பங்கு வகித்துள்ளார்கள், இதன்மூலம் அவர்கள் தேவையுள்ளவர்களுக்கு விரைவாக உதவி வழங்க இயன்றுள்ளது என்றார்.

ரோட்டரியன்கள் செயல் வீரர்கள் என்பதை நிரூபிக்கும் விதமாக இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் போர்க்கால அடிப்படையில் நோய்ப்பரவலுக்கு எதிர்வினையாற்றியுள்ளார்கள், தேவையான நேரத்தில் நலப் பராமரிப்பு ஊழியர்களுக்கு உதவிக் கரம் நீட்டியுள்ளார்கள் என்றார் DG ஸ்ரீதர். ■

உறுப்பினர் சேர்க்கை பற்றி RI தலைவர் மேத்தாவுடன் உரையாடல்

ஜெய்ஸ்ரீ



RI *தலைவர் சேகர் மேத்தா*

35 ஆண்டுகளுக்கு முன்பு யாரோ ஒருவர், எனக்கு ரோட்டரியில் சேரும் வாய்ப்பை அளித்தார். அந்த வகையில் நான் ஓர் அதிர்ஷ்டசாலி. இப்போது அதேபோன்ற ஒரு வாய்ப்பை நான் பலருக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். என RI தலைவர் சேகர் மேத்தா இணையவழியிலான உறுப்பினர் சேர்க்கை தொடர்பான உரையாடலின்போது தெரிவித்தார். உலகம் முழுவதும் உள்ள ரோட்டேரியன்கள் பலரும், ரோட்டேரியன் அல்லாதவர்களும் இதில் கலந்துகொண்டனர். ரோட்டேரியன்கள் அல்லாத பலரும் ரோட்டரியில் உறுப்பினராக ஆர்வம் காட்டியதுதான் இதன் சிறப்பம்ச மாகும். இந்த நிகழ்ச்சியில் RI இயக்குநர் விக்கிபுலிஸ், உறுப்பினர் சேர்க்கைக்குழு தலைவர் கமல் சங்வி, துணைத்தலைவர் ஜெரிஸ் காஸ்டன் ஆகியோரும் பங்கேற்றனர்.

தற்போதைய காலங்களில் சமூகங்களின் தேவை அதிகமாக உள்ளது. ரோட்டரி வளரவும், ரோட்டரி அதிக சேவை செய்யவும் இது சரியான நேரம். இந்த ஆண்டு ரோட்டரி அதிக முக்கியத்துவம் அளித்து அதிக உறுப்பினர்களை கொண்டு வருவதற்கான நடவடிக் கைகளை எடுத்து வருகிறது. ஒவ்வொருவரும் ஒரு புதிய உறுப்பினர்களை கொண்டுவர வேண்டும் என்கிற Each One Bring One (EOBO) என்கிற திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ரோட்டேரியனும் ஒரு உறுப்பினரைக் கொண்டு சேர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளோம் என்றார் சேகர் மேத்தா. ரோட்டரியின் சேவை நாட்கள் மூலம் நாம் கதைகளை பகிர்ந்து கொள்வோம். பல்வேறு துறைகளில் நாம் செய்யும் சிறந்த பணிகளை வெளிப்படுத்தவும் மேலும் நாம் செய்யும் நல்ல வேலைகளில் மற்றவர்களும் இணைந்துகொள்ள ஊக்குவிப்போம். புதிய உறுப்பினர்களை நாம் சேர்த் தாலும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் சேர்த்தல் ஆகியவைதான் நமது செயல்பாடுகளின் முக்கிய அம்சமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

RID *விக்கி புலிஸ்*

EOBO திட்டத்தின் குறிக்கோளை தெளிவுபடுத்த RI தலைவர், மூன்று பங்கேற்பாளர்களுடன் கேள்வி-பதில் அமர்வை தொகுத்து வழங்கினார்.

மேத்தா: ரோட்டரியை வளர்ப்போம் முன்முயற்சியின் அர்த்தம் என்ன? நமது அமைப்பின் வளர்ச்சிக்கு இது ஏன் முக்கியம் என்று கருதுகிறீர்கள்?

விக்கி: இந்த முயற்சி உற்சாக மளிக்கிறது. ஏனென்றால் நாம் அனை வரும் நமக்குத் தெரிந்த மற்றும் நாம் பெரிதும் மதிக்கிற நபர்களை சென்றடைவோம். மேலும் நட்பு, ஒருமைப்பாடு, பன்முகத்தன்மை, சேவை மற்றும் தலைமைத்துவத்தின் முக்கிய அம்சங்களைப் பகிர்ந்து கொண்டு அவர்களை ரோட்டரிக்கு அழைப்போம். அது அவர்களை உயர்த்த உதவுவதுடன் அவர்களிடம் மாற்றத்தையும் உருவாக்கும்.

உறுப்பினர்களை முழுமையாக ஈடுபடுத்துதல், அவர்களின் ரோட்டரி அனுபவத்தை வழங்குதல், ஒவ்வொரு உறுப்பினரும் நேரடியாக ஒரு புதிய உறுப்பினரை ரோட்டரிக்கு கொண்டு வருவது மற்றும் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுமையான ரோட்டரி-ரோட்ராக்ட் சங்கங்களைத் தொடங்குவது ஆகியவை நம்மீதான தாக்கத்தை ஏற்படுத்தவும் ரோட்டரியை வளர்ப்பதற்குமான மூன்று வழிகளாகும்.

சங்வி: நாம் நமது எல்லையை விரிவுபடுத்த அல்லது தாக்கத்தை விரிவாக்க விரும்பினால், அதிக உறுப்பனர்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் நமது சங்கங்கள் துடிப்புடன் செயல்பட முடியும். மேலும் சமூகங்கள் வளர்ச்சிபெற நம்மிடம் அதற்கான ஆதாரங்கள் இருக்கும். உறுப்பினர்கள் சேர்க்கை என்பது ரோட்டரியின் உள்கட்டமைப்பின் முன்னுரிமையாகும். யாரோ நம்மை அணுகி, ரோட்டரி என்னும் அற்புதமான உலகிற்கு நம்மை அழைத்து வந்தனர். லட்சக்கணக்கான மக்களின் அன்பையும், ஆசீர்வாதத் தையும் நாம் அனுபவிக்கிறோம். இப்போது நாம் வெளியில் சென்று

பலரை அணுகி அது ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் ரோட்டரிக்கு அழைத்து வரும் நேரம் இது.

மேத்தா: இந்த வாய்ப்பு உங்களுக்கு என்ன எண்ணத்தை தோற்றுவித்தது? இந்த வாய்ப்பை நீங்கள் வேறு ஒருவருக்கு எப்படி நீட்டித்தீர்கள் என்கிற தனிப்பட்ட கதையைச் சொல்ல முடியுமா?

ஜெரிஸ்: பல ஆண்டுகளுக்கு முன்னால் தூதுவர் சார்ந்த ஃபெல்லோஷிப் மூலம் இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது எனது உலகப் பார்வையை விரிவு படுத்தவும், ரோட்டரியை சர்வதேச கண்ணோட்டத்தில் பார்க்கவும் உதவியது.

விக்கி: வர்த்தகத் தொடர்புகள் மூலமாக நான் ரோட்டரியில் சேர்ந்தேன். முதலில் நான் முன்பின் பார்த்திராத மக்களுடன் நட்பு ஏற்பட்டது. மக்களுடன் சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் திறமைகளை கற்றுக்கொண்டேன். பின்னர் சேவை செய்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. என் கணவர் தொடக்கத்தில் ரோட்டரியை பெல்லோஷிப் மற்றும் சேவை போன்ற பல நன்மைகளுக்காக அணுகினார். ஆனால், இப்போது அவர் ரோட்டரி ஏவியேஷன் இ-சங்கத்தின் உறுப்பினராகிவிட்டார். இது உலகம் முழுவதிலிருந்து ஒன்றாக பறக்கும் ஆர்வமுள்ள நபர்களைக் கொண்டு வருகிறது. தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் ரோட்டரியின் நெகிழ்வுத்தன்மை பல்வேறு நாடுகளில் உள்ள வெவ்வேறு பின்னணிகளைக் கொண்ட மக்களை இணைக்க அனுமதிக்கிறது. பொது நலன் அடிப்படையில் நட்புகளை வளர்த்து சங்கம் மற்றும் அறக்கட்டளை மூலம் சேவை செய்யவும் அனுமதிக்கிறது.

மேத்தா: உறுப்பினர்களைக் கொண்டு வருவதற்கான ரோட்டரியின் செயல் திட்டங்களை உதாரணமாகக் கூறமுடியுமா?

சங்வி: ஈரோட்டில் கோவிட் தொற்று அதிகரித்து மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில், RID 3203-ஐ உள்ளடக்கிய சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து 2 மில்லியன் டாலர் மதிப்பில், 45 நாள்களில் 400 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை நிர்மாணித்தார்கள். இந்த திட்டம் பலரையும் கவர்ந்தது. மேலும் உலக யோகா தினத்தன்று ரோட்டரி வாழும் கலை மையத்துடன் கூட்டுசேர்ந்தது. இரு அமைப்புகளும் அதிக அளவு உறுப்பினர்கள் கொண்டதாக இருந்ததால் ஏழு நாட்கள் இணையதளம் மூலம் யோகா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் பல்வேறு சமூக ஊடகங்கள் மூலம் 10,000த்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இது நாடு முழுவது திலிமிருந்து ரோட்டரிக்கு புதிய உறுப்பினர்களைக் கொண்டு வந்தது.

ஜெரிஸ்: முன்னாள் ரோட்ராக்டர் என்ற முறையில் சமூகங்களில் தாக்கத்தை ஏற்படுத்த ரோட்ராக்டுடன் ஒரு கூட்டு நிகழ்வை நான் பரிந்துரைக்கிறேன். ரோட்ராக்டர்கள் தலைமையையும் வழிகாட்டுதலையும் விரும்புகிறார்கள். அவர்கள் ரோட்டேரியன்களுடன் இணைந்து செயலாற்றவும் தயாராக இருக்கிறார்கள். இளைய தலைமுறையினருடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவும், புதிய உறுப்பினர்களை (இரட்டை உறுப்பினர்கள்) தங்கள் சங்கத்துக்கு கொண்டுவர ரோட்டேரியன்களுக்கு இது உதவும்.

மேத்தா: உறுப்பினர்களை ஈர்க்க ரோட்டரிக்கு சமத்துவம் மற்றும் சேர்த்தல் ஏன் முக்கியம்?

விக்கி: இந்தக் காலத்தில் பன்முகத் தன்மைக்கு வலுவான அர்த்தம் உள்ளது. வெவ்வேறு தொழில்கள் மற்றும் இடங்கள், பாலினம், இனம் மற்றும் வயதுடையவர்களை, தனிநபர்களை ஒன்றிணைப்பது சங்கத் துக்கான பல்வேறு கண்ணோட்டங் களை ஒன்றிணைக்கும். கடந்த காலங்களில் ரோட்டரியை கருத்தில் கொள்ளாத அல்லது அறிந்து வைத்திராத நபர்களை உறுப்பினர்களாக அடைவதற்கு EOBO ஒரு சரியான வழியாகும்.

ஜெரிஸ்: சேவைகளைத் தொடர வேண்டுமானால் அடுத்த தலைமுறை ரோட்டேரியன்களைக் கொண்டுவர வேண்டும். நம்மிடம் பன்முகம் மற்றும் சேர்த்தலை உள்ளடக்கிய சங்கங்கள் இருக்கும்போது ரோட்டரி வலுவானதாக இருக்கும்.

சங்வி: உலகில் 200 நாடுகளில் ரோட்டரி வலம் வந்து கொண்டிருப்பது நமது நிறுவனத்தின் பன்முகத்தன்மை மற்றும் சமஉரிமையைக் காட்டுகிறது. வயது, இனம், ஜாதி, மதம், கலாசாரம், மொழிகள், பாலியல் நோக்குநிலை மற்றும் பாலின அடையாளம் மற்றும் எண்ணங்களில் மாறுபாடுகள் இருந்தாலும் அவர்களின் பங்களிப்பை நாம் மதிக்கிறோம். ஒரு நிறுவனம், அதன் உறுப்பினர்கள் ஒற்றுமையாக இருக்கும் வரைதான் நன்றாக இருக்கும். உலக மக்கள் தொகையில் 48 சதவீதம் பெண்கள் என்பதால் அவர்களை ரோட்டரிக்குள் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள்தான் உலகத்தின் தலைவர்கள். உலகில் உள்ள ஒவ் வொரு நபரிடம் கண்ணுக்குத் தெரிந்த அல்லது தெரியாத குணங்கள் உள்ளன. இவை நிறுவனத்தை தனித்து வமாக்குகிறது.■

உறுப்பினர் சேர்க்கை குழு துணை தலைவர் ஜெரிஸ் கேஸ்டன்

RI உறுப்பினர் சேர்க்கை குழு தலைவர் PRID கமல் சங்வி

கோவிட்டை எதிர்த்துப் போராடுவதில் எச்சரிக்கை தேவை

ரஷீதா பகத்

பல்வேறு நாடுகளில் கோவிட் தடுப்பூசி பெறுவதில் சமச்சீரற்ற நிலை மற்றும் இஸ்ரேல், இங்கிலாந்து போன்ற நாடுகளில் உருமாற்ற வைரஸால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தொற்றுச் சவால்கள் நீடித்து வருகின்றன என்கிறார் ரோட்டரி இன்டர்நேஷனல் கோவிட் பணிக்குழுவின் தலைவரும் PRIP K R *ரவீந்திரன். இது தொடர்பாக ரோட்டரி நியூஸ்-யிற்கு அவர் அளித்த பேட்டியின் சுருக்கம்:*

PRIP K R *ரவீந்திரன் மற்றும்* DGN *புபூடு டி சொய்ஸா* (RID 3220) RC *கொழும்பு நடத்திய தடுப்பூசி முகாமில்.*

RI கோவிட் பணிக்குழுவுக்கு நீங்கள் தலைமை வகிக்கிறீர்கள். அக்குழு எப்படிச் செயல்படுகிறது. அதன் முன்னுரிமைகள் என்னென்ன?

கோவிட் தொற்று, ரோட்டரியின் செயல்பாடுகளுக்கு இதற்கு முன் இல்லாதவாறு இடையூறு ஏற்படுத்தி விட்டது. கடந்த ஆண்டு TRF மற்றும் RI தலைவர்களை உள்ளடக்கி ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது. ஹோல்கர் நாக், சேகர் மேத்தா, ஜெனிஃபர் ஜோன்ஸ், ஜான் ஜெர்ம், இயன் ரைஸ்லே மற்றும் நான் அந்த குழுவில் இடம்பெற்றிருந்தோம். இக்குழு வழக்கமான அடிப்படையில் சந்தித்தது. ஆனால், ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் வேறு சில பொறுப்புகளும் இருந்ததால் அது செயல்படுவதில் தேக்கநிலை ஏற்பட்டது. எனவே இந்த ரோட்டரி ஆண்டின் தொடக்கத்தில் எனது தலைமையில் புதிய குழு அமைக்கப் பட்டது. உலகளாவிய பிரதிநிதித்து வத்துடன் அறிவுசார்ந்த நிபுணர்கள் இதில் இடம்பெற்றுள்ளனர்.

முன்னுரிமைகளை பொருத்தவரை இக்குழு கீழ்க்கண்டனவற்றில் முக்கிய கவனம் செலுத்தும்.

- கோவிட் நெருக்கடிக்கு விரைவாகவும் சிறந்த முறையிலும் தீர்வுகாண ரோட்டேரியன்களுக்கு ஆதரவு அளித்து வழிகாட்டுவது.
- வெளி அறக்கட்டளைகளிலிருந்து நிதியுதவி பெற உறவுகளை வளர்த்துக் கொள்வது மற்றும் போலியோ ஒழிப்பு பணியைப் போல கோவிட் தடுப்பூசி ஆதரவு பணிகளிலும் சர்வதேச வளர்ச்சி ஸ்தாபனங்களை பயன்படுத்திக் கொள்வது.
- உலகம் முழுவதும் நடைபெறும் கூட்டங்களுக்கு பயணமாகச் செல்லும்போது ரோட்டரி வாரிய மற்றும் அறங்காவலர்களுக்கு பாதுகாப்பை வலியுறுத்துவது. கோவிட் பணிக்குழு உறுப்பினர்கள் கீழ் குறிப்பிட்டுள்ளவை குறித்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்வது.
  - ❖ தங்கள் பிராந்தியத்தில் உள்ள கோவிட் தொற்று நோயாளிகள் பற்றி தகவல் தெரிவிப்பது.
  - ❖ கோவிட் தடுப்பூசி போடப் பட்டிருந்தும் நோய் பாதிப்புக்கு ஆளாகியிருந்தால் தெரிவிப்பது.
  - ❖ பயணம் மற்றும் கட்டுப்பாடுகள் விஷயத்தில் அரசின் நிலைப்பாடு.
  - ❖ தடுப்பூசிகள் இருப்பு.
  - ❖ முக்கிய சவால்கள் மற்றும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்.

இந்த தொற்று காலத்தில் சர்வதேச அளவில் ரோட்டரி எந்த மாதிரியான தாக்கத்தை ஏற்படுத்தியது?

உலகம் முழுவதும் தடுப்பூசி சம அளவில் கிடைப்பதை உறுதிசெய்யுமாறு ஜி-20 நாடு களுக்கு ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ் விடுத்த அழைப்பை நாங்கள் தீவிரமாக ஆதரித்தோம். நாங்கள் இத்தாலியின் பிரதமரும் ஜி-20 நாடுகள் மாநாட்டின் தலைவருமான மரியோ டிராகியுடன் தொடர்பு கொண்டு பேசினோம். ஜி-20 நாடுகளின் பிரகடனத்தை பாராட்டும் அதே சமயத்தில் உள்நாட்டு சூழ்நிலைகள் அனுமதிக்கும் பட்சத்தில் உலகளாவிய நாடுகளுக்கு தடுப்பூசி கள் வழங்கப்படும் என்பது வெறும் வார்த்தைகளாக இருக்கக்கூடாது என்று வலியுறுத்தினோம். ஒவ்வொரு நாட்டுக்கும் குறித்த காலத்தில் தேவையான அளவு தடுப்பூசிகள் கிடைப்பதை ஜி-20 நாடுகள் உறுதி செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டோம்.

சமூக உணர்வு ஆதரவுத் திட்டத்தின் கீழ் கோவிட் தடுப்பூசி முழு அளவில் மக்களை சென்றடைய GAVI (தடுப்பூசி கள் மற்றும் நோய்கள் தடுப்புக்கான உலகளாவிய கூட்டணி) என்ற அமைப்புடன் சமீபத்தில் நாங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

GAVI என்பது சர்வதேச அளவில் அரசு மற்றும் தனியார் தடுப்பூசி கூட்டணியாகும். இது தடுப்பூசி களின் சமமான பயன்பாட்டை உறுதி செய்வதை குறிக்கோளாகக் கொண்டது. மேலும் கோவிட் தடுப்பூசி களுக்காக அணுகுவதை நோக்கமாகக் கொண்டது. கோவெக்ஸ் GAVI முன்முயற்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கை. WHO, UNICEF, CEPI, Rotary மற்றும் GAVI கோவிட்டுக்கு எதிராக பாதுகாக்கப் பட்ட உலகம் என்ற கண்ணோட்டத்தில் இணைந்து செயல்பட கொள்கையளவில் ஒப்புக்கொண்டன.

தற்போது சர்வதேச அளவில் தடுப்பூசி பெறுவதில் சமச்சீரற்ற நிலை இருப்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். இந்த இடைவெளியை குறைப்பது அவசியமானது. அனைத்து நாடுகளும் பாதுகாப்பாக இல்லாவிட்டால் எந்த நாடும் பாதுகாப்பாக இல்லை என்று அர்த்தமாகிவிடும். உலகம் முழுவதிலும் உள்ள மக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதே தொற்றுநோயின் போக்கை தீர்மானிக்கும். அதிக எண்ணிக்கையில் மக்கள் தடுப்பூசி செலுத்திக்கொண்டால், சமூகத்தில் தொற்றுப்பரவல் அபாயம் குறையும். பல நாடுகளில் ரோட்டேரியன்கள் போலியோ தடுப்பு நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட அனுபவத்தை வைத்து கோவேக்ஸ் தடுப்பூசியை பல வழிகளில் ஆதரிக்க முடியும். GAVI/COVAX மூலம் தடுப்பூசியை இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், நேபாளம், இலங்கை உள்ளிட்ட 9 நாடுகளில் ஆதரிக்க முடியும்.

அரசாங்கங்கள் கொடுக்கும் புள்ளிவிவரங்களில் எப்போதுமே ஒரு கேள்விக்குறி இருக்கும். உலகம் முழுவதும் கோவிட் தொற்றுக்கு 4.5 மில்லியன் மக்கள்தான் உயிரிழந்துள்ளதாக சொல்லப்படுவதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? உங்கள் மதிப்பீடு என்ன?

இந்த புள்ளி விவரங்கள் சரியாக இருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. அவை குறைத்து மதிப்பிட்டுள்ளதாகவே நான் நினைக்கிறேன். “தி எகானமிஸ்ட்” சஞ்சிகை தனது செப்டம்பர் மாத இதழில் உலகம் முழுவதும் கோவிட் தொற்றுக்கு 15.2 மில்லியன் மக்கள் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளது. அவர்களது ஆய்வின்படி 9.3 மில்லியனிலிருந்து 18.1 மில்லியனுக்கு இடைப்பட்ட எண்ணிக்கையில் இறப்புகள் இருக்க 95 சதவீதம் வாய்ப்பு இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எத்தனை இறப்புகள்

ஏற்பட்டன மற்றும் இயற்கை பேரழிவுகள் இல்லாத சூழலில் எத்தனை இறப்புகள் ஏற்படுகின்றன என்பதை கருத்தில் கொண்டு இந்த மதிப்பீடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. உண்மையான எண்ணிக்கைய கணக்கிட இது சரியான வழி என்றே நான் நினைக்கிறேன்.

இந்த வைரஸ் தொற்றை ஒழிக்க உலகம் எதிர்கொள்ளும் மிகப் பெரிய சவால்கள் என்ன என்று நினைக்கிறீர்கள்?

விஞ்ஞானிகள் சாதனை நேரத்தில் பல்வேறு கோவிட் தடுப்பூசிகளை கண்டுபிடித்துள்ளனர். உயிர்காக்கும் தடுப்பூசி மருந்துகளை தயாரிப்பதில் சாதனை படைத்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் கோவிட் தடுப்பூசி தயாரிப்பின் எண்ணிக்கை 12 பில்லியன் குப்பிகளைத் தாண்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எண்ணிக்கை 2022ம் ஆண்டு நடுப்பகுதியில் இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று தெரிகிறது. துரதிருஷ்டவசமாக தடுப்பூசிகள் விநியோகத்தில் சமச்சீரற்ற நிலையை நாம் சந்திக்கிறோம். அதிக வருமானம் உள்ள நாடுகள் 80 சதவீதம் தடுப்பூசி பெற்றுள்ள நிலையில் குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் ஐந்தில் ஒரு பகுதி மக்கள் மட்டுமே முதல் தவணை தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

இந்தியா உள்ளிட்ட சில நாடுகளில் தடுப்பூசிக்கு எதிர்ப்புகள் எப்படி?

தடுப்பூசிக்கு எதிராக வலுவான பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது. தடுப்பூசிக்கு எதிரான பிரசாரத்தை முறியடிப்பதில் ரோட்டரி முக்கிய பங்காற்ற முடியும். கடந்த ஜூன் மாதம் கோவிட் தொற்றால் உயிரிழந்தவர்களில் 99 சதவீதத்தினர் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள். இருப்பினும் தடுப்பூசி செலுத்திக்கொள்வது பாது காப்பானது என்ற கருத்து வலுத்து வரும் அதே நேரத்தில் அதற்கு சில பகுதிகளில் எதிர்ப்பும் வலுத்து வருகிறது. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் தடுப்பூசிகள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் வைரஸ் உருமாற்றம் பெற்று புதிய வகை வைரஸ் உலகம் முழுவதும் பரவும் அபாயம் ஏற்படும்.

உலகெங்கிலும் உள்ள ரோட்டேரியன்கள் தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்று மக்களிடம் பிரசாரம் செய்வதில் முக்கியப் பங்காற்ற முடியும். குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுப்பதில் பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையே அதில் வெற்றி பெற்றோம். போலியோ தடுப்பில் நமது பங்கை மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். பொது இடங்களுக்குச் செல்பவர்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்று நாம் பிரசாரம் செய்யலாம்.

ரோட்டரி சங்கத்தினர் எப்போது நேரடியாக சந்திக்கத் தொடங்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

இதுபற்றி கருத்து சொல்வதற்கு நான் நிபுணரும் அல்ல, ஜோதிடரும் அல்ல. கோவிட் தொற்று வழிகாட்டு நெறிமுறைகளை சரிவர பின்பற்றாமல் பெரும் அளவில் மக்கள் கூடும் இடங்களில் உருமாறிய வைரஸ் பரவி வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

PRIP KR *ரவீந்திரன் மற்றும்* RC *கொழும்பு தலைவர் நிதி முருகேசு ஒரு கோவிஷீல்ட் புட்டியை ஆராய்க்கிறார்கள்.*

இரண்டு தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள்கூட முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று CDC சமீபத்தில் எச்சரித்துள்ளது.

எந்த ஒரு உள்ளரங்க நிகழ்வு களையும் நான் ஊக்கப்படுத்த மாட்டேன். மருத்துவமனைகளில் கோவிட் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டவர்களில் 12 முதல் 24 சதவீதத்தினர் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள் என்று சமீபத்தில் வெளியான தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல், இங்கிலாந்து போன்ற நாடுகளில் புதிய டெல்டா வகை வைரஸ் தாக்குதலில் இறந்தவர்களில் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களும் அடங்குவர்.

அடுத்த சில மாதங்களில் நிலமை மாறக்கூடும். ஆனால், ரோட்டரி சங்க அளவிலோ அல்லது மாவட்ட அளவிலே நாம் கூட்டங்களை நடத்தினால், கூட்ட அரங்கம் காற்றோட்ட வசதியுடன் அமைந்துள்ளதா, பாதுகாப்பானதா என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.■

District Wise TRF Contributions as on August 2021

(in US Dollars)

District Number	Annual Fund	PolioPlus Fund	Endowment Fund	Other Funds	Total Contributions
			India		
2981	26,499	654	0	67,568	94,720
2982	17,683	598	0	97	18,378
3000	2,469	11	0	1,000	3,479
3011	5,271	439	0	43,868	49,578
3012	15,942	3,734	22,000	78,108	119,784
3020	8,726	1,262	0	4,620	14,609
3030	8,823	0	15,027	0	23,850
3040	5,102	0	0	5,546	10,648
3053	2,065	0	0	0	2,065
3054	1,549	84	0	22,341	23,973
3060	19,615	28	0	47,014	66,657
3070	6,458	0	0	738	7,196
3080	5,650	1,931	0	703	8,283
3090	5,862	0	0	0	5,862
3100	6,369	0	0	0	6,369
3110	177	0	0	0	177
3120	2,473	0	0	0	2,473
3131	131,682	9,323	0	45,459	186,464
3132	6,332	543	5,000	507	12,382
3141	157,255	27	50,000	107,566	314,848
3142	95,313	105	5,405	24	100,847
3150	6,351	1,050	0	4,607	12,008
3160	4,348	423	17,264	0	22,034
3170	21,596	4,271	1,196	3,901	30,964
3181	2,421	7	0	0	2,428
3182	1,766	0	0	0	1,766
3190	29,837	3,658	0	0	33,495
3201	16,429	1,382	0	3,758	21,569
3203	6,071	7,124	5,072	132,702	150,968
3204	583	0	0	1,036	1,619
3211	280	280	0	3,240	3,800
3212	3,625	170	1,036	588	5,420
3231	5,620	102	0	2,851	8,574
3232	22,482	11,034	6,500	74,247	114,263
3240	12,921	984	0	0	13,906
3250	1,093	66	1,036	301	2,496
3261	2,433	14	0	0	2,447
3262	1,643	0	0	0	1,643
3291	30,759	470	5,541	0	36,770
India Total	**701,574**	**49,773**	**135,076**	**652,389**	**1,538,813**
3220 **Sri Lanka**	19,154	483	1,510	1,000	22,147
3271 **Pakistan**	308	316	0	1,155	1,780
3272 **Pakistan**	817	120	0	0	937
3281 **Bangladesh**	8,711	925	1,000	16,399	27,036
3282 **Bangladesh**	4,545	0	1,000	500	6,045
3292 **Nepal**	14,530	1,949	0	44,230	60,709
South Asia Total	**749,639**	**53,567**	**138,586**	**715,674**	**1,657,466**

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response. AF contributions count towards club annual giving goals and are included in per capita amounts. **Source:** RI South Asia Office.

ரோட்டரி உதவியுடன் 20 லட்சம் இந்தியர்களுக்கு கோவிட் தடுப்பூசி

ரஷீதா பகத்

ரோட்டரி இந்தியா கோவிட் பணி குழுவின் தலைவர் PRID அசோக் மஹாஜன் மற்றும் PDG மோகன் சந்தவாக்கர் (வலதிலிருந்து 3வது) டோம்பிவ்லி (RID 3142) தடுப்பூசி முகாமில்.

ரோட்டரி இந்தியா கோவிட் பணிக்குழுவின் தலைவர், PRID அசோக் மஹாஜன், ரோட்டரி இந்தியாவின் மூத்த ரோட்டரி தலைவர்கள் கொடுத்த உற்சாகம் மற்றும் மாவட்ட ரோட்டரி உறுப்பினர்கள் மற்றும் தலைமையின் கடின உழைப்பு மூலம் 20 லட்சம் இந்தியர்களுக்கு கோவிட் தடுப்பூசி போட உதவியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கோவிட் தொற்றுப் பரவலிலிருந்து இந்தியா விரைவில் விடுபடும் என்றும் அவர் நம்பிக்கையுடன் கூறுகிறார். அவரது பேட்டியின் சுருக்கம் இதோ...

உங்கள் தலைமையிலான இந்திய கோவிட் பணிக்குழுவின் முக்கிய நோக்கம் என்ன?

இந்திய அரசு கோவிட் தடுப்பூசியை உருவாக்கத் தயாரானபோது இந்தியாவில் உள்ள ரோட்டரி தலைமை கோவிட் தடுப்பூசி போடும் நடவடிக்கையில் இணைந்து செயல்பட முன்வந்தது. இதையடுத்து உருவாக்கப்பட்ட கோவிட் பணிக் குழுவுக்கு தலைமை ஏற்குமாறு என்னை அழைத்தனர். இதைத் தொடர்ந்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் மற்றும் நிதி ஆயோக் அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்புகளை அடுத்து கீழ்க்கண்ட வற்றில் முக்கிய கவனம் செலுத்த முடிவு செய்யப்பட்டது.

- கோவிட் தடுப்பூசி குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- சமூக அணி திரட்டல்.
- தவறான தகவல்களால் ஏற்படும் பொதுவான எதிர்ப்புகளை சமாளித்தல்.
- தேவைப்படும்போது தடுப்பூசிகளை கொண்டு செல்வதற்கான ஆதரவை வழங்குவது.

கோவிட் தடுப்பூசியில் ரோட்டேரியன்கள் பங்கு என்ன? எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்லமுடியுமா?

கோவிட் தடுப்பூசி போடும் பணிகளில் இந்தியா முழுவதிலும் உள்ள ரோட்டரி சங்கங்கள் பெரும்பங்காற்றியுள்ளன. முதலில் தடுப்பூசி பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த பேரணி நடைபெற்றது. அதன் பிறகு இணையவழி மூலம் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. மேலும் தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் முக்கியத்துவத்தை சமூக வலைத்தளங்கள் மூலம் பிரசாரம் செய்யப்பட்டன. தடுப்பூசி போடும் இயக்கம் தொடங்கியவுடன் தடுப்பூசிகளை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டு செல்வது, நாடு முழுவதும் தடுப்பூசி முகாம்களுக்கு ஏற்பாடு செய்வது என தொடர் சங்கிலிபோல் பணிகள் நடந்தன. என்னுடைய சுயமதிப்பீட்டின்படி ரோட்டரி சங்கங்கள் ஏற்பாடு செய்த முகாம்கள் மூலம் 20 லட்சம் பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

அதிக மக்கள்தொகை கொண்ட நம்நாட்டில் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவதில் நாம் சந்திக்கும் மிகப்பெரிய

சவால்கள் என்ன? ரோட்டரி இதற்கு எந்த வகையில் உதவ முடியும்?

போதிய அளவு தடுப்பூசி கிடைப்பதே தடையாக இருந்தது. நம் நாட்டில் மக்கள் தொகை அதிகம். அதிலும் நகரங்களில் பெரும்பாலானவர்கள் வசிக்கிறார்கள். நாட்டின் மக்கள் தொகையில் பாதி பேருக்கு முதல் தவணை தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ளது. பொது முடக்கமும் படிப்படியாக விலக்கிக் கொள்ளப் பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். சமூக இடைவெளியை பின்பற்றுவது, மக்கள் கூட்டமாக சந்திப்பதை தவிர்ப்பது மற்றும் முகக்கவசம் மற்றும் கைகழுவும் திரவங்களை பயன்படுத்துவது இன்னும் கொஞ்ச காலத்துக்கு தொடரவேண்டும். கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்கள் விரைவில் தடுப்பூசிகள் செலுத்திக் கொள்வதை உறுதி செய்ய மாநில அரசுகளுக்கு ரோட்டரி சங்கங்கள் உதவ வேண்டும்.

இந்தியாவில் போலியோவை ஒழிப்பதற்கு ரோட்டரி எடுத்த முயற்சியில் நீங்கள் முக்கியப் பங்காற்றினீர்கள். கோவிட் தடுப்பூசி நடவடிக்கைகளில் ஏதேனும் ஒற்றுமை அல்லது வேறுபாடுகள் இருக்கின்றனவா?

போலியோ தடுப்பு நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் வசிக்கும் சில பகுதிகளில் எதிர்ப்பு இருந்தது. மதத் தலைவர்களின் ஆதரவுடன் அவர்களை சமாதானப்படுத்தி தடுப்பூசி செலுத்திக்கொள்ளச் செய்தோம். போலியோ ஒழிப்பு நடவடிக்கையில் இதுபோன்ற பிரச்னைகளும் இருந்தன. இவற்றை கடந்துதான் இந்தியா போலியோ இல்லாத நாடாக உருவானது. இந்த சமயத்தில் நான் உலேமா கமிட்டியின் தலைவராக இருப்பதால், முன்கூட்டியே திட்டமிட்டு செயல்பட்டதால் முஸ்லிம் சமூகத்தினரின் எதிர்ப்பே இல்லாமல் கோவிட் தடுப்பூசி செலுத்துவதை உறுதி செய்தோம். ஒரு சவால் என்னவென்றால் போலியோ தடுப்பூசி 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கே செலுத்த வேண்டியிருந்தது. கோவிட் தடுப்பூசியானது ஒவ்வொரு இந்திய இளைஞருக்கும் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தடுப்பூசி போடுவதில் இந்திய அரசு இதுவரை சிறப்பாகச் செயல்பட்டுள்ளது.

இந்த சமயத்தில் கோவிட் பணிக்குழுவினரின் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வருவதற்கு ரோட்டரியின் மூத்த தலைவர்களின் ஆதரவு ஒரு முக்கிய காரணம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கொரோனா என்னும் கொடிய நோயிலிருந்து மக்கள் விடுபட உள்ளூர் அரசாங்கங்களுக்கு ரோட்டரி தலைமையும், மாவட்ட தலைமையும் சிறப்பான முறையில் உதவி வருகிறார்கள் என்பதையும் குறிப்பிட வேண்டும். கடவுள் விருப்பத்தில் இந்தியாவை விரைவில் கோவிட் இல்லாத நாடாக உருவாக்குவதில் நாங்கள் வெற்றி பெறுவோம்.■

Rotary PEOPLE OF ACTION

பெண்களின் நல்வாழ்வில் கவனம்

ரோட்டரி செய்திக்குழு

RC *ஹுப்ளி வித்யாநகர் தலைவர்* Dr *மஹிமா தன்ட் ஒரு பயனாளி தம்பதியுடன்.*

RID3170க்கு உட்பட்ட ஹூப்ளி வித்யாநகர் ரோட்டரி சங்கம் ஏழை பெண்களுக்கு பொருள்கள் சேமிப்பு பெட்டியுடன் கைவண்டிகளை வழங்கியுள்ளது. அவர்கள் இந்த நடமாடும் கைவண்டிகளில் காய்கறிகள், பழங்கள், உணவுப் பொருள்களை எடுத்துச் சென்று விற்று சுயமாக சம்பாதிக்க முடியும் என்றார் சங்கத்தின் தலைவர் டாக்டர் மஹிமா தந்த்.

மற்றொரு முன்முயற்சியாக அந்த சங்கம் RED திட்டத்தின் ஒருபகுதியாக ஹுப்ளியில் உள்ள IBMR கல்லூரி மாணவிகளுக்கு மாதவிடாய் சுகாதார மேம்பாட்டுத் திட்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது. 100 மாணவிகள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு மாதவிடாய் கோப்பைகள் வழங்கப்பட்டன. மாதவிடாய் கோப்பைகள் (menstrual cup) மற்றும் மீண்டும் பயன்படுத்தக் கூடிய சானிடரி நாப்கின்களின் பாது காப்பு மற்றும் சுகாதாரம் குறித்து மாணவிகளிடம் விழிப்புணர்வு பிரசாரமும் மேற்கொள்ளப்பட்டது.■

Rotary PEOPLE OF ACTION

கனவு நூல்கள்

ரஷீதா பகத்

இந்தியா முழுவதும் கோவிட் தொற்றுப்பரவல் காரணமாக தொடர் பொது முடக்கம் அமல்படுத்தப் பட்டதால் கைத்தறி நெசவுத் தொழில் வெகுவாக பாதிக்கப்பட்டது. துணி நெசவு கிட்டத்தட்ட நின்று போனது மட்டுமல்ல, நெசவாளர்கள் ஏஜெண்டுகள் வழியாக கடைக்கு துணி விநியோகமும் சங்கிலித் தொடர்போல் பாதிக்கப்பட்டது. இந்த நெசவுக் கலைஞர்களின் மிகப் பெரிய கவலை என்னவெனில், விநியோக சங்கிலியை மீட்டெடுத்து, கடைகள், வியாபார நிறுவனங்கள் செயல்படத் தொடங்கியிருந்தாலும், நெசவு செய்யப்பட்ட அழகான துணிகளை வாங்க போதுமான நுகர்வோர் முன்வருவார்களா என்பது தான்.

இந்தியாவில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் மற்றும் இடையில் உள்ள பட்டு நெசவாளர்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த கோசா ரக பட்டு நெசவாளர்களும் இதில் அடக்கம். “கோசா” என்ற சம்ஸ்கிருத வார்த்தைக்கு பட்டு என்று அர்த்தம். சத்தீஸ்கர் மாநிலம், ராய்கர் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டு நெசவாளரும் விற்பனையாளருமான கன்னையா தேவாங்கம், “தி பிரின்ட்” என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு கட்டுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்: என்னிடம் 25 நெசவாளர்கள் வேலை செய்கிறார்கள். பொது முடக்கம் தொடங்கியதிலிருந்து அவர்களுக்கு எந்த வேலையும் இல்லை. அவர்களுக்கு கொடுக்க கச்சாப் பொருள்கள் என்னிடம் இல்லை. என்று தெரிவித்துள்ளார்.

கோசா என்பது ஒருவகையான டஸ்ஸார் பட்டு என்று கூறலாம். ஆனால், டஸ்ஸார் பட்டிலிருந்து சற்று மாறுபட்டது. சற்று கடினமாகவும் டஸ்ஸார் போன்று பளபளப்பாகவும் இருக்காது என்கிறார் பிலாஸ்பூர் குயீன்ஸ்

RI தலைவர் சேகர் மேத்தா திட்டத்தை RID மகேஷ் கோட்பாகி, PDG விவேக் தன்கா, ராஷி, RC பிளாஸ்பூர் குயின்ஸ் தலைவர் அர்ச்சனா அகர்வால், திட்டத்தலைவர் ப்ரேர்னா சுரானா மற்றும் சங்க செயலாளர் ஆன்ஜல் அகிச்சா முன்னிலையில் துவக்கி வைக்கிறார்.

ரோட்டரி சங்கத்தின் தலைவர் அர்ச்சனா அகர்வால், RID 3261க்கு உட்பட்ட இந்த ரோட்டரி சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கும் 38 பேரும் பெண்கள். கோசா பட்டு நெசவு செய்யும் பல குடும்பங்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு உதவி செய்யும் ஒரு திட்டத்தை அவர் தொடங்கியிருக்கிறார். இந்த திட்டத்துக்கு கவிதை வடிவில் சப்னோகே தாகே (கனவு நூல்கள்) என்று பெயரிட்டுள்ளார். இந்த திட்டம் கோவிட் தொற்று காலத்தில் பாதிக் கப்பட்ட நெசவாளர் களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் உதவும் ஒரு திட்டமாகும்.

ஏறக்குறைய ஒரு ஆண்டுக்காலமாக அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதற்கான திட்டம் குறித்து சிந்தித்து வந்தேன். ரோட்டரியில் நாங்கள் சேவைத் திட்டங்களைத் தேர்ந்தெடுப்போம். ஆனால், நான் தலைவராக இருக்கும் காலத்தில் மகளிர்க்கு அதிக அதிகாரம் அளித்தலுக்கு முக்கியத்துவம் அளித்து வரும் RI தலைவர் சேகர் மேத்தாவின் பெண்கள் மேம்பாட்டு திட்டத்தில் கவனம் செலுத்த விரும்பினேன் என்றார் அர்ச்சனா. இந்தியர்கள் மகளிர் பலரின் வீடுகளில் உள்ள அலமாரியை அலங்கரிக்கும் அழகான, நேர்த்தியான கோசா பட்டுப் புடவைகளை தயாரிக்கும் நெசவாளர்களின் அவல நிலையை போக்கவே இந்த திட்டம் தயாரிக்கப்பட்டது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ரோட்டரி தலைமை யகத்துக்குச் செல்வதற்கு முன்னதாக தலைவர் மேத்தா இத்திட்டத்தை தொடங்கிவைத்தார். பிலாஸ்பூரிலிருந்து இரண்டு மணி நேர பயணத்தில் உள்ள உம்ரெல்லி என்ற இடத்தை மையமாகக் கொண்டு இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பலமுறை இந்த இடத்துக்குச் சென்று ஆய்வு செய்த பிறகு இங்குள்ள பெண்கள் திறமையாக இருப்பதையும், அவர்களின் தேவை இருப்பதையும் அறிந்து கொண்டேன். இங்குள்ள சிறுமிகள் மற்றும் பெண்களில் பலர் வீட்டை விட்டு வெளியே செல் வதில்லை. அவர்கள் கல்வி கற்காததால் கணவர் அல்லது தந்தையைச் சார்ந்தே உள்ளனர். இங்குள்ள திறமையான கோசாபட்டு நெச வாளர்கள் தான் சத்தீஸ் கரின் மகத்துவம். இந்த உண்மையை கருத்தில் கொண்டு நாங்கள் அவர்களின் நலனை மேம் படுத்த நினைத்தோம் என்றார் அர்ச்சனா.

டஸ்ஸார் பட்டுக்கும் கோசா பட்டுப் புடவை களுக்கும் என்ன வித்தியாசம் என்றால் டஸ்ஸார் பட்டுப் புடவைகள் மெல்லியதாகவும், பளபளப்பாகவும் இருக்கும். ஆனால், கோசா பட்டுப் புடவைகள் சற்று கனமாக இருக்கும். இதில் ரகங்கள் உண்டு. விலை ரூ.6,000 முதல் ரூ.7,000-த்தில் தொடங்கி ரூ.25,000 வரை இருக்கும். ஆனால், பட்டு நெசவாளர்களுக்கு அதிகம் கிடைப்பதில்லை. கோசா பட்டுப்புடவையை நெய்வதற்கு ஒரு பெண்ணுக்கு சுமார் 2 நாள் வரை ஆகும். அதற்காக இவர்களுக்கு கிடைக்கும் கூலி ரூ.400 முதல் ரூ.500 வரைதான். அதுவும் தினமும் நெசவு வேலை இருக்கும் என்று சொல்ல முடியாது என்றார் அர்ச்சனா.

திட்டத்தின் தலைவர் ப்ரேர்னா சுரானா கூறுகையில், சத்தீஸ்கரில் உள்ள ஒவ்வொருவர் வீட்டிலும் கோசா பட்டு பெருமைக்குரிய இடத்தை வகிக்கிறது. கைத்தறி மீதான

எங்கள் காதல், கோசா பட்டு தேசத்தின் எல்லை கடக்கச் செய்துள்ளது. மேலும் இது உலகெங்கிலும் உள்ள ஆடை வடிவமைப் பாளர்களால் பெரிதும் விரும்பப்படுகிறது என்றார்.

இந்த திட்டத்தில் ஈடுபட்டுள்ள நாங்கள் அனைவரும் நெசவு என்பது படைப்பாற்றல், கவனம், பொறுமை மற்றும் ஈடுபாடு கொண்டது என்று நம்புகிறோம். இது தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு அப்பாற்பட்டது. முழுவதும் நெசவு செய்யப்பட்ட பட்டுப் புடவை உண்மையில் அன்பின் உழைப்பால் விளைந்த ஒரு தயாரிப்பாகும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த சேலைகளை நெசவு செய்யும் பல பெண்கள் கல்வி மூலம் தங்கள் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த விருப்பம் தெரிவித்ததால் சங்க உறுப்பினர்கள் நெகிழ்ந்து போனார்கள். நான் கணினி கற்க விரும்புகிறேன் என்று ஒரு இளம் பெண் சொன்னார். பின்னர் ஐந்து பெண் குழந்தைகளுடன் ஒரு குடும்பம் இருந்தது. அவர்களுக்கும் எங்கள் உதவி தேவைப்பட்டது. நாங்கள் ஒரு பெரிய திட்டத்தை சர்வதேச மானிய உதவி மூலம் செயல்படுத்த உறுதிபூண்டுள்ளோம். ஒருவேளை அது செயலுக்கு வந்தால் இந்த பெண்களின் திருமணத்திற்கு நாங்கள் உதவ முடியும். அவர்கள் மட்டுமல்ல, வேறு இளம்பெண்களின் திருமணத்துக்கும் உத வுவோம் என்றார் அர்ச்சனா. இவர் ஒரு வழக்குரைஞர் மட்டுமல்ல, ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகிறார்.

எங்களது சங்கம் அனைத்து மகளிர் சங்கமாக இருப்பதால் பெரிய அளவில் உறுப்பினர்களிடமிருந்து நிதியுதவி பெறுவது சாத் தியமில்லை. எனது கணவர் அருண் அகர்வால், பட்டயக் கணக்காளராக இருக்கிறார். அவர் பிலாஸ்பூர் மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவராக இருந்தவர். நான் தனிப்பட்ட முறையில் இத்திட்டத்திற்காக ரூ.2 லட்சம் வழங்கியுள்ளேன். எங்கள் சங்க உறுப்பினர்கள் 1,000 பேருக்கு தடுப்பூசி செலுத்தும் வகையில் தடுப்பூசி முகாம் நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

நீங்கள் எப்படி ரோட்டரிக்கு வந்தீர்கள் என்று கேட்டதற்கு, ரோட்டரி மீதும் அதன் செயல் பாடுகள் மீதும் எனக்கு எப்போதும் ஒரு ஈடுபாடு உண்டு. முதலில் நான் குடும்பத் தலைவி யாகவே இருந்தேன். பின்னர் ரோட்டரியில் சேர்ந்தேன். கடவுள் எங்கள் குடும்பத்துக்கு திறமையையும் செல்வத் தையும் கொடுத்திருக்கிறார். நமது சமூகத்தில் தேவைக்கும் சேவைக்கும் வாய்ப்புகள் உள்ளன. எனவே நம்மால் முடிந்த உதவியை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று நினைத்தேன்.

இந்த திட்டத்துக்கு கவிதை நடையில் பெயர் வைத்துள்ளதற்காக அவரை நான் பாராட்டினேன். அதற்கு அவர், இந்தப் பெண்களின் அனைத்தும் நெசவு தொடர்பானது என்பதால் இது பொருத்தமான தலைப்பாக இருக்கும் என்று நாங்கள் முடிவு செய்தோம் என்று பெருமையுடன் குறிப்பிட்டார் அர்ச்சனா.

இந்த பெண்கள் தாங்கள் நெசவு செய்யும் பட்டுப் புடவைகளை நல்ல

விலையில் விற்கும் வகையில் ஒரு இணைய வழி தளத்தை எங்கள் சங்க உறுப்பினர்கள் உருவாக்கி வருகிறார்கள். இந்த இணைய தளத்துக்கு www.sapnokedhaage.com என்று பெயரிடப் பட்டுள்ளது. எங்கள் திட்டத்தில் சுரி மற்றும் ஷிவானி உள்பட மூன்று கிராமங்களில் மையம் ஏற்படுத்தப்படும். பெண்கள் டிஜிட்டல் கல்வியை விரும்புவதால் ஒவ்வொரு மையத்திலும் ஐந்து கணினிகள் மற்றும் எம்பிராய்டரி இயந்திரங்களை நிறுவ திட்டமிட்டுள்ளோம். தையல் மற்றும் எம்பிராய்டரி பயிற்சி வகுப்புகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும். இதன் மூலம் அவர்கள் தங்கள் வருவாயை பெருக்கிக் கொள்ள முடியும். கோசா பட்டுப் புடவைகளை சந்தைப்படுத்த கைவினைக் கலைஞர்கள் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளோம் என்றார் பிரேரணா.

டிஜிட்டல் வழிக் கல்வியை கற்பிப்பதற்காக RILM அமைப்பின் ஒரு அங்கமான TEACH திட்டத்தின் மூலம் ஒரு ஆசிரியரை நாங்கள் தாற்காலிக அடிப்படையில் நியமிப்போம். மேலும் அவர்களது குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியும் கற்றுக் கொடுக்கப்படும். அதன் மூலம் அவர்களுக்கு எதிர்கால நம்பிக்கையை ஏற்படுத்துவோம் என்றார் அர்ச்சனா.

எங்கள் சங்கம் ஒரு சிறிய நிதி உதவி அமைப்பையும் நிறுவ திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் சிறு தொழில் தொடங்கும் பெண்களுக்கு கடனுதவி வழங்க முடியும். எங்களிடம் பல திட்டங்கள் உள்ளன. பெண்களுக்கு அதிகாரமளிக்கவும், இவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தவும் ரூ.30 லட்சம் வரையிலான சர்வதேச மானிய உதவிக்காக விண்ணப்பிக்க திட்டமிட்டுள்ளோம்.

கடந்த ஆகஸ்ட் மாதம் தேசிய கைத்தறி தினத்தன்று RI தலைவர் சேகர் மேத்தா இத்திட்டத்தை தொடங்கி வைத்ததன் மூலம் இதை மிகப்பெரிய, துணிச்சல் மிகுந்த திட்டமாக உருவாக்குவதற்கான உத்வேகத்தை நாங்கள் பெற்றுள்ளோம் என்று அர்ச்சனா தெரிவித்தார். இதற்கான நிகழ்வில் ராஷி மேத்தா, RID மகேஷ் கோட்பாகி, RI உறுப்பினர் மேம்பாடு தலைவர் கமல் சங்வி, DG சுனில் பாதக் (RID 3261), மற்றும் PDG மற்றும் MPயான விவேக் தன்ஹா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்று அர்ச்சனா மேலும் கூறினார்.

எங்களது திட்டம் உம்ரெல்லி கிராமத்தை மையமாக வைத்தே செயல்படுத்தப்படும். இந்த கிராமம் பிலாஸ்பூரிலிருந்து 2 மணி நேர பயணத் தொலைவில் உள்ளது. மேலும் அருகில் உள்ள கிராமங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றார் அர்ச்சனா.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

Rotary PEOPLE OF ACTION

அரசுடன் இணைந்து ஒட்டுமொத்த நகரத்துக்கும் தடுப்பு மருந்து வழங்கியது RC கொடைக்கானல்

ரஷீதா பகத்

கோவிட் நோய்ப் பரவலின் முதல் மற்றும் இரண்டாவது அலைகளின் போது கொடைக்கானல் மலைப்பகுதி கடுமையான முடக்கத்துக்குச் சென்ற நேரத்தில், RC கொடைக்கானல், RID 3000, உறுப்பினர்கள் செயலில் இறங்கினார்கள், உள்ளூர்ச் சமூகத்தின் துன்பத்தைக் குறைக்கும் நோக்கத்தைக் கொண்ட பல சமூக சேவைத் திட்டங்களை நடத்தினார்கள்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் க்ரிபா சோன்ஸ் சுட்டிக்காட்டுவது போல், கொடைக்கானல் சுற்றுலா நகரமாக இருப்பதால், கோவிடால் அனைத்தும் மூடப்பட்டபோது மிகுந்த பாதிப்பைச் சந்தித்தது. சுற்றுலா இல்லாவிட்டால் இங்கு கிட்டத்தட்ட எந்த வாழ்வாதாரமும் இல்லை. இந்த மதிப்பு மிக்க, 48 ஆண்டுகளாக இயங்கிவரும் சங்கத்தின் சுமார் 50 உறுப்பினர்கள், வாடகைக் கார் ஓட்டுநர்கள், கடைக்காரர்கள், பழம் மற்றும் காய்கறி விற்பனையாளர்கள், விடுதி, உணவகப் பணியாளர்கள் போன்ற சுற்றுலாத் தொழிலை மிகவும் சார்ந்திருந்த அனைவருக்கும் மளிகைப் பொருள் பொதிகளை வழங்கத் தொடங்கினார்கள்.

விரைவில், அது ஒரு மிகப் பெரிய திட்டமாக ஆனது. பணம் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால், அது வந்துவிட்டது, பல நாட்களுக்கு நாங்கள் உள்ளூர் மக்களுக்கு நிறைய உணவளித்தோம். முதல் கட்டத்தில் சுமார் ரூ.14 லட்சம் மதிப்புள்ள உணவுப் பொதிகள் நான்கு மாதங்களுக்கு வழங்கப்பட்டன. நோய்ப்பரவலின் உச்சியில் சுற்றுலா முற்றிலும் நின்று இந்த மலைப்பகுதி முடக்கப்பட்டபோது, சுமார் 2,500 பேருக்கு நாங்கள் உணவளித்தோம். நோய்ப்பரவலின்போது உள்ளூர்ச் சமூகத்துக்கு உதவுவதற்காக RC கொடைக்கானல் உறுப்பினர்கள் மொத்தம் ரூ.1.13 கோடி திரட்டினார்கள், செலவழித்தார்கள்.

அடுத்து, மார்ச் மாதம் தொடங்கி, உறுப்பினர்கள் கோவிடுக்கு எதிரான தடுப்பு மருந்து வழங்கலைத் தொடங்கினார்கள், இதற்காக, அரசுடன் ஓர் உறுதியான கூட்டணியை அமைத்தார்கள். இந்தக் கூட்டணியால், ஒட்டுமொத்தக் கொடைக்கானல் மக்கள்தொகையும் இந்த வைரசுக்கு எதிராகத் தடுப்பு மருந்து பெற்று விட்டது என்று நாங்கள் பெருமையுடன் கூறுகிறோம் என்கிறார் க்ரிபா.

நடுவில் நான்கு மாதங்கள் நாங்கள் கொஞ்சம் மூச்சுவிட்டுக்கொண்டோம், தோழமையை வளர்த்தோம், சில நிகழ்வுகளை நடத்தினோம், அதன் பிறகு, இரண்டாம் அலை முதல் அலையைவிட மிக மோசமாக எங்களைத் தாக்கியது. மீண்டும்

இடதிலிருந்து: *முன்னாள் சங்க செயலாளர் ஜஸ்வந்த், தலைவர் G பாலா, முன்னாள் தலைவர்கள் செல்வகுமார் மற்றும் க்ரிபா சோன்ஸ்.*

நாங்கள் சேவையில் ஈடுபட்டோம் என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

சுற்றுச்சூழலில் கவனம்

இந்த ஆண்டு முதன்மைக் கவனம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் ரோட்டரியின் ஏழாவது கவனப் பகுதியில் உள்ளது என்கிறார் சங்கத் தலைவர் G பாலா. பேரார்வம் மிக்க சுற்றுச்சூழல் வல்லுனரான பாலா, 1985ல் பழனி மலைகள் பாதுகாப்பு அவை தொடங்கப்பட்டதிலிருந்து அதன் முக்கியப் பங்காக இருந்து வந்துள்ளார், 1990களில் அவரையும் மற்ற அவை உறுப்பினர்களையும் பேட்டி எடுத்ததும், சிந்திக்காமல் செய்கிற செயல்பாடுகளால் மலைப்பகுதிகளில் ஆபத்தான வகையில் உண்டான சரிவு, அதனால் இந்தப் பகுதியின் மென்மையான சூழலியலில் உண்டான பாதகமான தாக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்திய தொடர் கட்டுரைகளை தி இந்தியன் எக்ஸ்பிரஸில் எழுதியதும் இந்த எழுத்தாளருக்குத் தெளிவாக நினைவுக்கு வருகிறது.

இந்த ஆண்டு, எங்கள் சங்கத்தின் முக்கியத் திட்டங்களாக இருக்கப்போகிறவை, கொடை ஏரி மறுசீரமைப்பு, ஆற்று மேலாண்மை, ஓடை ஆய்வுகள். கொடை ஏரி சுற்றுலாவால் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளது, நன்னீர் ஏரிக்குள் வருவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

பம்பார் ஆற்றை மறுசீரமைப்பு செய்யும் பணியையும் இந்தச் சங்கம் செய்ய விரும்புவதாக அவர் தொடர்ந்து கூறுகிறார். இந்த ஆண்டு இந்தச் சங்கத்தின் இன்னொரு திட்டம், கொடை ஏரிக்கான ஒரு பஞ்சைப்போல் இருக்கிற ஜிம்கானா சதுப்பு நிலப் பகுதியைப் பாதுகாத்தல்'' என்று விளக்குகிறார் முன்னாள் தலைவர் செல்வகுமார். கொடை ஏரியைச் சுற்றிலும் வேலி உள்ளது. ஆனால் துரதிருஷ்டவசமாக, சதுப்பு நிலப் பகுதி திறந்துள்ளது. இதனால், அங்கு ஆக் கிரமிப்புகள் நிகழ்கின்றன, அத்துடன், கட்டுமானப் பொருட்களும் அங்கு போடப்படுகின்றன.

இதனால், எங்கள் ரோட்டரி சங்கம் சதுப்பு நிலப்பகுதியைச் சுற்றி வேலி அமைக்கவும், எல்லைப் பகுதிகளில் மரங்களின் அழகான, அடர்ந்த பசுமைப் பாதுகாப்பை வழங்கவும் திட்டமிட்டுள்ளது என்று தொடர்ந்து கூறுகிறார் பாலா. சுமார் 2 கிமீ வேலியைக் கொண்ட இத்திட்டத்துக்கு சுமார் ரூ.40 லட்சம் செலவாகும்.

உள்ளூர்ச் சுற்றுச்சூழலுக்கு இது மிகவும் முக்கியம்; நாங்கள் ஏற்கெனவே ஆய்வுகளை நடத்தி விட்டோம், தரவுகளைத் திரட்டி ஒரு வலுவான திட்டத்தை உருவாக்கி விட்டோம். ஆனால், எங்களுக்கு அரசு அனுமதி தேவை. அதற்கான விண்ணப்பத்தை நாங்கள் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரிடம் வழங்கிவிட்டோம்'' என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்தச் சங்கம் தத்தெடுத்த பெரங்காடு என்ற பழங்குடியினக் கிராமத்தில் சுமார் 37 குழந்தைகளுக்குச் சங்க உறுப்பினர்கள் உணவு வழங்கி வருகிறார்கள் என்று தொடர்ந்து கூறுகிறார் க்ரிபா. ஏதோ காரணத்தால், இந்தக் குழந்தைகள் அரசின் மதிய உணவுத் திட்டத்தில் சேர்க்கப் படவில்லை. அதனால், நாங்கள் பணம் திரட்டி அவர்களுக்கு ஊட்டச் சத்துள்ள மதிய உணவு வழங்கு கிறோம், இதற்கு எங்களுக்கு மாதம் ரூ.15,000 செலவாகிறது.

இந்தச் சங்கம் இந்தப் பகுதியில் உள்ள பழங்குடியினச் சமூகங்களின் நலனில் தொடர்ந்து கவனம் செலுத்து கிறது என்றார் RID 3000ன் உதவி ஆளுநர், RC கொடைக்கானலுடைய முன்னாள் தலைவரான ராஜ்குமார் ராமன். இவர் சங்கத் தலைவராக இருந்த ஆண்டில் (2016–17) நாங்கள் கொடைக்கானலில் இருந்து சுமார் 22 கிமீ தொலைவில் உள்ள வெள்ளாங்குளம் என்ற பழங்குடியினக் குக்கிராமத்தைத் தத்தெடுத்தோம். அங்கு நலப் பராமரிப்பு மற்றும் எழுத்தறிவு நிலையை மேம்படுத்த நாங்கள் முயன்றுவருகிறோம். ஆனால், என் ஆண்டின் சிறந்த திட்டம், என் கனவுத் திட்டம், இந்தக் கிராமத்துக்குச் சூரிய ஒளி மின்ஆற்றலைக் கொண்டு வந்தது. அதைக் கண்டு கிராம மக்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். அவர்களுடைய முன்னோர்கள் 250 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்த தாகவும், இப்போதுதான் தங்கள் வீடுகளில் முதன்முறை மின்சாரத்தைக் காண்பதாகவும் அவர்கள் சொன்னார்கள்.

சூரிய ஒளி மின்ஆற்றலால், கிராமத்து மக்கள் தங்கள் மொபைல் தொலைபேசிகளுக்கு மின்னேற்றுவதற்கு இன்னொரு கிராமத்துக்குச் செல்ல வேண்டிய தில்லை. இத்திட்டத்துக்குச் சுமார் 4 லட்சம் செலவானது. ஊட்டியில் அரசுப் பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்த என் தந்தையின் நினைவாக நான் இதற்கு நிதியளித்தேன். எங்களுடைய இந்தப் பணியால் 32 குடும்பங்கள் பலன் பெற்றன'' என்கிறார் ராமன்.

இந்த ஆண்டு, RID 3000 DG R ஜெயக்கண் எழுத்தறிவு, சுற்றுச் சூழல் பகுதிகளில் பழங்குடியினக் கிராமத்து மக்களுக்கு உதவுவதற்காகச் சில சிறப்புத் திட்டங்களை வகுத் துள்ளார் என்றார். அதனால், கொடை ஏரியைத் தூய்மைப்படுத்துவது எங்களுடைய மிக முக்கியமான திட்டமாக உள்ளது என்று தொடர்ந்து கூறுகிறார் இவர்.

வல்லாகுளம் கிராமத்தில் (வலதிலிருந்து) மீரா ராஜ்குமார், RID 3000 துணை ஆளுநர் ராஜ்குமார் ராமன், வஸந்த், ஜஸ்வந்த், கார்திக் மற்றும் சங்கத்தலைவர் பாலா.

தலைவர் பாலா, க்ரிபா இதுபற்றித் தொடர்ந்து பேசுகையில், முடக்கமானது கொடைக்கானல் மக்கள்தொகை முதன்மையாகச் சுற்றுலா வருவாயைச் சார்ந்திருப்பதன் பாதகமான பக்கத்தை வெளிப்படுத்தியதாகவும், RILM திட்டத்தின்கீழ் கல்வி நிலைகளை மேம்படுத்துதலில் ரோட்டரியன்கள் கவனம் செலுத்துவதாகவும், தொழில் சார்ந்த பயிற்சி வகுப்புகளை அமைப்பதாகவும் கூறினார்கள்

இங்குள்ள உள்ளூர் மக்களில் கிட்டத்தட்ட எல்லாரும் தங்கள் வாழ்வாதாரத்துக்குச் சுற்றுலாவைச் சார்ந்துள்ளார்கள் என்பதை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்குக் கோவிடின்போது நாங்கள் உணர்ந் தோம். அதனால், அவர்களுக்கு மாற்றுகளை வழங்குவதுபற்றி நாங்கள் சிந்திக்கவேண்டும். அதனால், ஒரு சுய உதவிக் குழுவை நடத்தும் சுரக்ஷா பந்தன் என்ற NGO உடன் இணைந்து நாங்கள் பெண்களுக்கான தையல் மற்றும் பூத்தையல் வகுப்புகளை நடத்தப்போகிறோம், அவர்கள் தங்கள் பொருட்களை விற்பதற்கான சந்தைப்படுத்தல் ஆதரவையும் வழங்கப்போகிறோம் என்கிறார் பாலா.

சங்கத்தினர் கோவிட் நிவாரணமாக மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்குகின்றனர்.

இந்தச் சங்கம் தத்தெடுத்துள்ள பெரங்காட்டில் பல நல்ல விஷயங்கள் நடக்கத் தொடங்கியுள்ளன. எங்கள் சங்கத்தின் ஆதரவால் நல்ல சாலைகள், நீர் வழங்கல் மற்றும் மின்சாரம் ஆகியவை இந்தக் கிராமத்தை எட்டியுள்ளன என்று தொடர்ந்து கூறுகிறார் செல்வகுமார்.

முன்னாள் சங்கச் செயலாளர் ஜஸ்வந்த், நாங்கள் அங்கு ஒரு புதிய வகுப்பறையையும் கட்டியுள்ளோம், தொழில் சார்ந்த பயிற்சி மையம் ஒன்றை அமைத்துள்ளோம், சம்பாதிப் பவரை இழந்த ஒரு குடும்பத்துக்கு ஒரு பாதுகாப்பிடமும் கட்டியுள்ளோம். ஊத்து என்னும் கிராமத்தின் அருகில் உள்ள நாயுடுபுரத்தில் ஒரு பேருந்து நிறுத்தத்தையும் நாங்கள் கட்டியுள்ளோம் என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

உலர்ந்த மலர்களுக்கு புதிய பயன்

ஜெய்ஸ்ரீ

திருமணங்கள், வழிபாட்டுத் தலங்களில் பயன்படுத்தப்பட்ட உலர்ந்த பூக்களுக்கு RID 3030க்கு உட்பட RC நாசிக் கோதாவரி பெரு முயற்சியில் புதிய பயன்பாட்டை கண்டுபிடித்துள்ளது. பயன்படுத்தப் பட்ட அல்லது சந்தையில் விற்பனை யாகாமல் தேங்கி இருக்கும் பூக்களை மக்களிடமிருந்து பெறுவதற்கு வசதி யாக சங்கம் பல்வேறு இடங்களில் தொட்டிகளை வைத்துள்ளது. இந்த மலர்கள் மறு சுழற்சி செய்யப்பட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த ஊதுபத்திகள், தூப்களாகவும் மற்றும் இயற்கை உரங்களாகத் தயாரிக்கப்படுகின்றன.

கோதாவரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள நாசிக், ஆலயங்கள் நிறைந்த நகரம். இந்த ஆலயங்களுக்கு வழிபடுவதற்காக தினமும் வரும் பக்தர்கள் கடவுளுக்காக மாலை களையும், பூக்களையும் ஏராளமான அளவில் வழங்குகின்றனர். நாள் முடிவில் இந்த பூக்கள் என்னவாகும் என்று யாரும் சிந்திப்பதில்லை. இத்தகைய பூக்கள் டன் கணக்கில் நதிகளில் கொட்டப்படுகின்றன. இதனால் நதிகள் மாசுபடுகின்றன. என்கிறார் சங்கத்தின் தலைவர் ராகேஷ் சிங்கால்.

சங்கத்தின் உறுப்பினரான தீப்தி ஜனோகர்புட், ஷீரடி சாய்பாபா கோவிலில் பழம்பூக்கள் மறுசுழற்சி செய்யப்படும் தகவலை கூறியதுடன் நாமும் அதுபோல் செய்யலாமே என்று யோசனை தெரிவித்தார். அவரது யோசனை ஏற்கப்பட்டது.

சேகரிக்கப்பட்ட பூக்களை தனித்தனியாக பிரிக்க சங்கம் சில பெண்களை வேலைக்கு அமர்த்தி யுள்ளது. அவர்கள் பூக்களில் உள்ள இதழ்களைத் தனியாகவும் காம்புகளைத் தனியாகவும் பிரித்து வெயிலில் காயவைத்து பொடி செய்து அகர்பத்திகளாகவும், தூபங்களாகவும் தயாரிக்கின்றனர். தண்டுகள் மற்றும் மிகவும் காய்ந்துபோன பூக்கள் இயற்கை உரம் தயாரிக்க பயன்படுத்தப்படுகின்றன.

மறுசுழற்சி செய்யப்பட்ட பூக்களிலிருந்து தயாரிக்கப்படும் பொருள்கள் சந்தையில் விற்கப் படுகின்றன. இதிலிருந்து கிடைக்கும் வருவாய் திட்டச் செலவுகளை சமாளிக்கவும், பெண்களுக்கு ஊதியம் வழங்கவும் பயன்படுகிறது என்கிறார் சங்கத்தின் தலைவர் சிங்கால். அருகில் உள்ள கிராமங்களை இணைத்துக் கொண்டு இத்திட்டத்தை விரிவுபடுத்த சங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.■

வாழ்வாதாரத்தை உயர்த்தும் ரோட்டரி

ரோட்டரி செய்திகுழு

கரஞ்சலி கிராம பஞ்சாயத்தில் RC கல்கத்தா ஈஸ்ட் சென்ட்ரல், RID 3291, 20 ஆண்களுக்கு மிதிவண்டிகளும் 10 பெண்களுக்கு தையல் இயந்திரங்களையும் நன்கொடையாக அளித்தது. இவர்களை இந்த சங்கத்தின் RCC சக்துலாபூர் அருணோதய சங்கம் தேர்ந்தெடுத்தது. PDG முகுல் சின்ஹா இவற்றை இந்த ஏழை மக்களுக்கு அளித்தார்.■

PDG *முகுல் சின்ஹா (வலதில்) ஒரு பயனாளியுடன்.*

ஆக்சிஜன் தொட்டியைப் பெறும் சேலம் மருத்துவமனை

RC சேலம் காஸ்மோஸ், RID 2982, சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.30 லட்சம் மதிப்புள்ள 6 கிலோலிட்டர் கடுங்குளிர் முறை ஆக்சிஜன் தொட்டி ஒன்றை நிறுவியுள்ளது. இதை அமைப்பதற்குத் தேவையான நிதி, சங்கத் தலைவர் Dr C சுகவனம் அவர்களுடைய தலைமையின் கீழ் 70 நாட்களில் திரட்டப்பட்டுச் சாதனை படைக்கப் பட்டது. இதைத் தமிழ்நாடு நல அமைச்சர் M சுப்ரமணியம் தொடங்கி வைத்தார்.

இந்தக் கோபுரத்தின் வாழ்க்கைக் காலம் 30 ஆண்டுகள், இது 350 நோயாளிகளுக்கு உயர் தரத்திலான ஆக்சிஜனை வழங்கும். சமீபத்தில் கோவிட் பரவலாகக் காணப்பட்டபோது மிகுந்த வாயு பற்றாக்குறையால் இந்த மருத்துவமனை தடுமாறியது. அதனால், இந்த வசதி இந்த மருத்துவ மனைக்கு ஒரு வரமாக இருக்கும் என்றார் சங்கத் தலைவர்.

வலதிலிருந்து: V *குப்தா, அருண், சங்கத்தலைவர்* Dr C *சுகவனம்,* DG K *சுந்தரலிங்கம்,* S K *ராமச்சந்திரன்,* PDG K S *வெங்கடேசன், ஹித்தேஷ், ராஜேஷ், மனோஜ் சர்மா, பாலா,* Dr *சரவணன் மற்றும் சசிகலா சுகவனம்.*

1997ல் பதிவு செய்யப்பட்ட இச்சங்கம், ஏற்காட்டில் பழங்குடியினத் தவர்களுக்கு வீடுகளைக் கட்டுதல், கிராமப்புற, பகுதியளவு நகரப்புறப் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டுதல், சில ஆதரவற்றோர் இல்லங்களில் உயிரி-வாயு ஆலைகளை அமைத்தல் போன்ற தன்னுடைய மனிதத் தன்மைத் திட்டங்களுக்காகச் சேலத்தில் நன்கு அறியப்பட்டுள்ளது.■

ரோட்டரி நன்மைகளைச் செய்வதற்கான மேடை

V முத்துகுமரன்

RI தலைவர், பிராந்திய இயக்குநர்கள், மாவட்ட ஆளுநர்களால் உச்சத் திலிருந்து ரோட்டரியன்களை ஊக்குவிக்கதான் இயலும்; ரோட்டரியில் சங்கத் தலைவர்கள் தான் உண்மையான ஆற்றலைக் கொண்டிருக்கிறார்கள், ஏனெனில், அவர்கள் அடித்தளத்தில் அமைப்பை வடிவமைக்கிறார்கள்,'' என்றார் RID மகேஷ் கோட்பாகி.

சென்னையில் RID 3231 நடத்திய மறுமலர்ச்சி என்ற தலைப்பிலான மூன்று நாள் PETS தொடக்க நிகழ்ச்சியில் பேசிய அவர், ரோட்டரி என்பது, நன்கு உணர்வதற்காக நல்லவற்றைச் செய்வதற்காகத் தாங்களாக விரும்பி ஒன்று சேர்ந்து பணம், நேரம் மற்றும் உழைப்பை வழங்குகிற தன்னார்வலர்களுடைய அமைப்பு என்றார்.

பத்தாண்டுகளுக்குமுன் நடை பெற்ற ஒரு மருத்துவ முகாமின் போது, பூஜா என்கிற மெலிந்த, முடங்கியிருந்த 7 வயதுச் சிறுமியைச் சந்தித்ததாகக் கோட்பாகி கூறினார். "அவருடைய கனவைப்பற்றி நான் கேட்டேன், அவர் சொன்னார்: வாழ்க்கையில் என்னுடைய மிகப் பெரிய கனவு, யாருடைய உதவியும் இல்லாமல் நானே கழிப்பறைக்குச் சென்று திரும்பவேண்டும்.''

அந்தச் சிறுமியின் நிலையைக் கண்டு அதிர்ந்த மருத்துவரான அவர் அந்த சிறுமிக்கு அடுத்தடுத்து இரண்டு அறுவைச் சிகிச்சைகளுக்கு ஏற்பாடு செய்தார், அதன்பிறகு, அவருக்குச் சக்கரம் கொண்ட ஒரு நடக்கும் கருவி வழங்கப்பட்டது. அந்த நடக்கும் கருவியுடன் தானாக ஒரு மேற்கத்தியக் கழிப்பறைக்குச் சென்று திரும்பியபோது அவர் சிரித்ததைக் கண்டு நான் நிரந்தரமாக மாறிவிட்டேன்.

பல நாட்களாக வெறும் இணையக் கூட்டங்கள், சமூக ஊடகத்தின் வழியாக வலைப்பின்னல் செயல்பாடு களைத் தொடர்ந்து நேருக்கு நேர் ஒரு கூட்டத்தில் கலந்துகொள்வதை எண்ணி மகிழ்ச்சி தெரிவித்த DG நிர்மல் ராகவன், தோழமை மீண்டும் திரும்பிவிட்டதைத் தொடர்ந்து, இந்தக் கடலோரத் தங்குமிடத்தில் மூன்று நாட்களுக்கு 200க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள், ஆன்கள் மற்றும் ஆன்னெட்களுடன் உரையாடுவதை எண்ணி என் மனைவியும் மகளும் மகிழ்கிறார்கள் என்றார்.

இந்த மாவட்டம் கடந்த இரண்டு மாதங்களில் (ஜூலை, ஆகஸ்ட்) சுமார் 400 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது, இதில் 200 பேர் rotary.org இணையத் தளத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

ஒவ்வொரு சங்கமும் குறைந்தது ஒரு ரோட்டராக்ட் சங்கத்தை ஆதரிக்க வேண்டும் என்றார் PDG சந்திரபாப், மாவட்டச் சங்கச் சேவை இயக்குநர், நிகழ்ச்சித் தலைவர் M ராஜன்பாபு பேசு கையில், நாம் மகிழ்ச்சியான நாட்களை மீண்டும் காண்போம்'' என்று நம்பிக்கை தெரிவித்தார்; மாவட்ட ஆலோசகர் PDG சம்பத்குமார் சங்கத் தலைவர்கள் மிகச் சிறந்த சேவைத் திட்டங்களைச் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார். ■

இடதிலிருந்து: *நிகழ்ச்சி தலைவர்* M *ராஜன்பாபு, மாவட்ட ஆலோசகர்* PDG A *சம்பத்குமார்,* PDG C R *சந்திரபாப், RID மகேஷ் கோட்பாகி, DG நிர்மல் ராகவன் மற்றும் நந்தினி நிர்மல்* RID 3231*ன்* PETS *நிகழ்ச்சியில்.*

சவாலான இலக்குகளை நோக்கி முன்னேறி வெல்லும் ரோட்டரி அறக்கட்டளை

அஜீஸ் மேமன்

இன்று, நாம் அனைவரும் நோய்ப் பரவல் உண்டாக்கிய தொடர்ச்சியான சவால்களைச் சந்திக்கிறோம். ஆனால், இந்த நோய்ப்பரவலைக் கையாள்வதுபற்றிச் சிந்தித்ததால், நாம் செயல் வீரர்களாக உள்ளோம், நீடித்த மாற்றத்தை உருவாக்குபவர்களாக உள்ளோம். அறக்கட்டளையின் வளங்கள் நம்மிடம் உள்ளதால், உலகெங்கும் ஆயிரக்கணக்கான சமூகங்களில் நாம் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரலாம். நம் முயற்சிகளில் சில:

- தடுப்பு மருந்துகள் சமமான முறையில் வழங்கப்படுவதை உறுதிசெய்தல்
- தடுப்பு மருந்துக்கு எதிரான தவறான தகவல்களை எதிர்த்தல்
- கோவிட் வைரஸ் பரவலை மெதுவாக்குதல்

இதுவரை, கோவிட்-19க்கு எதிரான போரில் பன்னாட்டு நல்கைகளின் வழியாக $46 மில்லியனுக்குமேல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஜூன் 30, 2021 வரையில் நம் அறக்கட்டளை நம் சமூகங்களில் நீடித்த தாக்கங்களைக் கொண்டிருக்கும் திட்டங்களுக்காக $5.5 பில்லியனுக்கு மேல் திரட்டி யுள்ளது, முதலீடு செய்துள்ளது என்பதை நாம் அறிவோம். ரோட்டரி உறுப்பினர்கள் உலகெங்கும் தொடர்ந்து அமைதியை முன்னிறுத்துவதற்கும், நோயை எதிர்ப்பதற்கும், தூய நீரை வழங்குவதற்கும், தாய்மார்கள், குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும், கல்வியை ஆதரிப்பதற்கும் மற்றும் உள்ளூர்ப் பொருளாதாரங்களை வளர்ப்பதற்கும் இது ஆற்றல் அளிக்கும்.

முந்தைய ரோட்டரி ஆண்டில் நாம் 410 மில்லியன் என்னும் பெரிய நிதி திரட்டல் இலக்கை அமைத்தோம். ரோட்டரியன்கள் ஒன்றாகச் சேர்ந்து உழைத்து, அறக்கட்டளை

440.9
Million USD Raised by Rotarians

Number of district grants: 467
Total funding: $31.1 million

Number of disaster response grants: 55
Total funding: $3.1 million

Number of global grants: 2,066
Total funding: $130 million

Number of programmes of scale grants: 1
Total funding: $2 million

இந்த இலக்கைத் தாண்டி $440.9 மில்லியன் திரட்ட உதவியுள்ளார்கள். இந்த நிதிகள் உலகெங்கும் இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவது, அமைதியை உருவாக்கு பவர்களுக்கு ஆற்றல் அளிப்பது, மாவட்ட மற்றும் பன்னாட்டு நல்கைகளின் வழியாக நம் கவனப் பகுதிகளில் உறுப்பினர்கள் வழிநடத்தும் திட்டச் செயல்படுத்தல்களை ஆதரிப்பது ஆகியவற்றுக்கான நம் முயற்சிகளை வலுவாக்கியுள்ளன. ரோட்டரியன்கள் மற்றும் நம் அறக்கட்டளையின் நண்பர்களுடைய தாராள மனப்பான்மையால், நாம் 2020–21ல் பன்னாட்டு நல்கைகளுக்கு $143 மில்லியனுக்குமேல் வழங்கினோம். இளம்பிள்ளைவாதத்தை அகற்றுதலுக்கான நல்கைகள் மொத்தம் $152.9 மில்லியன்.

இளம்பிள்ளைவாதத்தை முடிப் பதற்கான போரைத் தொடர்வதற்கு ரோட்டரி உறுப்பினர்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயம், இளம்பிள்ளை வாதத்தை அகற்றுகிற நம் அர்ப்பணிப்புணர்வை நீடிக்கச் செய்வதுதான். மேலும், இந்த ஆண்டு, நாம் TRF நன்கொடை நிறுவல்: 2025க்குள் 2025ஐக் கட்டமைப்பதன்மூலம் உயர்ந்த இலக்கைத் திட்டமிடுகிறோம்: கோவிட்-19 எதிர்வினைச் செயல்பாடு களை ஆதரித்தபடி 2025ஆம் ஆண்டுக்குள் $2.025 பில்லியன் நன்கொடை நிறுவலைக் கட்டமைக்கும் முன்னெடுப்பு இது.

152.9

Million USD

Total funding for Polio eradication grants

Grants and Funding

இன்டராக்ட், ரோட்டராக்ட் மற்றும் ரோட்டரி சங்க உறுப்பினர்கள், பிற ரோட்டரி பங்கேற்பாளர்களிடையில் நம் உரையாடலை மேம்படுத்துதல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றுக்கான தேவையை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கிடையிலும் உடனுழைப்பை நாம் பெருக்க வேண்டும், குறிப்பாக, ரோட்டரி சங்கங்கள், ரோட்டராக்ட் சங்கங்களுக்கு இடையில்.

நம் ரோட்டராக்டர்கள் டிஜிட்டல் காலத்தில் வளர்கிறார்கள், சமூகத் தனிமைத் தடையைத் தாண்டியும் இணைவதற்கான புதிய வழிகளைக் கண்டறிவதற்கு நாம் அவர்களுடைய திறமையைப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். நம் வருங்காலத்தை வடிவமைப்பதற்கு ரோட்டராக்டர்களை அழைக்க வேண்டிய நேரம் இது.

இணைவது மற்றும் சேவை புரிவதற்கான படைப்பூக்கம் மிக்க, புதுமைச் சிந்தனை கொண்ட வழிகளை உங்களில் சிலர் கண்டறிந்திருப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன், கோவிடுக்குப் பிந்தைய காலத்திலும் நாம் இதைத் தொடரவேண்டும். சில சங்கங்கள் இணையம் மற்றும் நேரடிக் கூட்டங்களின் ஒரு புதிய கலவையைப் பின்பற்றலாம், அவர்களுடைய உறுப்பினர்களுக்கு இது சரிப்படுகிறது என்றால், இதைச் செய்யும் நெகிழ்வுத்தன்மை உண்டு.

ரோட்டரியின் மிகச் சிறந்த பங்களிப்பு, அடித்தட்டு நிலை மாற்றத்துக்கான தொடக்கத்தை வழங்குதல். போலியோப்ளஸ் ஆனாலும் சரி, பன்னாட்டு நல்கைகள் ஆனாலும் சரி, உண்மையான மாற்றத்தை உண்டாக்க ஓர் உறுப்பினருடைய ஒரு யோசனை போதும்.

உங்களுடைய மிகச் சிறந்த சேவைக்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்கிற அதே நேரத்தில், உங்களால் இயன்றதை ரோட்டரி அறக்கட்டளைக்கு வழங்கும்படி நான் கோருகிறேன். இதன்மூலம், பன்னாட்டுப் பொது நலனில் நாம் உண்டாக்கியுள்ள மிகச் சிறந்த முன்னேற்றத்தை இன்னும் முன்னெடுத்துச்செல்லலாம்.

கட்டுரை ஆசிரியர்
ரோட்டரி அறக்கட்டளையின்
அறங்காவலர்களில் ஒருவர்.

ரோட்டரி ஆளுநர்

பர்வீன் ஜிந்தால்

துணித்துறை, RC மொகா ஸ்டார், RID 3090

மாவட்ட ஆளுநராக ஆகும் இன்டராக்டர்

இவர் 8ம் வகுப்பில் இருந்தபோது, இவருடைய மிகச்சிறந்த தோழருடைய குடும்பத்தால் பள்ளிக் கட்டணம் செலுத்த இயலவில்லை; அதனால், அந்தத் தோழர் பள்ளிக்கு வர இயலவில்லை; இதைக் கேள்விப்பட்டு இவர் வருந்தினார். ரோட்டரி, அதன் மிகச் சிறந்த பணியைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த நான், அப்போதைய RC மொகா தலைவர் Rtn நந்தா அவர்களிடம் உதவி கேட்டேன். அவருடைய சங்கம் என்னுடைய நண்பருடைய கட்டணத்தைச் செலுத்தியது, அவருடைய மொத்தப் பள்ளிக் கல்வியையும் ஆதரித்தது என்று 1986ல் தன் வாழ்க்கையில் நடந்த திருப்புமுனை நிகழ்வை நினைவுகூர்கிறார் பர்வீன் ஜிந்தால்.

இந்தச் செயலால் தூண்டப்பட்ட இவர் இன்டராக்டராக ஆனார், பின்னர் 1990ல் ரோட்டராக்டர் ஆனார், 1996–97ல் DRRஆகத் தன் மாவட்டத்தை வழிநடத்தினார், நிறைவாக, 2000ல் ரோட்டரியில் இணைந்தார்.

இவருடைய மாவட்டத்தில் ஐந்து சங்கங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரை அழைத்துவாருங்கள் (EOBO) இலக்கை எட்டியுள்ளன, ஒரு சங்கம் தலா இரண்டு உறுப்பினர்களை அழைத்துவரும் பாதையில் உள்ளது. நான் 16 புதிய ரோட்டரி, 32 புதிய ரோட்டராக்ட், 64 புதிய இன்டராக்ட் மற்றும் 128 RCCகளை தொடங்கத் திட்டமிட்டுள்ளேன் என்கிறார் இவர். 1,000 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க இவர் இலக்கு அமைத்துள்ளார்.

இவருடைய TRF இலக்கு $150,000. இவருடைய இரண்டு குழந்தைகள் (மகன் Rtn மயாங்க் ஜிந்தால், மகள் இயாஷிகா ஒரு மாவட்ட இன்டராக்ட் பிரதிநிதி) பல திட்டங்களில் மிகவும் சுறுசுறுப்பாகச் செயலாற்றுகிறார்கள்.

அசோக் K மங்கள்

மின் பொறியாளர், RC பலன்பூர், RID 3054

சுற்றுச்சூழல், நலம் மற்றும் எழுத்தறிவுக்கு உயர் முக்கியத்துவம்

சுற்றுச்சூழல், நலன் மற்றும் எழுத்தறிவில் கவனம் செலுத்தும் அசோக் மங்கள் தன்னுடைய சங்கங்கள் ராஜஸ்தான், குஜராத் முழுவதும் மரம் நடுதல், நல முகாம்களை நடத்தவேண்டும், அதன்மூலம் கிராமப்புறப் பகுதிகளில் ரோட்டரியின் புகழ் மேம்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

சங்கங்கள் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நடும், குடியிருப்புப் பகுதிகளில் பிளாஸ்டிக் குப்பையைத் தூய்மைப்படுத்துவதற்காகக் குறைந்தது 50 PET புட்டி நொறுக்கும் பிரிவுகள் நிறுவப்படும். நாங்கள் 500க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்களை நடத்துவோம், என்று தொடர்ந்து கூறுகிறார் இவர். ஐந்து பன்னாட்டு நல்கைத் திட்டங்கள் தொடங்க உள்ளார். எங்கள் சங்கங்கள் TEACH திட்டங்களைத் தொடங்கும், அவற்றின்மூலம் அரசுப் பள்ளிகளை அணுகும்.

TRF வழங்கலுக்கு $800,000 இலக்கு அமைத்துள்ளார் மங்கள். சங்கங்களில் ஏற்கெனவே உள்ள 7,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் 1,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைச் சேர்த்து 10% வளர்ச்சியைப் பதிவுசெய்ய இயலும் என்று இவர் நம்புகிறார். இனி வரும் ஆண்டுகளில் கலப்பினமாக்கல்தான் வழக்கமாக இருக்கும் என்பதால், நான் பல செயற்கைக்கோள், கடவுச்சீட்டு மற்றும் காரணம் அடிப்படையிலான சங்கங்களை அமைப்பேன்.

1998ல் Rtn நிர்மல் ஜெயின் அவர்களால் தூண்டப் பட்டு இவர் ரோட்டரியில் சேர்ந்தார்.

களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

ரமேஷ் விஷ்வநாத் மெஹெர்

விருந்தோம்பல்

RC **நாசிக் வெஸ்ட்**, RID 3030

கிராமவாசிகளுக்காக மிகப் பெரிய மருத்துவ முகாம்

இவர் கவனம் செலுத்தப்போகும் செயல்பாடுகளில் ஒன்று, ரோட்டரியின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்துதல். இதற்காக, நம் சேவைத் திட்டங்களில் ரோட்டரியன் அல்லாதவர்கள், பிற NGOக்களும் பெரும் எண்ணிக்கையில் ஈடுபடுத்துவோம். இதனால் நம் உறுப்பினர் எண்ணிக்கை மேம்படும், என்கிறார் ரமேஷ் மெஹெர்.

சந்திராப்பூருக்கு அருகில் உள்ள நக்சலைட் பகுதியான கூண்டியா மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள், மருத்துவக்கல்லூரிகள் உதவியுடன் 5 நாள் ரஹத் மருத்துவ முகாம் ஒன்றை நடத்த இவர் திட்டமிடுகிறார். GGக்கள் மற்றும் உறுப்பினர் பங்களிப்புகளின் வழியாக 120க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கான இதய அறுவைச் சிகிச்சை கள், 2,000க்கும் மேற்பட்ட கண் புரை அறுவைச் சிகிச்சைகள் திட்டமிட்டுள்ளார். இவருடைய TRF இலக்கு $500,000.

நாசிக்கிலுள்ள இவருடைய புகழ் பெற்ற விடுதியில் ரோட்டரி கூட்டங்கள் மற்றும் தோழமை நிகழ்வுகள் வழக்கமாக நடத்தப்பட்டுவந்தன. Rtn ஜெயந்த் ஸ்தலேகர் ரோட்டரியில் சேரும்படி இவரைத் தூண்டினார், 1991ல் இவர் ரோட்டரியன் ஆனார்.

K பிரபாகர்

நிறுவனத் தணிக்கையாளர்

RC **ஹைதராபாத் சென்ட்ரல்**, RID 3150

கிராமங்களில் சேவைத் திட்டங்கள்

ஆளுநர் செலவுகள் மற்றும் கொடுப்பனவுகளை RI வாரியம் மிகவும் குறைத்துவிட்டதைத் தொடர்ந்து, தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசத்தின் தொலைதூரப்பகுதிகளில் உள்ள கிராமப்புறப்பகுதிகளுக்கு நாங்கள் சேவைத் திட்டங்களைத் தொடங்குவதற்கு வழக்கமாகச் செல்வதும், ரோட்டரியில் சேரும்படி மக்களை ஊக்குவிப்பதும் இன்னும் கடினமாகிவிட்டது என்கிறார் K பிரபாகர். DGக்கள் கிராமங்களுக்கு அடிக்கடி பயணம் செய்யாவிட்டால் அந்தப் பகுதிகளில் சேவைத் திட்டங்கள் பின்னுக்குச் சென்றுவிடும் என்கிறார் இவர். கிராமங்களில் தாக்கம் நிறைந்த திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு எங்கள் பயணத் தேவைகள், தொடர்புடைய செலவுகள் முக்கியம் என்பதால், எனக்கு வேறு வழியில்லை, GML மற்றும் பிற நிர்வாகத் தலைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைத்தான் நான் மாற்றவேண்டும்.''

இவருடைய இலக்கு, உறுப்பினர் எண்ணிக்கையை 1,500 உயர்த்தி, 30 புதிய சங்கங்களைச் சேர்ப்பது, மொத்தத்தை முறையே 5,400க்கு மேல், 114க்குக் கொண்டுசெல்வது.

சுமார் 15 ரோட்டராக்ட் சங்கங்கள் சேர்க்கப்பட்டு, மாவட்டத்தில் அதன் எண்ணிக்கை 55ஆக உயரும். TRFக்கு இவருடைய இலக்கு, $1 மில்லியன். ஆனால், இவருடைய மிகப் பெரிய கவலை, நோய்ப்பரவலால் கிராமங்களில் ரோட்டரி திட்டங்கள் மிகவும் பாதிக்கப்படுவதுதான், மேலும், தொலைதூரப் பகுதிகளில் நம் பொதுத் தோற்றத்தை நீடிக்கச்செய்வதற்கு, நாம் அங்கு நம் பணியை மீண்டும் தொடங்கவேண்டும்.''

இவர் சொல்லும் இன்னொரு சவால், சில ரோட்டரியன்கள் ஆண்டுக் கட்டணத்தைக் கூடுதலாகக் கருதுகிறார்கள், ஏற்கெனவே உள்ள உறுப்பினர்களைத் தக்க வைப்பது கடினமாக இருக்கும்.'' இவர்களை ஊக்குவிக்கவும் புதிய ரோட்டரியன்களைச் சேர்க்கவும் நான் தொடர்ந்து பயணம் செய்யவேண்டும், ஆனால், இந்தச் செயலைச் சாதிக்க நிதி குறைவு.''

Rtn விஜயலட்சுமி ஷெகாவத் அவர்களால் ஊக்கம் பெற்று 1995ல் இவர் ரோட்டரியில் சேர்ந்தார்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

மின்வழிக்கற்றல் தான் நீடிக்கும்

கிரண் ஜெஹரா

பள்ளிக்கல்வி மாற்றத்தை சந்திக்கிறது. தொற்று நோய் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஸ்மார்ட் போன் மூலமாக இணையவழி வகுப்புகளுக்கு கட்டாயப்படுத்தியுள்ளது என்றார் RID மகேஷ் கோட்பாகி. ஆசிரியர்கள் நவீன தொழில்நுட்பம் தங்கள் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு அவர்களுக்கு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

RID 3132க்கு உட்பட்ட RC சோலாப்பூர் ஏற்பாடு செய்திருந்த “21 ஆம் நூற்றாண்டில் கற்பித்தல்” தலைப்பில் மெய்நிகர்முறையில் நடைபெற்ற கருத்தரங்கில் கோட்பாகி உரையாற்றினார். எதிர்காலத்தில் மாணவர்கள் புத்தகங்களை சுமந்து கொண்டு பள்ளிக்குச் செல்ல மாட்டார்கள். அவர்களிடம் ஒரு கையடக்க கணினி (டேப்லெட்) இருந்தால் போதுமானது. வகுப்பறைகள் டிஜிட்டல் முறையில் நடைபெறும் என்றார். RILM தலைவர் கமல் சங்வி பேசுகையில், கோவிட் தொற்று ஒருவகையில் ரோட்டரியின் எழுத்தறிவு இயக்கத்தின் செயல்பாடுகளை வேகப்படுத்தியுள்ளது. டிஜிட்டல் கற்றல் முறையை தூர்தர்ஷன் மூலம் 15 மில்லியன் குடும்பத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். ஜியோ செல்லிடப்பேசி மூலம் 420 மில்லியன் பயனாளிகள், டாடா ஸ்கை மூலம் 70.26 மில்லியன் குடும்பங்கள் பலன்பெற்று வருகின்றன. மேலும் தீட்சா வலைத் தளம் மூலம் லட்சக்கணக்கானவர்கள் கற்றல் அமர்வுகளில் பங்கேற்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். சிக்கிம் மற்றும் ஹரியாணா அரசுகள் தங்கள் பள்ளிகளில் டிஜிட்டல் முறையிலான கற்றல் மென்பொருளை பதிவேற்ற RILM அணுகியுள்ளன என்றார். உங்களது மாணவர்கள் வயது வந்தவர்கள் படிக்கவும் எழுதவும் கற்றுத்தர அவர்களை நீங்கள் உற்சாகப் படுத்த வேண்டும். இதன் மூலம் இந்தியா விரைவில் இந்தியா 100 சதவீத எழுத்தறிவு பெற்ற நாடாக உருவாக முடியும் என்றார்.

மனநிலையில் மாற்றம் தேவை

கடந்த 2020ம் ஆண்டு சர்வதேச அளவில் சிறந்த ஆசிரியருக்கான விருதை வென்ற ரஞ்சித் சிங் திஸாலே ஒரு விளக்க நிகழ்ச்சியில்

வியட்நாமைச் சார்ந்த ஆசிரியை ஹா அன் புங்.

பேசுகையில், 21ம் நூற்றாண்டு மாணவர்களுக்கு 20ம் நூற்றாண்டின் மனநிலையில் வாழும் ஆசிரியர்கள் வகுப்பறையை மனதில் கொண்டு பாடம் நடத்துகின்றனர். நவீன தொழில்நுட்பம் ஆசிரியர்களுக்கு மாற்றாக முடியாது. ஆனால், டிஜிட்டல் முறை கல்வியில் ஆர்வம் உள்ள மாணவர்களின் தேவைக்கு ஏற்ப ஆசிரியர்கள், தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இல்லை அல்லது இணைய வழி கல்வி கற்பித்தலுக்கான பயிற்சி அவர்களுக்கு அளிக்கப்படவில்லை என்றார் திஸாலே.

தொழில்நுட்பத்தின் உதவியுடன் வகுப்பறை மாணவர்களின் கற்றல் திறன் அடிப்படையில் அவர் QR குறியீடுகளுடன் பாடங்களை வடிவமைத்திருந்தார். “எல்லையில்லா வகுப்பறைகள்” பற்றிய தனது பார்வையை வியட்நாமைச் சேர்ந்த ஆசிரியை ஹா ஆன் புங் பகிர்ந்துகொண்டார். இவர் சர்வதேச அளவிலான சிறந்த ஆசிரியர்களுக்கான இறுதிப் போட்டியாளர்கள் பட்டியலில் இடம்பெற்றவர். அவர் பேசுகையில், தொழில்நுட்ப வளர்ச்சியானது நகரங்களில் உள்ள மாணவர்களுக்கும் கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கு மான இடைவெளியை குறைக்கிறது என்றார். RID 3132ன் PDG ஜுபின் அமாரியா, கருத்தரங்கில் பேசிய பிரமுகர்களின் தகவல்கள் மதிப்பு மிக்கதாக இருந்ததாகக் கூறி நன்றி தெரிவித்தார். இந்த மெய்நிகர் கருத்தரங்கின் மூலம் தாங்கள் பெற்ற அறிவை ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும் என்று ஆசிரியர்களை உற்சாகப்படுத்தினார்.■

சர்வதேச அளவில் சிறந்த ஆசிரியர் விருது பெற்ற ரஞ்சித்சின் திசாலே.

Rotary PEOPLE OF ACTION

பள்ளிக் குழந்தைகளுக்கான அமரும் வசதிகளை மேம்படுத்தியது RID 3080

ரோட்டரி செய்திகுழு

வகுப்பறைகள் நல்ல அமரும் வசதிகளுடன் இருக்க வேண்டும். அப்போது தான் குழந்தைகளுக்கு கற்கும் ஊக்கம் வரும் என்கிறார் DG அஜய் மதன், RID 3080. ஜூலையில் இந்த மாவட்டத்துக்குப் பொறுப்பேற்றபோது, இந்த மாவட்டத்தில் உள்ள பல ரோட்டரி சங்கங்களின் வழியாக அரசுப் பள்ளிகளுக்கு 10,000 இருக்கைகள், மேசைகளை வழங்கத்திட்டமிட்டார்.

ஆகஸ்ட் மாதம் வரை இந்த மாவட்டம் ரோட்டரி சின்னம் பொறிக்கப்பட்ட 2,220 தொகுப்பு ஃபர்னிச்சர்களை அனுப்பியுள்ளது, இதனால் 55 பள்ளிகள் பலன் பெற்றுள்ளன. இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவு, ரூ 1.5 கோடி. இந்தத் தொகுப்புகள் ஒவ்வொன் றிலும் 2 குழந்தைகள் அமரலாம், இவை 7 ஆண்டுகளாவது உழைக்கும் என்பதால், இனி வரும் ஆண்டுகளில் 140,000 குழந்தைகளுக்கு இந்தத் திட்டம் பயன் தரும் என்று நான் மகிழ்ச்சியுடன் கூறுகிறேன் என்கிறார் DG.■

ஏழ்மையிலிருந்து விடுபட உதவும் கல்வியறிவு

வனெஸ்ஸா க்ளாவின்ஸ்கஸ்

இந்தியாவில் முழு எழுத்தறிவுக்கு ஒரு வழியை வகுக்கிறது ரோட்டரி. சேகர் மேத்தா RI தலைவராக ஆவதற்குப் பல ஆண்டுகள் முன்பாகவே, மிகப் பெரிய இலக்குகளை அமைப்பதற்காக அறியப்பட்டிருந்தார்.

சிக்கலான பிரச்சனைகளை வெற்றிகரமாகக் கையாள்பவர் என்று அவர் நற்பெயர் பெற்றிருந்ததால்தான், 2014ல் முன்னாள் RI தலைவர் கல்யாண் பேனர்ஜி இந்தியாவை முழு எழுத்தறிவு பெறச் செய்யும் முயற்சிக்கு அவரைத் தலைமை தாங்கச் சொன்னார். இந்திய அரசு, பல NGOக்களால் சாதிக்க இயலாத ஓர் இலக்கு அது.

ஒரு நாட்டை முழு எழுத்தறிவு பெறச் செய்வது எளிய விஷயம் இல்லை என்று நான் புரிந்து கொண்டேன் என்கிறார் மேத்தா. இவருடைய வரையறையில் முழு எழுத்தறிவு என்பது, 7 மற்றும் அதற்குமேல் வயதானவர்களிடையில் 95% ஒட்டுமொத்த எழுத்தறிவு. (இந்தக் குழுவில் இந்தியாவின் இப்போதைய எழுத்தறிவு விகிதம் 78% என்று மதிப்பிடுகிறது இந்திய அரசு) ஆனால், இந்த விஷயத்தில் நான் காந்தியின் பார்வையை வலுவாக நம்புகிறேன்: நாம் இலக்கைக் கண்டறிந்தால், வழி பின்னால் வரும்.

கணக்காளர், ரியல் எஸ்டேட் உருவாக்குநரான மேத்தா கல்வித் துறையில் எந்த அனுபவமும் இல்லாமல்தான் இந்த முயற்சியில் நுழைந்தார். எனக்கு அதுபற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை, கல்வித் துறையில் எனக்கு எந்தப் பின்னணியும் இல்லை என்கிறார் அவர்.

இதனால், அவர் சுமார் 9 மாதங்கள் வல்லுனர்களிடம் கற்றுக் கொண்டார், பிறகு, இந்தியா முழுவதும் ரோட்டரி சங்கங்களின் எழுத்தறிவு முன்னெடுப்புகளை வலுவாக்குகிற, தரநிலைப்படுத்துகிற இலக்கைக் கொண்ட, லாப நோக்கம் அற்ற ரோட்டரி இந்தியா எழுத்தறிவுப் பணியைத் (RILM) தோற்றுவித்தார்.

இதைச் சாதிப்பதற்காக, RILM சேவைத் திட்டங்களின் ஒரு தொகுப்பை உருவாக்கியது, இந்தியா முழுவதும் உள்ள சங்கங்கள் இந்த அமைப்பின் ஆதரவு, வழிகாட்டுதலுடன் இதைப் பின்பற்றவேண்டும் என்று ஊக்குவிக்கிறது. இந்தத் திட்டங்கள் TEACH என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஐந்து விஷயங்களைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்டுள்ளன: ஆசிரியர்களுக்கு ஆதரவு, மின் கற்றல், வயதுவந்தோர் எழுத்தறிவு, குழந்தைகள் முன்னேற்றம் மற்றும் மகிழ்ச்சிப் பள்ளிகள் (உள் கட்டமைப்பு மேம்பாடுகளில் கவனம் செலுத்துவது).

ஒவ்வொரு பள்ளியும் நம் சொந்தக் குழந்தைகள் மகிழ்ச்சியாகப் படிக்க விரும்பும் பள்ளியாக இருக்கவேண்டும் என்று நாங்கள் நினைக்கிறோம் என்கிறார் 2019 முதல் 2021 வரை RI இயக்குநராக இருந்தவர், மேத்தா RI தலைவரான பின் RILMக்குத் தலைமை தாங்குபவரான கமல் சங்வி.

இந்தியாவின் இளம்பிள்ளைவாத அகற்றல் பரப்புரையை வெற்றி பெறச்செய்த மாதிரியைப் பின்பற்றி, ஒருங்கிணைப்பாளர்கள் TEACH திட்டத்தை நாடுமுழுவதும் உள்ள ரோட்டரி பகுதிகள், மாவட்டங்களில் முன்னிறுத்தினார்கள். RILM ஊழியர்கள் கையேடுகளை உருவாக்கினார்கள், பயிற்சிகளை நடத்தினார்கள், இப்போது, அநேகமாக இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சங்கமும் TEACH திட்டத்தின் ஓர் அம்சத்தையாவது ஆதரிக்கும் ஒரு திட்டத்தில் பணியாற்றுகிறது. இது அழகாக முன்னேறியது என்கிறார் சங்வி. எந்த ஒரு நாடும் மிகச் சிறந்ததாக ஆகவேண்டுமென்றால், அங்கு எழுத்தறிவு மேம்படவேண்டும் என்று ரோட்டரியன்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

நூற்றுக்கணக்கான ரோட்டரி சங்கங்கள், அவர்களுடைய கூட்டாளர் அமைப்புகளுடைய முயற்சிகள் ஒன்று சேர்ந்து பெரிய அளவு பலனைக் கொண்டுவந்திருக்கின்றன. இன்றுவரை, RILMன் ஆசிரியர் பயிற்சியால்மட்டும் 7 மில்லியன் குழந்தைகள் பலன் பெற்றுள்ளார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் ஒட்டுமொத்தத் தாக்கம் மிகப் பெரியது.

பயிற்சியளித்தல், தரநிலையாக்கல், கூட்டுப் பணிகளை வளர்த்தல்: இந்த 3 விஷயங்கள்தான் இந்தத் திட்டத்தை வெற்றிபெறச்செய்கின்றன என்கிறார் மேத்தா. ரோட்டரி இந்தியா எழுத்தறிவுப் பணியின் தாக்கத்தால்

அது நல்ல பெயர் பெற்றுள்ளது, இதனால், சமீபத்தில் அதன் மிகப் பெரிய முன்னெடுப்பு தொடங்கியது: இந்திய அரசுடன் பணியாற்றி, கோவிட்-19 நோய்ப்பரவலால் பள்ளிக் குச் செல்லாத குழந்தைகளுக்கான இலவச மின் கற்றல் உள்ளடக்கத்தை உருவாக்குவது, வழங்குவது.

இந்தியாவில் பல இடங்களில் இணையம் இன்னும் நன்கு நுழைய வில்லை என்று விளக்குகிறார் RILMன் தலைமைச் செயல் மற்றும் வியூக அலுவலர் பிஸ்வஜித் கோஷ். மேலும், பெரும்பான்மை மக்களுக்கு இணையக் கல்வி வழங்குவதற்கு வழி தேடி அரசு தடுமாறிக்கொண்டிருந்தது. இந்த நேரத்தில்தான் ரோட்டரி 1–12 வகுப்புகளுக்கான உயர் தரத்திலான பல்லூடக உள்ளடக்கத்தை உருவாக்க முன்வந்தது என்கிறார் கோஷ்.

இந்த உள்ளடக்கத்தை உருவாக்குவதற்காக RILM ஒரு வீடியோ தயாரிப்பு நிறுவனத்துடன் பணியாற்றியது, இந்தச் செலவு நன்கொடைகள், ஆதரவுகளின்மூலம் பெறப்பட்டது, அதனால், இந்த மின் கற்றல் நாட்டுக்கு இலவசமாகக் கிடைக்கும்.

2020ல் இந்திய அரசு ரோட்டரி ஆதரவு பெற்ற உள்ளடக்கத்தை வகுப்புக்கு ஒன்று எனப் பல TV சானல்களில் ஆங்கிலம், ஹிந்தியில் ஒளிபரப்பத் தொடங்கியது. இந்தப் பாடங்கள் இந்தியா முழுவதும் சுமார் 100 மில்லியன் மாணவர் களுக்குக் கிடைத்தன என்று மதிப்பிடுகிறார் கோஷ்.

இந்தத் திட்டத்தின் இப்போதைய இலக்கு, அதே பல்லூடகப் பாடத்

திட்டத்தை இந்திய மொழிகள் பல வற்றில் மொழிபெயர்ப்பது, இந்த மென்பொருளை இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பொதுப் பள்ளிக்கும் வழங்குவது. நகரங்களைவிடக் கிராமங்களில் கல்வி நிலை சுமாராக உள்ளது என்று விளக்குகிறார் சங்வி. நகரங்களில் உள்ளவர்களுக்குத் தொழில்நுட்பம், அறிவு நன்றாகக் கிடைத்துவிடுகிறது.

மின் கற்றலின் பெரிய அளவிலான வழங்கல் இந்த ஏற்றத்தாழ்வைக் குறைக்க உதவலாம் என்றாலும், ஆசிரியர்கள் மென்பொருளைப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வது முக்கியம். இங்குதான் TEACHல் உள்ள T பயன்படுகிறது. நாங்கள் இந்தியா முழுவதும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கிறோம் என்கிறார் சங்வி. இந்தியா நோய்ப்பரவலால் முடக்கத்துக்குள் சென்றவுடன், இது அவசரமாகச் செய்யவேண்டிய வேலை என்பது வெளிப்படையாகப் புரிந்துவிட்டது என்று தொடர்ந்து கூறுகிறார். பல ஆசிரியர்களுக்கு ஜூமைத் தொடங்குவது எப்படி என்று தெரிந்திருக்கவில்லை.

லாப நோக்கம் இல்லாத இந்த நிறுவனம் கூட்டாளர் நிறுவனங்களுடன் பணியாற்றி மின் கற்றல் பயிற்சியை அளிக்கிறது, இதில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களுக்கு ஒரு விருதும் அளிக்கிறது, விருது பெறுவோரை அவர்களுடைய மாணவர்கள், பள்ளி முதல்வர் தேர்ந்தெடுக்கிறார்கள். அதாவது, ரோட்டரி சங்கங்கள் உள்ளூர் மாணவர்களிடம் கணக்கெடுப்பு நடத்துகிறார்கள், அந்தப் பின்னூட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டைக் கட்டமைப்பவர் விருது பெறும் ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இதில் சரியாக மதிப்பெண் பெறாத ஆசிரியர்கள் சங்க ஆதரவுடன் நடக்கும் வருங்காலப் பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். சிறந்த ஆசிரியர்கள், தங்கள் திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டிய ஆசிரியர்களைப்பற்றி இதன்மூலம் நாங்கள் தெரிந்து கொள்கிறோம் என்கிறார் சங்வி. இதனால் எல்லாருக்கும் நன்மை.

சிறுவர்களிடையில் எழுத்தறிவை மேம்படுத்துவதில் RILM வெற்றி பெற்றிருந்தாலும், இந்தியா முழு எழுத்தறிவு பெறவேண்டுமென்றால், 287 மில்லியன் என மதிப்பிடப் பட்டுள்ள எழுதப் படிக்கத் தெரியாத வயதுவந்தோர் கல்வி கற்கவேண்டும், இந்த எண்ணிக்கை, உலக அளவில் எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்தோர் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

இந்தியாவின் எழுத்தறிவு விகிதத்தை மேம்படுத்தும் அரசு முயற்சிகள் எழுதப் படிக்கத் தெரியாத வயது வந்தோருக்கு நன்கு பயன்படவில்லை என்கிறார் சங்வி. அதனால், RILM ஒரு சிறு பயிற்சிப் புத்தகம், தொடக்கப் புத்தகத்தின் வெளியீட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

வயது வந்தவர்கள் செயல் சார்ந்த எழுத்தறிவை, அதாவது, தெரு அறிவிப்புகளைப் படிக்க இயலுதல், தங்கள் பெயரை எழுதுதல், பிற அடிப்படைத் திறன்கள் போன்றவற்றை நோக்கிய முதல் படியை எடுத்துவைக்க இது உதவும்.

உள்ளூர்ச் சங்கங்கள் இந்தத் தொடக்கப் புத்தகத்தை மாணவர் களுக்கு வழங்குகிறார்கள், ஒவ்வொரு வரும் ஒவ்வொருவருக்குக் கற்றுத் தாருங்கள்'' என்று கேட்கிறார்கள். அதாவது, ஒரு குழந்தையின் குடும்பத்தில் எழுதப் படிக்கத் தெரியாத ஒருவர் இருந்தால், அந்தக் குழந்தை இந்தத் தொடக்கப் புத்தகத்தைக் கருவியாகப் பயன்படுத்தி அடிப்படை விஷயங்களை அவருக்குக் கற்றுத்தரலாம். இதைக் கேட்டுப் பள்ளிக் குழந்தைகள் மகிழ்ந்தார்கள் என்கிறார் சங்வி. அவர்கள் ''அட, நான் ஆசிரியர் ஆகப்போகிறேன்!'' என்றார்கள்.

RILMன் இலக்கு, ஒவ்வோர் இந்தியக் குடிமகனையும் குறைந்தது செயல் சார்ந்த எழுத்தறிவைப் பெறச் செய்வது, தங்கள் சமூகத்தில் அடிப் படை எழுத்தறிவு தேவைப்படும் அன்றாடச் செயல்பாடுகளில் ஈடுபடும் படி செய்வது. நோய்ப்பரவலால் RILM தன்னுடைய இலக்கை இரண்டு ஆண்டுகள் நீட்டிக்க வேண்டியதாகி விட்டது. இப்போது, 2027க்குள் இந்த இலக்கை எட்ட இயலும் என்று இக்குழு நம்புகிறது. அது ஒரு மிகப் பெரிய இலக்கு என்று மேத்தா ஏற்றுக்கொள்கிறார், ஆனால், இந்தியாவில் ரோட்டரி நன்கு வெற்றியடைகிறது என்றும் சொல்கிறார். அதனால், நாம் கனவு காணவேண்டும்.

© Rotary

E9 என்றால் என்ன?

E9 என்றால், பங்களாதேஷ், பிரேசில், சீனா, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ, நைசீரியா, பாகிஸ்தான் ஆகிய ஒன்பது நாடுகளின் தொகுப்பு. உலக மக்கள் தொகையில் பாதிக்குமேல் இந்த நாடுகளில் உள்ளார்கள், பெரிய கல்வி அமைப்புகள் உள்ளன, உலக அளவில் எழுதப் படிக்கத் தெரியாத வயதுவந்தோரில் 70% உள்ளார்கள். இவர்களுடைய ஒட்டுமொத்த முயற்சிகள், உலகக் கல்வி முன்னெடுப்புகளின் வெற்றியைக் குறிப்பிடக்கூடிய அளவு பாதிக்கின்றன.

எழுத்தறிவுத் திட்டங்கள் எங்கு தேவை?

பின்வரும் நாடுகளில் வயதுவந்தோர் எழுத்தறிவு விகிதம் 50%ஐவிடக் குறைவாக உள்ளது: ஆஃப்கானிஸ்தான்; பெனின்; பர்கினா ஃபாசோ; மைய ஆப்பிரிக்கக் குடியரசு; சாட்; கோட் டிவார்; கினி; கினி-பிஸ்ஸௌ; லிபேரியா; மாலி; நைஜர்; சியேரா லியோனி; சோமாலியா; தெற்கு சூடான் .

சிறந்த மாதிரி: *நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷில் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரும் ரோட்டரி இந்தியா எழுத்தறிவுப் பணியை மாதிரியாகக் கொண்ட எழுத்தறிவுத் திட்டங்களில் பணியாற்றுகிறார்கள். (சமீபத்தில், டோகோ-வில் உள்ள உறுப்பினர்களும் இந்தத் திட்டத்தில் ஆர்வம் தெரிவித்தார்கள்.) இதை எங்கு வேண்டுமானாலும் பின்பற்றலாம் என்கிறார் சேகர் மேத்தா.*

கூடுதல் எழுத்தறிவு என்பது குறிப்பாகப் பெண்கள், அவர்களுடைய சமுகங்களுக்கு முக்கியம். படித்த பெண்கள் ஏழைமையிலிருந்து தப்பிக்கிற, தங்கள் குடும்பங்கள், சமுகங்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துகிற வாய்ப்பு கூடுதலாக உள்ளது.

மழையால் பாதிக்கப்பட்ட மஹத்தில் ரோட்டரியின் நிவாரண உதவி

ரோட்டரி செய்திக் குழு

மகாராஷ்டிர மாநிலம், ராய்காட் மாவட்டத்தில் உள்ள தொழில் நகரமான மஹத் கனமழை காரணமாக வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தது. உள்ளூர் ரோட்டரி சங்கங்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் தியோனார் மற்றும் மஹத் ரோட்டரி சங்கங்கள் இணைந்து மழையால் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை ஆய்வு செய்தன. மேலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எந்த விதத்தில் உதவலாம் என்றும் ஆராயப்பட்டது.

தலிவாரே கிராமத்தில் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததால் மக்கள், தங்கள் வீட்டுக் கூரையின் மீது அல்லது மொட்டை மாடியில் அமர்ந்திருந்ததைக் காண முடிந்தது. முதலை உள்ளிட்ட நீர் வாழ் உயிரினங்கள் குடியிருப்புப் பகுதிகளில் காணப்பட்டன. வெள்ளத்தில் சாலைகள், வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. மஹத்தில் உள்ள வசதியான குடும்பத்தினரும் தங்கள் குடியிருப்புகளை காலி செய்து விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு செல்லவேண்டியதாயிற்று. தியோனார் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ராஜேந்திர தத்யே, சங்கத்தின் தலைவர் சுதிர் மேத்தாவுடன் இணைந்து ஒரு நிவாரண உதவித் திட்டத்தை தயாரித்தார். நிவாரண உதவிக்கான தொகை, நாங்கள் ஏற்கெனவே நன்கொடைகள் மூலம் பெற்ற தொகையைவிடக் குறைவாகவே இருந்தது. மஹத் மற்றும் சுற்றுப்பகுதிகளில் வெள்ள மதிப்பீட்டை மஹத் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் தனஞ்சய் அஜகேகர் தயாரித்தார்.

உணவுக்கும் தண்ணீருக்கும் பற்றாக்குறை இல்லை என்று தெரிய வந்தது. ஆனால், பெட்ஷீட்டுகள், போர்வைகள், பிளாஸ்டிக் பாய்கள், துண்டுகள், தலையணைகள், தார்பாலின்கள் உள்ளிட்டவற்றுக்கு தேவை இருப்பது தெரியவந்தது. முதல் கட்டமாக மஹத் நகரின் முக்கிய பகுதிகளிலும் புறநகர் பகுதிகளிலும் வசிக்கும் 200 குடும்பத்தினருக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக மஹத்திற்கு ரேஷன் பொருள்கள் அடங்கிய 500 தொகுப்புகள் அனுப்பிவைக்கப்பட்டன.

தியோனார் ரோட்டரி சங்கத்தின் வெள்ள நிவாரணப் பணிகளுக்கு செம்பூர் ரோட்டரி சங்கம் ஆதரவளிக்க முன்வந்தது. ரோட்ராக்டர்களும் தியோனார் ரோட்டரி சங்க குழுவுடன் இணைந்து மளிகை உள்ளிட்ட நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

திட்டத்தின் தலைவர் ராஜேந்திர தத்யே தமது அனுபவத்தை கூறுகையில், மும்பையில் வசிக்கும் நாங்கள், 250 கி.மீ. தொலைவில் உள்ள பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்ட எங்களுக்கு அதிகாரம் இருந்தது. அதுதான் ரோட்டரியின் சக்தி என்றார். ■

Mahabs 21

FEEL THE HERITAGE

ROTARY INSTITUTE 2021

Zone 4,5,6 & 7 | 10-12 Dec 2021 | Mahabalipuram | Tamil Nadu

TENTATIVE AGENDA FOR YOUR TRAVEL PLAN

EVENTS		DATE	START TIME	END TIME	VENUE
GETS	Inauguration	7.12.21	4:00pm	5:30pm	GRT Radisson Blu
	Valediction	9.12.21	3:30pm	5:30pm	
DGN Training Seminar		9.12.21	9:30am	5:30pm	GRT Radisson Blu
COL Meet					
Dist. Trainers Seminar					
DG Mid - Year Review Meet					
TRF - Dinner		9.12.21	7:00pm onwards		GRT Radisson Blu
TRF - Seminar		10.12.21	9:30am	1:00pm	
Institute Inauguration		10.12.21	3:00pm	6:00pm	Four Points Sheraton
Institute 2nd Day		11.12.21	9:30am	5:30pm	
Institute 3rd Day / Valediction		12.12.21	9:30am	1:00pm	

Shekar Mehta
RI President (2021 -22)

RID.AS. Venkatesh
Convener

PDG.Muruganandam.M (MMM)
Chairman

Come..!!
Feel the Heritage...

REGISTER EARLY..!!

TO AVOID LAST MINUTE RUSH

WELCOME TO Mahabs 21
FEEL THE HERITAGE

> CONNECT, EXPLORE AND BE INSPIRED AT THE LAND OF ALLURING MONUMENTS.

MAHABALIPURAM

Mahabalipuram named after the benevolent king, "Mahabali", is a historic town founded by a Hindu Pallava king – Narasimhavarman between the 3rd and 7th century B.C. Also known as Mamallapuram, the ancient town is a UNESCO world heritage site that lies along the Coromandel Coast of the Bay of Bengal, 37 miles south of Chennai.

The Rathas, The Mandapas, The Descent of the Ganges, Lord Krishna's Butter Ball are the group of royal monuments that shows the architectural genius of the artisans and artists. Panch Rathas, meaning five chariots, are magnificent stone structures, each carved out of a single huge boulder. The shore temple is the one surviving structures of the legendary seven pagodas. The temples were built by the efforts of 3 generations of the Pallava dynasty taking a whopping 200 years to complete the site. Every year classical dance & drama festivals are hosted to preserve & promote the ancient culture which not only offers a visual treat for the eyes but also calms the mind and soothes the soul.

PONDICHERRY (NEAR MAHABS (1 HR 43 MIN (96.0 KM) VIA EAST COAST RD)

Pondicherry, another prominent tourist destination, that is just an hour away from Mahabalipuram, has many buildings, churches, temples and statues that preserves colonial ambience. Sri Aurobindo Ashram, founded by the renowned Freedom Fighter and spiritual philosopher Sri Aurobindo, is one of the most important ashrams of India located in the eastern part of Pondicherry.



KANCHIPURAM (NEAR MAHABS (1 HR 53 MIN (67.8 KM)

Kanchipuram, an ancient pilgrimage city, ruled by the Pallavas and Medieval Cholas, houses the world famous Kamakshi Amman temple. The city is renowned for its hand woven silk sarees. The city has some of the most grand and majestic temples to sweep you off your feet, with their striking architectural marvel. These temples are not only sacred sites, but also a study of the architectural evolution within South Indian style of temple architecture.

HOW TO REGISTER

1. Visit www.riinstitutemahabs21.org
2. Select your District Number and your name
3. Check programmes that you will be attending
4. Select choice of hotels / Check in - Check out dates
5. Select your preferred payment option and complete your registration.

Mahabs 2021
FEEL THE HERITAGE

www.riinstitutemahabs21.org

PDG.MURUGANANDAM. M (MMM)
Chairman | +91 - 93825 50001

PDG.SURENDRA BOMMIREDDY
Co-Chair | +91 - 98481 05690

PDG.MADHAV CHANDRAN.R
Secretary | +91 - 98460 31667

PDG.KANNAN.RVN
Chair - Registration | +91 - 73737 66666

PDG.PINKY PATEL
Chair - Promotion | +91 - 9376210325

SUPPORT (MMM'S OFFICE)

PRIMARY SUPPORT:
Rtn.Sareesh Agarwal : +91 - 90255 05051

SECONDARY SUPPORT:
Rtn.Pavithra : +91 - 91599 90345
Rtn.Ruthi Rani : +91 - 93825 50006
Kaneeza : +91 - 98416 77403

மருத்துவ முகாம்களை நடத்தி ரோட்டரி நாள் கொண்டாடிய RID 3012

ரோட்டரி செய்திகுழு

ஆகஸ்ட் 29 அன்று ஒரு மிகப் பெரிய ரோட்டரி நாள் நிகழ்ச்சியில் சுமார் 100 மருத்துவ முகாம்களை நடத்தியது RID 3012, இதில் 126 சங்கங்களும் பங்கேற்றன, 50,000க்கும் மேற் பட்டோர் பலன் பெற்றார்கள். இந்த முகாம்களில் நோயாளிகளுக்குக் கண் மற்றும் விழித்திரைப் பரிசோதனைகள், பல் பரிசோதனை, மேமோகிராஃபி (முலை ஊடு கதிர்ப் படச் சோதனை), புற்றுநோய் பரிசோதனை, ECG மற்றும் எலும்புக் கனிம அடர்த்திப் பரிசோதனை உள்ளிட்ட பல பரிசோதனைகள் இலவசமாகச் செய்யப்பட்டன.

முன்னதாக, ஊடகத்துறை யினரிடம் ரோட்டரி நாள் நிகழ்ச்சி களை அறிமுகப்படுத்திப் பேசிய DG அசோக் அக்கர்வால், மாவட்டம் முழுவதும் இருக்கும் அனைத்துச் சங்கங்களும் பல இடங்களில் மருத்துவ முகாம்கள், ரத்த தான முகாம்கள், கோவிட் தடுப்பு மருந்து வழங்கல் விழிப்புணர்வுப் பேரணி, பிற சேவைத் திட்டங்களை நடத்தும் என்றார். இந்தச் சங்கங்கள் 150 விளம்பரப் பலகைகளை அமைத்து, வானொலி, பிற அச்சு ஊடகங்களில் பரப்புரைகளை நடத்தி இந்த நல முகாம்களைப்பற்றிய விழிப்புணர்வைப் பரப்பின. காஜியாபாதில் கோவிட் தடுப்பு மருந்து வழங்கலைப்பற்றிப் பேசும் ஒரு மிதிவண்டிப் பேரணி நடத்தப் பட்டது. உள்ளூர் கூங சானல்களில் பல ரோட்டரி நிகழ்ச்சிகளைப்பற்றிய அறிவிப்புகள் வழங்கப்பட்டன.

TB நோயாளிகளைத் தத்தெடுத்தல்

ரோட்டரி நாளுக்காக, காச நோயால் துன்பப்படும் 1,000 குழந்தைகளைத் தத்தெடுத்தது RID 3012, இவர் களுடைய மொத்தச் சிகிச்சையையும் சங்கங்கள் ஏற்க்கும். மீரட், UPக்கு அருகில் உள்ள பஞ்சி கிராமத்தில் இருக்கும் சரக் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆய்வு மையத்துக்கு ஒரு மருத்துவ உதவி வண்டி நன்கொடையாக வழங்கப்பட்டது. எங்கள் ரோட்டரி நாள் திட்டங்கள் மிகப் பெரிய பொதுத் தோற்றச் செயல்பாடாகும், ஒரே நாளில் இவை 1 கோடிக்கும் மேற்பட்ட மக்களுக்கு உதவின என்றார் DG அக்கர்வால். இந்த மாவட்டத்திலுள்ள சங்கங்கள் நலத் துறை, தனியார் மருத்துவமனைகள் ஆதரவுடன் 100,000க்கும் மேற்பட்ட மக்களுக்குத் தடுப்பு மருந்து வழங்கியிருப்பதாகவும், இந்த எண்ணிக்கை நாள்தோறும் உயர்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

ஏழைகளுக்கு நல அட்டைகள்

ரோட்டரி நாளை முன்னிட்டு,

கண் மருத்துவ முகாமில் DG அஷோக் அகர்வால் (இடதிலிருந்து 4வது).

PDG J K *கௌர் RC சோனிபட் மிட்டவுன் அறிமுகப்படுத்திய சுகாதார அட்டைகளை ஏழை பெண்களுக்கு வழங்குகிறார்.*

முறையான மருத்துவப் பராமரிப்புக்குச் செலவழிக்க இயலாத நலிந்த குடும்பங் களுக்கு ரோட்டரி ஆயுஷ்மான் நல அட்டை களை (RAHC) வழங்கியது RC சோனிபட் மிட்-டவுன், RID 3012.

இந்தச் சங்கம் சோனெபட்டில் 19 மருத்துவமனைகளை இந்தத் திட்டத்தில் இணைத்துள்ளது, இவர்கள் RAHC பலன் பெறு வோருக்குத் தலா ரூ.50க்கு OPD, மருத்துவ ஆலோசனைகளை வழங்குவார்கள், ஆய்வக, நோய் கண்டறிதல் பரிசோதனைகளை 50% தள்ளுபடியில் வழங்குவார்கள். நாங்கள் 1,000 குடும்பங்களுக்கு நல அட்டைகளை வழங்கவுள்ளோம், இதனால் சுமார் 4,000–5,000 மக்கள் பலன் பெறுவார்கள் என்றார் சங்கத் தலைவர் ராகேஷ் தேவ்குன். இந்தத் திட்டத்தை PDG J K கௌர் தொடங்கிவைத்துச் சுமார் 300 அட்டைகளை வழங்கினார். PP சந்தீப் ஜெய்ட்லி இந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.■

நேபாளில் ரோட்டரியின் கோவிட் நிவாரணப் பணிகள்

கோவிட் இரண்டாவது அலையின் போது கண்டகி மாகாணம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கொரோனா நோயாளிகள் அதிக அளவில் பலியானார்கள். இதையடுத்து நேபாளத்தில் பொகாராவில் உள்ள 7 ரோட்டரி சங்கங்கள் ஒன்றிணைந்து கோவிட் பணிக்குழுவை ஏற்படுத்தியது. மருத்துவமனைகளில் போதிய படுக்கை வசதிகள் இல்லாமலும், ஆக்சிஜன் பற்றாக்குறை காரணமாகவும் பல நோயாளிகள் உயிரிழக்க நேரிட்டதாக RID 3292 மாவட்டத்தின் IPDG கிரன்லால் சிரேஸ்தா தெரிவித்தார். ஆக்சிஜன் உருளைகள் வழங்கும் வங்கியை தொடங்கும் நோக்கில் பொகாரா சங்கங்கள் “ஜீவன் கோ ஆஷா” திட்டத்தை தொடங்கின. திருப்பித்தரப்படும் என்ற உறுதியுடன் பொது முடக்கத்தின் போது மூடப் பட்டிருந்த பட்டறைகள், தொழிற் சாலைகளிலிருந்து ரோட்டேரியன்கள் சிலிண்டர்களை சேகரித்தனர். ஆக்சிஜன் வங்கியிலிருந்து மருத்துவ மனைகளுக்கு ஆக்சிஜன் உருளைகள் விநியோகம் செய்யப்பட்டன. இதன் மூலம் மருத்துவமனைகள் கொரோனா நோயாளிகள் அதிகம் பேருக்கு சிகிச்சை அளிக்க முடிந்தது.

இடதிலிருந்து: *மணிப்பால் மருத்துவ கல்லூரி தலைவர் திலீப் அகர்வால்,* PDG *கிரண்லால் சிரேஸ்தா, போக்கரா மேயர் மன் பஹதூர் மற்றும் சங்கத் தலைவர் ஜிதேந்திர சிக்டெல் ஆக்சிஜன் செறிவூட்டியுடன்.*

RIDs 3523, 6250, 7080, நேபாள்-சீனா நட்புறவுக்கழகம், தைவானில் உள்ள சங்கங்கள் மற்றும் இதர அறக் கட்டளைகள் ஆதரவுடன் இவை வழங்கப்பட்டன. வுட்ஸ்டாக் ஆக்ஸ்போர்டு, கனடா ரோட்டரி சங்கங்கள், ஹவாயில் உள்ள RID 7080, RID 6250 ரோட்டரி மாவட்டங்கள் இந்த திட்டத்துக்கு ஆதரவாக இருந்தன. ஜப்பானில் உள்ள RID 2450 2 லட்சம் முகக்கவசங்களை வழங்கின.

பொகாராவில் உள்ள மணிப்பால் பயிற்சி மருத்துவமனை உதவியுடன் ரோட்டரி மணிப்பால் கோவிட் மையம் ஒன்றும் ஏற்படுத்தப் பட்டது. இதன் மூலம் ஆக்சிஜன் உருளைகள், ஆக்சிஜன் செறிவூட்டிகள், வெப்பநிலை அறியும் கருவி, தனிநபர் பாதுகாப்பு உடை, கையுறைகள், கைகழுவும் திரவங்கள் விநியோகம் செய்யப்பட்டன என்றார்.■

Go Green

வாழ்க்கை முறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் “ஸ்மார்ட் ஹோம்”

ப்ரீத்தி மெஹ்ரா

நவீன தொழில்நுட்பங்கள் பல நன்மைகளையும் புதிய வாழ்க்கை முறையை தழுவத் தயாராக இருப்பவர்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கையை உறுதிப்படுத்துகிறது.

பசுமை எரிசக்தி இயக்கத்தின் இதயமாக புதிய கண்டு பிடிப்புகள் இருந்துவருகிறது. சில நேரங்களில் கற்பனைக்கு அப்பாற்பட்டு நாம் தேர்வு செய்துகொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. நவீன தொழில் நுட்பங்களைத் தழுவத் தயாராக இருப்பவர்களுக்கு எளிமையான மற்றும் பாதுகாப்பான வாழ்க்கையை உறுதிப்படுத்துகிறது. மூத்த குடிமக்களுக்கு அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில்நுட்பம் சிலநேரங்களில் வரப்பிரசாதமாக இருக்கலாம். உதாரணமாக மனதில் நினைத்ததை செயல்படுத்துவதற்கான இணையவழி தொழில் நுட்பத்தை பின்பற்றாமல் இருந்திருந்தால் ஸ்டீபன் ஹாக்கிங் சாதனை புரிந்திருக்க முடியாது. வீட்டில் எப்போதும் பரபரப்பாக வேலை செய்பவர்களுக்கும், ஏன் அலுவலகம் செல்பவர்களுக்கும்கூட உயர் தொழில்நுட்பம் உதவியாக இருக்கிறது. ஆம், நாம் இப்போது ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் ஸ்மார்ட் ஹோம்ஸ் கருத்தை முன்வைத்துதான் பேசுகிறோம்.

சூரிய சக்தி, காற்றாலை மின்சக்தி, மழைநீர் சேகரிப்பு தவிர வீட்டை இயந்திரமயமாக்குவது ஒரு நல்ல வழி. பருவநிலை, பாதுகாப்பு, விளக்குகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களை ஒரே கருவியில் நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். வீட்டில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் இருக்கும் நிலையில் இவை பெரும்பாலும் ஒரு கண்காணிப்பு சாதனத்துடன்

இணைக்கப்படுகின்றன. இது நாம் வெளியில் இருக்கும்போது நமது அன்புக்குரியவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும். இயந்திரமயமாக்கல் நடைமுறைக்கு வந்தாலே இவையெல்லாம் சாத்தியம். நவீன தொழில்நுட்பச் சாதனங்களை வழங்குவதற்கு சந்தையில் பலர் உள்ளனர்.

உங்கள் வீட்டில் எரியும் விளக்குகளுக்கு அல்லது கெய்ஸர் மட்டுமே தொழில்நுட்பத்தை பயன்படுத்த விரும்பினால் அதுவும் சாத்தியமே. ஒரு நல்ல தொழில்நுட்ப வல்லுநர் உங்களுக்கு சரியாக வழிகாட்டுவார். நவீன கருவிகளைப் பயன்படுத்த நீங்கள் உங்கள் வீட்டை மாற்றியமைக்க வேண்டியதில்லை. ஆனாலும், வாடிக்கையாளர்களுக்கு ஸ்மார்ட் ஹோம் அமைத்துத் தருவருதற்கு பிரத்யேகமான நிறுவனங்கள் உள்ளன. அவர்கள் நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உங்களுக்கு நவீன வசதிகளை செய்து தருவார்கள். இவை பற்றி பின்னர் பார்ப்போம்.

இது வசதியானது என்பது தவிர, இதில் நமக்கு கிடைக்கும் லாபம் என்னவெனில் எரிசக்தியின் நுகர்வு குறைவதுடன் மின் கட்டணமும் குறையும். மற்றொரு லாபம் என்ன வெனில் வெளிவிடும் கார்பன் அளவும் கணிசமாக குறையும். இதன் மூலம் உலகை பசுமையாக்குவதிலும் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதிலும் நாம் பங்காற்ற முடியும்.

வீடுகளில் இயந்திரமயமாக்கலை நடைமுறைப்படுத்தினால் அதனால் பல நன்மைகள் உள்ளன. முதலாவதாக எரிசக்தித் துறையில் உங்கள் வீட்டில் எரியும் விளக்குகள், மின்விசிறிகளை நீங்கள் இருந்த இடத்திலிருந்தே கட்டுப்படுத்த முடியும். ஆளில்லாத அறையில் மின்சாரம் வீணாவதைத் தடுக்க முடியும். குடும்ப உறுப்பினர்கள் அறைக்குள் இருக்கும்போது அவை வேலை செய்யும், அறையிலிருந்து வெளியேறிவிட்டால் அவை செயல்படாது. அறையின் வெப்ப நிலையையும் குளிர்சாதனக் கருவிகள் மூலம் கட்டுப்படுத்தலாம். நீங்கள் வெளியில் இருந்தால் அது தானாகவே செயல்பாட்டிலிருந்து நின்றுவிடும். ஜன்னல் மறைப்புகள், விளக்குகள், மின்விசிறிகள் உள்ளிட்டவற்றை தானியங்கி மின்சாதனங்களுடன் ஒருங்கிணைக்க முடியும். ஒரு பொத்தானை அழுத்துவதன் மூலம் நீங்கள் ஜன்னல் மறைப்புகளை மூடவும் முடியும், திறக்கவும் முடியும். அவை ஒரு நாளின் குறிப்பிட்ட நேரங்களில் மூடித்திறக்கும் வகையில் அதன் செயல்திறனை திட்டமிட முடியும்.

தானியங்கி சாதனங்கள் மூலம் நீங்கள் ஒரு சொகுசு வாழ்க்கையை வாழமுடியும். ஏனெனில் அவற்றின் இயக்கம் உங்கள் கையில் உள்ளது. உங்களது கட்டளைப்படி அவை செயல்படும். அவசரமாக வீட்டை விட்டு வெளியில்செல்ல நேர்ந்தாலோ அல்லது விடுமுறை நாள்களை கழிக்க வெளியில் சென்றாலோ உங்கள் வீட்டில் உள்ள அனைத்து மின்சாதனங்களின் இயக்கத்தை நிறுத்திவைக்கவும் அல்லது தேவையான மின்னணு சாதனங்கள் மட்டும் செயல்படவும் வைக்க முடியும். இது வீட்டின் பாது காப்பை உறுதி செய்வதால் நீங்கள் கவலை இல்லாமல் வெளியில் சென்று வரலாம்.

டோஸ்டர்கள், மைக்ரோவேவ் ஓவன்கள், டிரையர் மற்றும் சார்ஜர் போன்ற உபகரணங்களின் மின்சார கம்பிகள் பிளக்கிலேயே தொடர்ந்து இருக்கும்போது அவை சுவிட்ச் ஆஃப் செய்யப்பட்டிருந்தாலும் குறிப்பிட்ட அளவு மின்சாரத்தை வெளியேற்றும் என்பது நாம் அறிந்ததே. சில மதிப்பீட்டுகளின்படி மின் கட்டணத்தில் ஐந்து முதல் பத்து சதவீதத்தை இவை குறிக்கும். ஆனால், வீட்டில் நாம் நிர்மாணிக்கும் தானியங்கி சாதனங்கள் இந்த மின்சாதனங்களின் மின்சார கம்பிகளை பிளக்கிலிருந்து எடுக்கப்படாமல் இருந்தாலும் எரிசக்தி பயன்பாட்டை குறைக்க உதவுகிறது.

IOT அடிப்படையிலான தானியங்கி நடைமுறைகள் மிகவும் பிரபலமானவை. ஸ்மார்ட் வீடுகளுக்கான நவீன வசதிகள், அதை பெறுவது எப்படி என்பது குறித்து கூகுள் செயலிக்குச் சென்றால் பல தகவல்களை தெரிந்துகொள்ள முடியும். குறிப்பாக நீங்கள் வசிக்கும் இருப்பிடத்துக்கு தகுந்த வசதிகளை தேடிக்கண்டுபிடித்து பெற முடியும். 'ஸ்மார்டிஃபை' என்ற நிறுவனத்தை தொடர்பு கொண்ட போது நெகிழ்வுத்தன்மையுடன்கூடிய மின் கம்பிகள் கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது தெரியவந்தது. அதாவது மின்சாதன இணைப்புகள் வெளியில் தெரியாமல், மின் கம்பிகள் வெளியில் தொங்காத வகையிலும் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஸ்மார்ட்நெர்டு என்ற நிறுவனத்தை தொடர்பு கொண்டபோது அதிலும் நவீன மின்சாதங்கள் பட்டியல் ஏராளமாக இருப்பது தெரியவந்தது. IOT செயல்பாட்டு முறையில் ரிமோட் சர்வர்கள் இணைய தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் வீட்டில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டுள்ள சென்சார் (உணர் கருவிகளை) கருவிகளை இதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். பிரதான கட்டுப்பாட்டு கருவி ஈதர்நெட் கேபிள்களுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. சென்சார்கள் இதன் மூலம் கட்டளைகளைப் பெற்று செயல் படும். 'ஸ்மார்டிஃபை' நிறுவனம் அடிப்படை, மேம் பட்ட மற்றும் ப்ரீமியம் என மூன்று வகைகளில் தானியங்கி கட்டமைப்புகளை வகைப்படுத்தியுள்ளது. நமது தேவை மற்றும் செயல்பாட்டுக்கு ஏற்ப இவற்றின் விலைகளில் மாற்றம் இருக்கும்.

இன்று பெரும்பாலான பசுமைக் கட்டடங்களில் ஸ்மார்ட் வீடுகளுக்கான அம்சங்கள் கட்டுமானத்துடன் இணைந்துள்ளன. மேலும் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப அவற்றில் புதுமைகள் புகுத்தப் படுகின்றன. ஆனால், தனித் தனியான வீடுகளிலோ அல்லது பழைய குடியிருப்புகளிலோகூட உங்கள் வீட்டை ஒரு ஸ்மார்ட் வீடுகளாக மாற்றுவது அதிக செலவு பிடிக்கக்கூடியது அல்ல. உங்களுக்கு சொகுசான வாழ்க்கையே தருகிறது.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

இசையும் & இனிமையும்

உழைப்பால் உயர்ந்து நிற்கும் பண்டிட் ஜஸ்ராஜ்

V ராமநாராயணன்

ஹைதராபாதுடன் தொடர்புடைய ஹிந்துஸ்தானி இசைப் பிரியர்களுக்கு கடந்த நூற்றாண்டின் 60 மற்றும் 70கள் ஒரு பொற்காலமாக இருந்தது. ஹெல்த் லீக் மைதானங்கள், இரட்டை நகரங்களின் திறந்தவெளி அரங்குகள் மற்றும் ரவீந்திரநாத் கலையரங்குகளில் உயர்தரமான இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நீங்கள் உள்ளூர் இசைக் கலைஞர்களுடன் நண்பர்களாக இருந்தால், அவர்களின் இல்லங்களில் அல்லது சிறிய அறைகளில் குருவுக்கு அஞ்சலி செலுத்தும் இசை நிகழ்வுகளில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றிருக்கலாம்.

மாலினி ராஜுர்கர் அல்லது பீம்சங்கர் ராவ் போன்ற திறமையான இசைக் கலைஞர்களை நீங்கள் சந்தித்து இருக்கலாம். கிரிஷ் வாஸல்வார் மற்றும் சந்திர சேகர் ஸ்வாமி போன்றவர்கள் சில சமயங்களில் குருவுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கலாம். அது உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்காது. ஏனெனில் வழக்கமாகவே அவர்கள் குரு பண்டிட் ஜஸ்ராஜுடன், பண்டிட் மோதிராம் நினைவு அஞ்சலி வருடாந்திர இசை நிகழ்ச்சிக்கு வருபவர்கள். அதன்பின் பண்டிட் மோதிராம்-பண்டிட் மணிராம் சமோரா ஆகியோரின் நினைவு அஞ்சலி நிகழ்ச்சியிலும் பங்கேற்றுள்ளனர். பண்டிட் மோதிராம் ஜஸ்ராஜின் தந்தை, மணிராம் அவரது சகோதரர். இருவரும் ஜஸ்ராஜின் குருவாக கருதப்படுபவர்கள்.

1970களில் சகோதரர்கள் மணிராம் மற்றும் ஜஸ்ராஜ் ஒன்றாக நிகழ்ச்சிகளில் பாடுவார்கள். சில நேரங்களில் அவர்களுடன் மற்றொரு சகோதரர் பிரதாப் நாராயணனும் பங்கேற்பார். ஹைதராபாத் நிகழ்ச்சிகளில் பார்வையாளர்களும்

அறிவுபூர்வமாக இருந்தார்கள். மூன்று சகோதரர்களும் மேடையில் பாடும்போது அவர்களை பாராட்டும் திறம் பெற்றவர்களாக இருந்தனர். ஆனால், அவர்களில் இளையவரிடம் ஒரு சிறப்புத் தன்மை இருந்ததையும் அவர்கள் நன்கு அறிவார்கள். பிசிறில்லாத அவரது கணீர் குரல், அவர் தேர்ந்தெடுத்து பாடும் ராகங்களின் ஆழம், தாளக்கட்டுப்பாடு மற்றும் அவரது உடல்மொழி ஆகியவை ரசிகர்களை சொக்கவைத்தது. ஒரு பிரபல பாடகருக்கு இணையான வரவேற்பை அளித்தனர். அவரின் ஜோக், ஹடாணா மற்றும் பைரவி ராகங்கள் இசைப் பிரியர்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்தியது. அவை ரசிகர்களின் மனதில் நீங்காத இடம் பிடித்தது. அந்த இசை இதயத்திலும், மனதிலும் பல நாட்கள் எதிரொலித்தது.



பிற கரானாக்கள் அல்லது ஹிந்துஸ்தானி இசைப்பள்ளிகளிலிருந்து கிடைத்த சங்கதிகள் தும்ரி மீது அவருக்கு இருந்த ஆர்வம், ஹவேலி இசையில் அவருக்கு இருந்த ஈடுபாடுகள் மற்றும் அவர் பக்தி இசைக்கு கொடுக்கும் முக்கியத்துவம் மற்றும் ஆண்-பெண் இணைந்து பாடும் ஜுகல்பந்தி ஆகியவை குறித்து பலரும் விமர்சனம் செய்தனர். ஆனால், அவரது இசைத் திறமை, அவருக்கு பெரும்பாலான ரசிகர்களிடையே இருந்த வரவேற்பு சிறந்த பாடகர்களான ஆமீர்கான், பீம்சென் ஜோஷி போன்றவர்களுக்கு இருந்த இடத்துக்கு அவரை இட்டுச் சென்றது.

இவையெல்லாம் அவருக்கு எதிர்காலத்தில் கிடைத்த புகழ். ஆனால் பத்தாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலங்களில் ஒரு சிறந்த பாடகர் உருவாகிறார் என்ற நிலையில் எனது பார்வையில், அவரது இசையின் உச்சம் தூய்மையானது, சுத்தமான இசையைத் தவிர வேறு இல்லை என்ற கருத்தினால் நான் குழப்பமடையவில்லை.

1980-களில் கலாக்ஷேத்ரா அரங்கத்தில் மறக்கமுடியாத இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கு ருக்மிணி தேவி அருண்டேல் முதல்வரிசையில் அமர்ந்திருந்ததால், அவர் உலக இசைக்கலைஞர்களை உருவாக்குவதற்காக தனக்குள்ளேயே ஆழமாகச் செல்லத் தூண்டினார். சிறுவனாக இருக்கும்போது ஜஸ்ராஜ் தன்

ஒரு நிகழ்ச்சியின் தொடக்கத்தில் அவருக்கு இருமலும், தொண்டை வலியும் இருந்தது. அவர் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டு தொண்டை சரியாக 15 நிமிடங்கள் இடைவெளி வேண்டும் என்று கோரினார். பின்னர் மேடைக்கு வந்த ஜஸ்ராஜ், கணீரென்ற குரலில் பாடி பார்வையாளர்களை அசத்தினார்.

தாயின் மீது மிகுந்த பக்தி கொண்டவர். நாளின் இறுதியில் சோர்வடைந்துவிட்ட தாயின் காலை பிடித்துவிடுவார். அன்றைய நிகழ்வில் ருக்மிணி தேவியை மறைந்த தன் தாயின் வடிவிலேயே பார்த்தார். தொப்புள் கொடி இணைப்புக்கான இந்த ஏக்கம் அவரது வாழ்க்கையில் மீண்டும் உருவானதுபோல் தேன்றியது. அதனால்தானோ என்னவோ மாதாகாளிகாவை அவர் உணர்ச்சிப் பெருக்குடன் பாடினார்.

மில்லேனியம் ஆண்டின் தொடக்கத்தில் சென்னை, கிருஷ்ணகான சபாவில் அவரது இசை நிகழ்ச்சி நடைபெற்றது. அவருக்கு உடல்நிலை சரியில்லாத நிலையிலும் இசைக்கச்சேரியை நிகழ்த்தினார். பண்டிட்ஜி மிகச் சிறப்பாக பாடுவார். ஆனாலும் அன்று அவரது குரல் மிருதுத் தன்மையை இழந்துவிட்டது என்று கிசுகிசுக்கப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் அவருக்கு இருமலும், தொண்டை வலியும் இருந்தது. அவர் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டு தொண்டை சரியாக 15 நிமிடங்கள் இடைவெளி வேண்டும் என்று கோரினார். 15 நிமிடங்களுக்குப் பிறகு மேடைக்கு வந்த ஜஸ்ராஜ், கணீரென்ற குரலில் பாடி பார்வையாளர்களை அசத்தினார். மிகப் பெரிய கலைஞர்களால்தான் இத்தகைய அற்புதங்களை நிகழ்த்த முடியும். பல வருடங்களுக்கு முன்பு ஐ.நா.வில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் M S சுப்புலெட்சுமிக்கு இதேபோன்ற நிலை ஏற்பட்டது.

ஹரியாணாவில் இப்போது பதேஹாபாத் என அழைக்கபடும் மாவட்டத்தில் பிலி மண்டோரி என்னும் கிராமத்தில் பிறந்த ஜஸ்ராஜ், தனது குழந்தை பருவத்தை நிஜாமின் ஹைதராபாதில் கழித்தார். அங்கு அவரது தந்தை பண்டிட் மோதிராம் ஹிந்துஸ்தானி இசைக் கலைஞராக இருந்தார். நவாப் மிர் உஸ்மான் அலி கானுடன் உள்ளரங்க நிகழ்ச்சி களில் பாடிவந்தார். 1934ம் ஆண்டு அவர் மறைந்தபோது ஜஸ்ராஜுக்கு வயது நான்கு. மோதிராம் பண்டிட் முன்பு காஷ்மீரின் ராஜா பிரதாப் சிங்கின் சபையில் இசை க்கலைஞராக இருந்தார். சகோதரர் மணிராமிடம் இசை பயின்று வந்த ஜஸ்ராஜ், அவ்வப்போது ஹைதராபாதிலிருந்து குஜாத்தில் உள்ள சனந்திற்கு வந்து மேவதி கரானா பாடல்களை கற்பதற்காக வருவதுண்டு. மற்றொரு சகோதரர் பிரதாப் நாராயணனிடமிருந்து தபேலா வாசிக்கவும் அவர் கற்றுக்கொண்டார். பின்னர் 1946ம் ஆண்டு கொல்கத்தாவுக்குச் சென்றார். அங்கு அவரது குருவும் சகோதரருமான மணிராம் வாய்ப்பாட்டு பாட, ஜஸ்ராஜ் தபேலா வாசித்து வந்தார். தபேலா இசைக்கலைஞராக அவர் வாழ்க்கையைத் தொடங்கிய நிலையில், அவரது நண்பர்கள்,

பிசிறில்லாத அவரது கணீர் குரல், அவர் தேர்ந்தெடுத்து பாடும் ராகங்களின் ஆழம், தாளக்கட்டுப்பாடு மற்றும் அவரது உடல்மொழி ஆகியவை ரசிகர்களை சொக்கவைத்தது.

“உனக்கு நல்ல குரல் வளம் இருக்கிறது. தபேலா வாசிப்பதை கைவிட்டு வாய்ப்பாட்டில் கவனம் செலுத்து” என வற்புறுத்தினர். இந்தியாவின் பிரபல இசைக் கலைஞர்களைப் போலவே ஜஸ்ராஜும் அகில இந்திய வானொலியில் இசைக் கச்சேரிகள் நிகழ்த்தி வாய்ப்பாட்டு கலைஞராக உருவானார். 1952ம் ஆண்டில் காத்மாண்டுவில் அரசவை மன்றத்தில் முதன் முதலாக மேடைக் கச்சேரியை அரங்கேற்றினார். அப்போது தொடங்கிய அவரது இசை வாழ்க்கை அதன்பின் பின்னோக்கிச் சென்றதே இல்லை. மணிராம் தவிர, ஜெய்வந்த் சிங் வகேலா மற்றும் மேவதி கரானா பாடல்களில் புகழ்பெற்ற குலாம் காதிர் கான், ஆக்ரா கரானா பாடல்களில் சிறந்து விளங்கிய சுவாமி வல்லபதாஸ் தாமுல்ஜி ஆகியோரிடமிருந்து இசையின் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டார். 1962ம் ஆண்டு பிரபல திரைப்பட இயக்குநர் V சாந்தாராமின் மகள் மதுராவை திருமணம் செய்துகொண்டார். பின்னர் மும்பைக்கு குடிபெயர்ந்த ஜஸ்ராஜ், இசை வாழ்க்கையை அங்கேயே கழித்தார்.

பீம்சென் ஜோஷி ஒரு முறை இளம் ஜஸ்ராஜிடம், மூத்த கலைஞர் களுக்கு இணையாக பாடுகிறாயே என்று கூறி பாராட்டினாராம். அதை மிகப்பெரிய பாராட்டாக ஜஸ்ராஜ் கருதினார்.

75 ஆண்டு காலத்தில் ஜஸ்ராஜ் தொடர்ந்து தனது இசைத் திறமைகளை விரிவுபடுத்தினார். இளம் இசைக்கலைஞர்களை ஊக்குவித்தார். இந்தியா முழுவதும் பல்வேறு இசைக்கலைஞர்களுடன் இணைந்து செயல்பட்டார். பல சீடர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். உலகம் முழுவதிலும் இளைஞர்களுக்கு ஹிந்துஸ்தானி இசையை கற்பித்தார். மேலும் அயராது இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். ஹிந்துஸ்தானி இசைத் துறையில் மதிக்கப்படும் நபராக உயர்ந்தார். அவருடைய இசையில் பக்தி முக்கிய பகுதியாக இருந்தது. அவரது மேடை கச்சேரியிலும் ஸ்லோகங்கள் மற்றும் பக்தி இசை பிரதான இடத்தை பிடித்தது. அவரது பக்தி இசையில் மயங்கி பலரும் அவரது சீடர்களானார்கள்.

ஸ்ருதி பத்திரிகையின் ஆசிரியராக நான், கொல்கத்தாவில்



வளர்ந்த தமிழரான T S அனந்து எழுதிய ஜஸ்ராஜின் நினைவலைகள் கட்டுரையை வெளியிட்டதன் மூலம் அவரைப் பற்றி சில விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். அவரது சகோதரர் மற்றும் சகோதரிகள் இளம் ஜஸ்ராஜிடம் இசை கற்றனர். பண்டிட் மணிராமுடன் அவர் அங்கு வாழ்ந்து வந்தார். இரவில் சிஷ்யர்கள் வீட்டுச் செல்லும் ஜஸ்ராஜ் அவர்கள் பயிற்சி பெறும்போது தூங்கிவிடுவார். அங்குள்ள பெண்கள் அவரை கேலி செய்வார்கள். ஆனால், அதைப்பற்றி கவலைப்படாமல் ஸோஃபாவில் தூங்கிவிடுவார். பின்னர் எழுந்து அவர்கள் கேலி செய்த வார்த்தைகளை வைத்தே பாட்டுப் பாடுவார்.

பின்னர் பல வருடங்களுக்குப் பிறகு மும்பை சென்ற அனந்துவின் தாயார், ஜஸ்ராஜை தொடர்பு கொள்ள முயன்றார். ஆனால், அவரை வீட்டில் சந்திக்க முடியவில்லை. தனது பெயரை மட்டும் கொடுத்துவிட்டு வந்தார். அது 1988ம் ஆண்டு. அவர் ஒரு பெரிய ரசிகர் பட்டாளத்துடன் பிரபலமாக இருந்தார். ஆனால், திருமதி சுப்பிரமணியத்தின் உள்ளூர் முகவரியைத் தேடி கண்டுபிடித்துப் பார்க்க அவர் பெருமுயற்சி செய்ய வேண்டியிருந்தது.

சிறுவனாக இருக்கும்போது ஜஸ்ராஜ் தன் தாயின் மீது மிகுந்த பக்தி கொண்டவர். ருக்மிணி தேவியை மறைந்த தன் தாயின் வடிவிலேயே பார்த்தார்.

பீம்சென் ஜோஷி ஒரு முறை இளம் ஜஸ்ராஜிடம், மூத்த கலைஞர் களுக்கு இணையாக பாடுகிறாயே என்று கூறி பாராட்டினாராம். அதை மிகப்பெரிய பாராட்டாக ஜஸ்ராஜ் கருதினார். அந்த சாதனையை நிலை நாட்டுவதற்காக வாழ்நாள் முழுவதும் அவர் கடுமையாக உழைத்தார். சங்கீத மார்த்தாண்டன், பத்ம விபூஷண் உள்பட பல விருதுகளை அவர் பெற்றார். அவரது தோற்றம், அவரது அந்தஸ்து, அரவணைப்பான குடும்பம் மற்றும் அவரை சூழ்ந்து நின்ற சிஷ்யர்கள் உண்மையிலேயே ஜஸ்ராஜ் உயர்ந்தவர் என்று சொன்னால் மிகையாகாது.

லதா மங்கேஷ்கருடன் பண்டிட் ஜஸ்ராஜ்.

கட்டுரையாளர் முன்னாள் ஸ்ருதி பத்திரிகையின் ஆசிரியர்.

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

சூரத் பெண்களுக்கு ஆற்றல் அளித்தல்

கிரண் ஜெஹரா

RC சூரத், RID 3060, பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிப்பதற்காகச் சூரத் நகரில் உள்ள அம்ரோலி-யில் ஒரு பயிற்சி மையத்தைத் தொடங்கியுள்ளது. சங்க உறுப்பினர் பாபுபாய் ஜாரிவாலா ஆதரவில் தொடங்கப்பட்டுள்ள இந்த மையத்தைச் சமீபத்தில் DG சந்தோஷ் பிரதான், DGE ஸ்ரீகாந்த் இன்டானி முன்னிலையில் PDG பிரசாந்த் ஜானி தொடங்கிவைத்தார்.

தையல் பயிற்சி மையத்தில் IPDG பிரசாந்த் ஜானி (வலதிலிருந்து 2வது) மற்றும் PDG ஹிமான்ஷு தக்கர் (வலதிலிருந்து 4வது).

முன்னாள் சங்கத் தலைவர் அஜய் மகாஜன் இதுபற்றிப் பேசும்போது, நோய்ப்பரவலால் பலர் தங்களுடைய வேலைகளை இழந்துள்ளார்கள், சூரத் நகரில் இல்ல வன்முறை மிகுந்துள்ளது. இந்தப் பெண்கள் ஒரு புதிய கலையைக் கற்கவும் தங்கள் குடும்பங்களுக்கு நிதி ஆதரவு அளிக்கவும் நாங்கள் அவர்களுக்கு உதவ விரும்புகிறோம் என்றார்.

இந்த இரண்டு மாதச் சான்றிதழ் திட்டத்தின்மூலம், பெண்கள் தங்களுடைய சொந்தத் தையல் தொழிலைத் தொடங்க இந்த மையம் உதவுகிறது, இடம், தையல் இயந்திரம் இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்குகிறது. தலைமைப் பண்புகள், திறன் மேம்பாடு, நிதி மேலாண்மை மற்றும் தொழில்முனைவு ஆகிய வற்றில் அவர்களுடைய திறன்களை வளர்க்கவும் இந்த மையம் உதவும் என்றார் மகாஜன்.

இந்த வகுப்பின் முதல் நாள் ஒரு மறுபிறப்பைப்போல் இருந்தது என்கிறார் அம்ரோலியைச் சேர்ந்த மேக்னா (35). என்னைப்போலவே தடுமாறிக்கொண்டிருந்த பல பெண்களை நான் சந்தித்தேன். அவர்கள் தங்களுடைய வருவாயை மேம்படுத்துவதற்காக இந்தப் பயிற்சியை எடுத்துக்கொள்வது எனக்கு மிகுந்த ஊக்கம் அளித்தது. எனக்கு இங்கு பல நண்பர்கள் கிடைத்துள் ளார்கள். நோய்ப்பரவலின் போது அவருடைய கணவரின் வேலை போய்விட்டதால், அவருக்குப் பதிலாக நான் சிறிய வேலைகளைச் செய்து குடும்பத்தைக் காப்பாற்றவேண்டியிருந்தது. ஆனால் இப்போது, நான் வீடு வீடாகச் சென்று பாத்திரம் தேய்க்கவேண்டியதில்லை என்று தொடர்ந்து கூறுகிற இவர், தான் தைக்கும் ஒவ்வொரு குர்த்தா-வுக்கும் ரூ200 சம்பாதிக்கிறார்.

இப்போது, 7 தையல் இயந்திரங்களைக் கொண்ட இந்த மையம் 25 பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறது. நாங்கள் விரைவில் கூடுதல் இயந்திரங்களைச் சேர்ப்போம், அழகுப் பராமரிப்பு, ஊதுபத்தி செய்தல், கைவினைப் பொருட்கள் செய்தல் ஆகியவற்றில் பெண்களுக்குப் பயிற்சி அளிப்போம் என்கிறார் மகாஜன்.

இந்த மையத்தை இந்தச் சங்கத்தின் RCC இயக்கி நிர்வகிக்கிறது.■

சோப்டா-வின் ரோட்டாகிட்ஸ்

ரோட்டரி செய்திக்குழு

DG ரமேஷ் மெஹர் ரோட்டாகிட்ஸ் சோப்டா தலைவர் ஆரவ் குஜராத்தியிடம் சங்க பதிவு சான்றிதழை வழங்குகிறார்.

33 நாடுகளில் உள்ள 109 ரோட்டரி மாவட்டங்களில் 269 சங்கங்களைக் கொண்டுள்ள ரோட்டாகிட்ஸ் என்பது, 7 முதல் 12 வயதுவரையுள்ள குழந்தைகள் நண்பர்களைக் கண்டறி வதற்கான, சமூகத்தில் முக்கியமான செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான, அதே நேரம் அதைச் செய்யும்போது மகிழ்ச்சியாகவும் இருப்பதற்கான கலகலப்பான, ஆர்வ மூட்டுகிற வழி" என்றார் DG ரமேஷ் மெஹர், RID 3030. முதல் ரோட்டாகிட்ஸ் சங்கத்தை (சோப்டா ரோட்டாகிட்ஸ்) அமைத்த RC சோப்டா-வைப் பாராட்டிய அவர், ஆசிரியர்கள், இன்டராக்டர்கள், ரோட்டராக்டர்கள் மற்றும் உங்கள் சங்க உறுப்பினர்களுடைய உதவி, ஆதரவுடன் இந்தக் குழந்தைகள் பிறருக்கு உதவுதலில், ஆர்வமூட்டும் புதிய விஷயங்களைக் கற்பதில் நல்ல அனுபவத்தைப் பெறலாம் என்றார்.

செயலாளர் பூர்வி ஜெயின், பொருளாளர் மனன் குஜராத் முன்னிலையில் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்டார் சோப்டா ரோட்டா கிட்ஸின் பதிவுத் தலைவரான 9 வயது ஆரவ் குஜராத்தி. RC சோப்டா-வின் தலைவர் பங்கஜ் பொரொலெ குழந்தைகளை ரோட்டரி சமூகத்துக்கு வரவேற்கிறோம், இந்த உலகத்தை இன்னும் சிறப்பாக மாற்றுவதற்கு நீங்கள் எங்களுக்கு உதவுவீர்கள் என்றார்.■

2022 ஹூஸ்டன் மாநாடு

ஒரு பெரிய ஓவியத் திரை

மியோகி வால்க்கர்

ஹூஸ்டனுடைய மகிழ்வளிக்கும் அம்சங்களில் ஒன்று, அதன் கண்ணைக் கவர்கிற, இந்நகரின் துடிப்பான, பன்முகத்தன்மை கொண்ட பண்பாட்டை வெளிப்படுத்தும் பொது இடக் கலை. 2022 RI மாநாடு ஜூன் 4–8க்காக நீங்கள் இங்கு வரும்போது, நகரெங்கும் உள்ள சிறப்பான சுவரோவியங்கள், மொசைக்குகளைக் கண்டிப்பாகப் பாருங்கள்.

801சார்ட்ரெஸ் தெருவில் உள்ள Abstract Happy Beach Wall-யில் பாருங்கள். பார்சிலோனாவைச் சேர்ந்த கலைஞர்களான ஜோசென் மற்றும் மினா வரைந்த துடிப்பான வண்ணங்கள் எந்த நாளையும் ஒளிமயமாக்கும். அல்லது, அருகிலுள்ள வரலாற்றுச் சிறப்புடைய மாவட்டத்தில் சந்தைச் சதுரப் பூங்காவைச் சுற்றி நடந்து Houston Is Inspired சுவரோவியத்தைப் பாருங்கள், உயிர்ப்பு நிறைந்த இந்த வடிவமைப்பு மொத்த நகரத்தையும் ஆராயப் போதுமான ஆற்றலை உங்களுக்கு அளிக்கும்.

நீடித்திருத்தலுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள பொதுப் பூங்காவான ஸ்மித்தெர் பூங்காவில் புட்டிகளின் மூடிகள், உடைந்த பீங்கான் ஓடுகள், கிளிஞ்சல்கள், பிற கண்டறியப்பட்ட பொருட்களால் ஆன அழகிய வடிவமைப்புகளை நீங்கள் காணலாம். இந்தப் பூங்காவில் லிண்ட்லெ ஃபிஷ் ஆம்ஃபிதியேட்டரும் உள்ளது; மாட் கிஃப்ஃபோர்ட் என்ற கலைஞர் உருவாக்கிய இந்த நிகழ்ச்சியிடத்தில், பழைய தெரு அறிவிப்புகள், நொறுங்கிய கண்ணாடிகள், பழைய படச் சட்டங்களைக் கொண்டு ஒரு பெரிய மீன் வாய் உருவாக்கப்பட்டுள்ளது.

ஓஷ்மன் தியானத் தோட்டத்தில் நிறைவு செய்யுங்கள், முற்றிலும்வெண்ணிறத்தில் அமைந்த இந்த நிறுவல், நுணுக்கமான மொசைக் தகவல்களைக் கவனிக்கும்படி உங்களைத் தூண்டுகிறது. சமையலறை, உணவு உண்ணும் அறை போன்ற வீட்டுப் பகுதிகளிலிருந்து கிடைத்த துண்டு களை மறுசுழற்சி செய்துள்ள இந்தப் பூங்கா, வீடுபோல் எந்த இடமும் இல்லை என்பதை நிரூபிக்கிறது. அதற்கு ஒரே ஒரு விதிவிலக்கு, ஹூஸ்டன்தான்.

மேலும் தெரிந்துகொள்ள,
convention.rotary.org பாருங்கள்

From RI South Asia Office desk

Rotary Grant Staff contact details: For global grant application and reporting, contact the staff person for the district where the grant activity will take place or, in the case of global grant scholarships, where the scholar candidate originates from.

Grant Type	Submission of	For Districts	Grant Staff Details
Global Grant	Application	2981, 2982, 3000, 3011, 3012, 3090, 3100, 3271, 3272	Sadaf Ajani sadaf.ajani@rotary.org, 847-866-3114
		3110, 3120, 3201, 3203, 3204, 3211, 3212, 3220, 3231, 3232, 3291	Jennifer Berg jennifer.berg@rotary.org, 847-425-5660
		3020, 3141, 3142, 3150, 3160, 3181, 3182, 3190, 3292	Laura Bradley laura.bradley@rotary.org, 847-866-4457
		3281, 3282	Cathleen Evans cathleen.evens@rotary.org, 847-866-3308
		3030, 3040, 3053, 3054, 3060, 3070, 3080, 3131, 3132, 3170, 3240, 3250, 3261, 3262	Chandra Palmer chandra.palmer@rotary.org, 847-866-3183
	Reporting	3000, 3012, 3054, 3132, 3141, 3160, 3182, 3190, 3212, 3231, 3240, 3261, 3291	Sumit William sumit.william@rotary.org, 011-42250150
		3011, 3020, 3053, 3060, 3131, 3142, 3150, 3170, 3181, 3201, 3232, 3250, 3262	Nelson Abraham nelsona.braham@rotary.org, 011-42250116
		2981, 3030, 3070, 3090, 3100, 3110, 3120, 3203, 3204	Sumit Sharma sumit.sharma@rotary.org, 011-42240151
		2982, 3040, 3080, 3211	Roy John roy.john@rotary.org, 011-42250146
		3271, 3272	Sadaf Ajani, sadaf.ajani@rotary.org, 847-866-3114
		3220	Jennifer Berg, jennifer.berg@rotary.org, 847-425-5660
		3292	Laura Bradley, laura.bradley@rotary.org, 847-866-4457
		3281, 3282	Cathleen Evans cathleen.evans@rotary.org, 847-866-3308
District Grant	Applications	All districts	Roy John, roy.john@rotary.org, 011-42250146
	Reporting	3000, 3012, 3054, 3132, 3141, 3160, 3182, 3190, 3212, 3231, 3240, 3261, 3291	Sumit William sumit.william@rotary.org, 011-42250150
		3011, 3020, 3053, 3060, 3131, 3142, 3150, 3170, 3181, 3201, 3232, 3250, 3262	Nelson Abraham nelsona.braham@rotary.org, 011-42250116
		2981, 3030, 3070, 3090, 3100, 3110, 3120, 3203, 3204	Sumit Sharma sumit.sharma@rotary.org, 011-42240151
		2982, 3040, 3080, 3211, 3220, 3271, 3272, 3281, 3292	Roy John roy.john@rotary.org, 011-42250146

For questions about disaster response grants, write to *grants@rotary.org*, and for programs of scale grants, write to *programsofscale@rotary.org*.

Wordsworld

No way out

Sandhya Rao

Powerful nations have long exploited Afghanistan out of greed, self-interest and political gamesmanship. They created the hydra-headed Taliban.

Few in India have shown the gumption that actor Naseeruddin Shah did to call out those in India celebrating the return of the Taliban in Afghanistan. In a video he said, "Even as the Taliban's return to power in Afghanistan is cause for concern for the whole world, there are celebrations among some sections of Indian Muslims. This celebration of the barbarians is no less dangerous." Do you want 'to reform Islam and support modernity' or go along with barbaric practices, he asked. The return of the Taliban presages the return of regressive social mores, the denial of education to children, and the repression of women. There's good reason for growing fears; make no mistake about this.

Having said this, years of political intervention and military invasion by Western nations have made Afghanistan a battle-ground serving greed, self-interest and political gamesmanship. Yes, these and their concomitant death and destruction abound all over the world. Yet, it's different, worse, in Afghanistan.

Farewell Kabul: From Afghanistan to a More Dangerous World by British war correspondent Christina Lamb had been winking at me from the living room shelf for a while. 'One day,' I'd think to myself. The day finally arrived. Published in 2014, and filled with facts and figures, this 640-page book also features stories about real people being targeted by real snipers, and real Chinook helicopters providing cover to troop movement. Embedded with the British forces and then with the US, Christina provides a hard look at the circumstances of the human tragedy that is Afghanistan, and the selfish, often blinkered aggression, both from outside forces and from within. In the end, the story of Afghanistan is the story of killings in cold blood of some people we can hold accountable for the situation and of the majority, both unaccountable and uncountable, whose homes and fields and herds have been blasted out of existence.

There is a phrase for this — collateral damage — often explained away as the 'unfortunate, inevitable' consequence of conflict. In the same way as, I suppose, it is the fallout of a 'war on terror', the purging of rationalists, the threat of suspicion, the fear of 'one god' or 'other gods', the amount of melanin produced by melanocytes that determine the colour of human skin and eyes and hair, the misogynistic hierarchies of social order drawn up by self-serving groups…

Ten-year-old Alam is the central character in *Opium Poppy* published originally in French by Hubert Haddad, and Englished by Renuka George. He and thousands of children like him are hostage to this crop which is the bedrock of both Afghanistan's tattered economy as well as the global drug trade. Alam tries to escape its tyranny by seeking refuge in Paris, where he is crushed by the drug trade. The book, in the words of *Le Monde* journalist Frederic Bobin, "… is a novel on the flouted innocence of children, thrust into a world gone mad … the universal drama of youth, betrayed."

Youth, betrayed. These are horrifying words; they describe the situation among the young people of Afghanistan, with their dreams, ambitions and hopes for the future. Somewhere towards the





end of *Opium Poppy* is a passage that tragically reinforces the nature of this betrayal: 'Alam studies the junkie gravely, as her scrawny frame leans down from a balcony of paradise. Cannabis and alcohol, heroin fumes on an aluminium sheet, ether and even burnt glue, he had tasted them more than once, in Kabul as well as in Istanbul or in the sewers of the station in Rome. All the street kids did it more or less regularly, the thousands of refugees, those who had fled their villages, those who refused to join the insurgents. Their only ambition was to earn enough money and to leave, to strike a deal with a vaguely honest escort, to reach the other world, the one they saw in the pictures awash with joy.' For most of them, these pictures have long burned down.

In some ways, *Afghan Caravan* which fell out of another bookshelf, came as relief. Indeed, this pastiche of writings edited by journalist Safia Shah throws light on many aspects of the Afghanistan conundrum. The first piece, called 'I married an Afghan', is by Morag Murray, a Scotswoman who married the son of an Afghan chief in the early 1920s. Here, she writes about journeying to her husband's home for the first time: 'The road ran through the Khyber Pass. The great rocks, towering boulder upon boulder to heights ranging from 600 to 1000 feet, strike a peculiar terror in the traveller… At the actual frontier there is a 'turnstile' through which one passes into 'No Man's Land'… the gate leading to what is one of the least known and most remarkable countries in the world — a strip of land inhabited by clans who owe allegiance to none but their own chiefs, … always armed and sleeping with their rifles at their sides. Some of the greatest empires the world has ever known have tried to conquer them, in vain.'

In Gen Sir Andrew Skeen's words, the fighters '…come down hillsides like falling boulders … These men are as hard as nails; they live on little, carry nothing but a rifle and a few cartridges, a knife and bit of food… Their power of moving concealed is astounding, not only in moving from cover to cover, but in slipping from light to shadow, and background to background.'

The fighters in Christina's book are armed to the teeth, with a strange and scary tendency to drop their weapons accidentally, even rocket launchers. Many of the Taliban are recruits from Pakistan, Uzbekistan, Chechnya; they represent the rabid and the disgruntled as well as the educated and the ambitious. Corruption is rife; not even aid agencies are spared: 'The UN has its own airline to fly staff in and out of danger spots, so it quickly began its own service from Dubai or Islamabad to Kabul… What I didn't realise was that the millions of dollars to subsidise this service was coming from the money pledged to help Afghanistan.'

Then there are the opium brides. Christina describes meeting Parwin, 15. She is hiding from a 64-year-old drug smuggler to whom she's been pledged by her father because he borrowed $2,000 in return for 24 kilos of opium from his farm. Unfortunately, the harvest yields little. Consider this: the West is determined to end drug trafficking from a country where opium is king. As Helmand's governor Sher Mohammad Akhundzada tells Christina, "The West needs to understand that if we eradicate, many farmers can't discharge their loans and families will have to sell their children."

All this is just skimming the surface: dip into these books and you will learn so much about people, policies and politics. Overriding all the insights is the realisation that Western nations tend to overlook the fact that one size can never fit all: the world comprises different faiths; unique cultural, social, political, economic concerns; and various systems of loyalty. At the same time, oppression and repression are the same in any language, in any faith, in any part of the world. In this context, it may be useful to go back to this column in the June issue, which talks about *Peace in the Age of Chaos*. There are many books, both fiction and nonfiction, featuring Afghanistan. You only have to look.

The columnist is a children's writer and senior journalist.

செயல் நிரம்பிய வாழ்க்கை

பரத் — ஷலன் சவூர்

உடற்பயிற்சியை புத்துணர்ச்சி அளிக்கிற ஒரு தனிப்பட்ட களமாக நீங்கள் ஆக்கிக்கொண்டால், எப்போதும் சோர்வை, முதுமையை, நம்பிக்கையின்மையை உணர மாட்டீர்கள்.

நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் உடற்பயிற்சி செய்யுங்கள். மதியம் 3 மணிக்குமேல் உடல் மேலும் நெகிழ்வடைவதாக ஆராய்ச்சி கூறுகிறது. அந்த நேரத்தில், சிரமமின்றிச் செயல்படும் ஓர் உணர்வு வருகிறது. இதற்கு இன்னொரு காரணம், அந்த நேரத்தில் ஒப்பீட்டளவில் மனம் இதமாக உணரத் தொடங்குகிறது. ஏனெனில், நாளில் பாதி முடிந்து விட்டது, போதுமான வேலைகள் செய்யப்பட்டுவிட்டன, அதனால் நீங்கள் இன்னும் நன்கு உணர்வீகள். இதில் உங்கள் வயது, நிலையும் முக்கியம்.

துடிப்பான 20கள். நீங்கள் உங்கள் உடலைக் கட்டுக்கோப்பாக ஆக்கத் தயாராக உள்ளீர்கள், சிரமப் பட்டு முயன்று தசைகளை நன்கு உறுதியாக்குகிறீர்கள், வளர்க்கிறீர்கள். ஆனால், இதை அளவாகச் செய்யுங்கள். உயர்வுகளைவிட, தொடர்ந்து செய்வதை நோக்கமாகக் கொள்ளுங்கள். உங்கள் ஆர்வம், ஆற்றலைச் சரியாகப் பயன்படுத்தி எலும்பு, தசையைக் கட்டமைக்க ஏற்ற நேரம் இது. ஓடுதல், எடை தூக்குதல், வயிறு சார்ந்த உடற்பயிற்சிகளில் ஈடுபடலாம், விளையாட்டுகளில் நுழைவதற்கும் இது நல்ல நேரம், கால்பந்து, கிரிக்கெட், ஹாக்கி, வலைப்பந்து உடல், மனத்தை விரைவாக ஆக்கும்.

உதவிக் குறிப்பு: மகிழ்ச்சிக் காக விளையாடுங்கள். வெல்வது நல்லது, ஆனால், அதுதான் எல்லாம் என எண்ணிவிடாதீர்கள். டாக்டர் ஆஷ்லெ மான்டாகு ஒரு நிகழ்ச் சியைச் சொல்கிறார்: ஓர் இந்திய டென்னிஸ் விளையாட்டு வீரர் ஓர் ஆஸ்திரேலிய வெற்றியாளருடன் விளையாடினாராம் அந்தப் போட்டியின்போது அந்த ஆஸ்திரேலியர் மிக அழகான வகையில் பந்தை அடித்தாராம். உடனடியாக, அந்த இந்தியர் அனிச்சையாகக் கை தட்டினாராம், அவருடைய செயலின் நேர்த்தி, முழுமையைக் கண்டு மகிழ்ந்து சிரித்தாராம், தன் சொந்த மட்டையைக்கூட மறந்துவிட்டாராம்!

தாகமுள்ள 30கள். இந்த நேரத்தில் உங்களுக்குப் பணி அழுத்தம் இருக்கலாம், நீங்கள் பதவி உயர்வு, குடும்ப வாழ்க்கை இலக்கு களை நோக்கி உழைக்கலாம்… அப்போது சுறுசுறுப்பான நடை அல்லது வெளியில் மிதிவண்டி ஓட்டுதல் நல்லது. உங்களுக்கு நேரம் கிடைக்காவிட்டால், நாள்தோறும் 20 நிமிடங்கள்மட்டும் வீட்டுக்குள் 80–100 rpm வேகத்தில் மிதிவண்டி ஓட்டுங்கள். இது, யோகாசனத்தில் நுழை வதற்கும் நல்ல நேரம். உங்கள் விளையாட்டு உங்களுக்குப் பிடித்திருந்தால், விளையாடுவதையும் தொடருங்கள்.

உதவிக் குறிப்பு: வாழ்க்கையை நேசிக்கிற கதகதப்பான, அன்பான மனிதராக இருக்க முயலுங்கள். அந்த வகை வெற்றியை இழந்து விடாதீர்கள். பணியிடத்தில் நட்பான முகங்கள், உணர்வுகளைக் கொண்டிருப்பது, வீட்டில் அன்பான, எளிதான நெருக்கத்தைக் கொண்டிருப்பது சிறப்பானது. இது பற்றி ஒரு கதை:

ஒருவர் தன்னுடைய மனைவி யிடம் “நான் இன்று என்னுடைய முதலாளியிடம் சம்பள உயர்வு கேட்கப்போகிறேன்” என்று சொன்னார். அவர் பதற்றத்துடன் தன் முதலாளியின் அறைக்குச் சென்றார்… வியப்பான விஷயம், முதலாளி அந்தக் கோரிக்கையை உடனடியாக ஏற்றுக்கொண்டார்.

அன்று மாலை, அவர் வீடு திரும்பினார். அங்கு, பிரமாதமான

விருந்துச் சாப்பாடு தயாராக இருந்தது, அவருடைய மனைவி அவருக்குப் பிடித்த பொருட்களைச் சமைத் திருந்தார். அவருடைய தட்டில் அவருடைய மனைவி ஓர் அட்டையை வைத்திருந்தார்: “அன்பே, உங்களுக்கு வாழ்த்து கள். உங்களுக்குச் சம்பள உயர்வு கிடைக்கும் என்று எனக்குத் தெரியும். நான் உங்கள்மேல் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு என்பதை இந்த விருந்து உங்களுக்குச் சொல்லும்.”

இதையடுத்து, அவர்கள் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் சிறப்பு இரவு உணவை உண்டார்கள். சாப்பிட்டு விட்டு எழுந்தபோது, அவருடைய மனைவியின் சட்டைப் பையிலிருந்து ஓர் அட்டை கீழே விழுந்தது. அதில் அவருடைய மனைவி இப்படி எழுதியிருந்தார், “சம்பள உயர்வு கிடைக்கவில்லை என்று வருந்தாதீர்கள். நீங்கள் சிறப்பானவர், இந்தச் சம்பள உயர்வுக்கு முழுத் தகுதி உங்களுக்கு உண்டு. நான் உங்கள்மேல் வைத்திருக்கும் அன்பு எவ்வளவு என்பதை இந்த விருந்து உங்களுக்குச் சொல்லும்.”

நம் மூளையின் செல்களுக்கு நடுவில் சிறிய, மெலிதான இழைகள் வளர்க்கிறது. இவை நம் ஆராயும் ஆற்றலை மிகுதியாக்குகின்றன, இவற்றை நாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்து, இது அறிவின் தொடக்கமாக அல்லது மனச் சோர்வின் தொடக்கமாக இருக்கலாம். நீங்கள் அறிவைத் தேர்ந்தெடுங்கள்.

உங்கள் வேலையில் பயணங்கள் உண்டு என்றால், விஸ்ஸ்கோ-வின் பாடி-ஷேப்பர் கப்பிகளை எப்போதும் உடன் வைத்திருங்கள். இவற்றை ஒரு ஜன்னல் கம்பியில் மாட்டினால் போதும், இவற்றுடன் வருகிற சிற்றேட்டில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளபடி உடற்பயிற்சி களைச் செய்யலாம். இது முழு உடல் உடற்பயிற்சியாகும்; அத்துடன், இதைச் செய்வது மிக எளிது.

புகழ் குவியும் 50கள். இப்போ தெல்லாம் 50கள் தான் புதிய 30கள். நம்முடைய 50களில் நாம் மிக வேறுவிதமாகத் தோன்றுவதோ உணர்வதோ இல்லைதானே?

(நோய்ப்பரவலால் நீங்கள் 24/7 வீட்டில் தங்கிய காரணத்தால்) நீங்கள் நாள்தோறும் உடற்பயிற்சி செய்திருந்தால், நீங்கள் முன்பு எப்போது இருந்ததைவிடவும் இப்போது நல்ல உடல்நலத்துடன் இருக்க வாய்ப்புகள் மிகுதி. இந்த நேரத்தில் உங்கள் தோள்களை உறுதியாக வைத்துக்கொள்வது மிகச் சிறந்தது, அதற்கு ஷ்ரக்ஸைப் பயன்படுத்துங்கள். Exercise cycle-ல் 70–80 rpmல் 20 நிமிடங்கள் என்று தொடங்குங்கள், சில வாரங்களில் அதை 60 நிமிடமாகப் பெருக்குங்கள். 50களில் ரத்த ஓட்டம் சற்று மந்தமாகிறது என்று ஆராய்ச்சி சொல்கிறது, அதனால், மயக்கம், ஏதும் அறியாத நிலை போன்றவை ஏற்படலாம். உங்களுடைய 60 நிமிடக் கால் உடற்பயிற்சி இவற்றைச் சரி செய்துவிடும்.

அதன் பிறகு, கால்களை உயர்த்தி இறக்குங்கள். காற்றாலைகள் போல் சுழற்றுவது தோள் இணைப்புகளை ஓட்டத்துடனும் நெகிழ்வுடனும் வைக்க உதவும். அத்துடன், டார்சோ ட்விஸ்ட்ஸ், முதுகெலும்பு விறைப்புத்தன்மையைச் சரி செய்யும்.

60கள் மற்றும் அதற்குப் பிந்தைய வாழ்க்கையின் ரகசியங்கள் 60கள், 70கள், 80கள் மெதுவாக வருகின்றன. பல உள் அழுத்தங்களை முற்றிலுமாக விடுகிற அழகிய நேரம் இது. இந்த வயதின் சிறப்பு, உங்களுக்குள் ஓர் 20-வயது-மனிதர், ஒரு 30-வயது-மனிதர், ஒரு 40-வயது-மனிதர், இன்னும் பலர் உள்ளார்கள். நீங்கள் வாழ்க்கையை இன்னும் ஆழமாகப் புரிந்துகொண்டிருக்கிறீர்கள், வாழ்தலின், உயிருடன் இருத்தலின் ஆழமும் மிகுதியாகியிருக்கிறது. மூளையின் இட மற்றும் வல அரைக்கோளங்கள் கூடுதல் ஒத்திசைவுடன் செயல்படுகின்றன, படைப்புணர்வை ஊக்குவிக்கின்றன. இவற்றைப் பல ஆண்டு வளமான அனுபவத்துடன் சேர்த்தால், மகிழ்ச்சி, மன நிறைவின் சிறந்த கலவை உங்களுக்குக் கிடைக்கும்.

உதவிக் குறிப்பு: இந்த நேரத்தில் உடற்பயிற்சியை நிறுத்தக்கூடாது. வெளியில்/வீட்டுக்குள் நடத்தல் அல்லது கை வைத்த நாற்காலியில் அமர்ந்து மிதிவண்டி ஓட்டுதல் ஆகியவை உங்களுக்கு மிகச் சிறந்த உடற்பயிற்சிகள். உங்களுக்கு ஏதாவது உடல்நலப் பிரச்சனை இருந்தாலன்றி, எந்த உடற்பயிற்சி யையும் விடவேண்டியதில்லை. உங்கள் வயது எதுவாக இருந்தாலும், தயவுசெய்து உடற்பயிற்சி செய்யுங்கள். டாக்டர் மான்டாகு அவர்களின் பொன்மொழி இது: “உங்களுக்கு ஒரு பைசா கூட வேண்டாம், உங்களுக்குத் தேவையானது நீங்கள்மட்டும்தான்.”

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

Rotary PEOPLE OF ACTION

ஹைதராபாதைத் தூய்மையாக்கும் ரோட்டரி

ரோட்டரி செய்திக்குழு

ஹைதராபாதில் உள்ள ஹுசைன் சாகர் ஏரிக்கு அருகிலுள்ள புகழ் பெற்ற டேங்க் பண்ட் பகுதியில், ரோட்டராக்ட், இன்டராக்ட் சங்கங்கள், டோஸ்மாஸ்டர்ஸ், ஜேசீஸ் மற்றும் ஃப்ரீமேசன்ஸ் உடன் இணைந்து, பொது இடங்களில் எச்சில் துப்புவதற்கு எதிராக ஒரு மிகப் பெரிய விழிப்புணர்வுப் பேரணியை நடத்தியது RC ஜூபிளி ஹில்ஸ், RID 3150.

இந்தப் பேரணியின் சிறப்பம்சம், சுதந்தர தினத்தன்று நடைபெற்றது, 150 மீட்டர் தேசியக் கொடியைத் தன்னார்வலர்கள் ஏந்திவந்தார்கள். பேரணியில் பங்கேற்றவர்கள் தூய்மை மற்றும் பொது நலன்பற்றிய விழிப்புணர்வை உருவாக்கும் அறிவிப்புப் பலகைகள், பதாகைகளை ஏந்தி வந்தார்கள்.

டேங்க் பண்டில் உள்ள ரோட்டரி பூங்காவில் DG K பிரபாகர் பேரணியைக் கொடி அசைத்துத் தொடங்கிவைத்தார். சங்கத் தலைவர் P சுரேஷ்குப்தா பிற NGOக்களுடன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இந்தப் பேரணி உள்ளூர் ஊடகங்களில் பரவலாக இடம் பெற்றது, ரோட்டரி சங்கத்துக்கு அது ஒரு மிகப்பெரிய PR செயல்பாடாக இருந்தது. இந்த ரோட்டரி முன்னெடுப்பில் கூட்டாளர்களாகச் சேர்வதற்குப் பல அமைப்புகள், NGOக்கள் ஆர்வம் தெரிவித்துள்ளார்கள் என்று தொடர்ந்து கூறினார் குமார்.■

பொது சுகாதார மையத்தைப் புதுப்பித்தது RC ரெவாரி மெயின்

RC ரெவாரி மெயின், RID 3011, ரெவாரியில் உள்ள ராஜீவ் நகரில் அரியானா நலத் துறையால் இயக்கப்படும் ஒரு நகர்ப்புறப் பொது நல மையத்தை (UPHC) சமீபத்தில் புதுப்பித்தது. சுவர்கள், வெளி நோயாளிகளுக்கான காத்திருப்புப் பகுதி ஆகியவற்றைக் கட்ட இந்தச் சங்கம் உதவியது, மையத்துக்கு மின் பொருத்திகளை வழங்கியது, பிற பழுது பார்ப்புப் பணிகளைச் செய்தது. இந்த இரண்டு மாதத் திட்டம் ரூ.3.3 லட்சம் செலவில் நிறைவுசெய்யப்பட்டது, சிறப்பான புத்தம்புதிய மையத்தை DG அனூப் மிட்டல் தொடங்கிவைத்தார்.

அநேகமாக, எங்கள் சங்கத்தின் மிகப் பெரிய திட்டங்களில் இதுவும் ஒன்று என்றார் சங்கத் தலைவர் J P சௌகான். அருண் குப்தா இந்தத் திட்டத்தின் தலைவராகச் செயல்பட்டார். இந்தத் திட்டத்திற்குச் சங்க உறுப்பினர்கள் தாராளமாக நன்கொடை அளித்தார்கள், DBG டெக்னாலஜி என்ற மென்பொருள் உருவாக்க நிறுவனம் முதன்மை ஆதரவாளராக இருந்தது.■

DG அனூப் மிட்டல் புதுப்பிக்கப்பட்ட பொது சுகாதார மையத்தை துவக்கி வைக்கிறார்.

On the racks



The Thinnai

Author : **Ari Gautier**
Publisher : **Hachette**
Pages : **186; ₹399**

In this delightful book, originally written in French, Ari Gautier takes us through the unglamorous district of Kurusukuppam, Pondicherry, that you will not find in any tourist literature.

The narrative, translated from French to English by Blake Smith, is centred around the eccentricities of the inhabitants of the four-odd streets of the locality, as different from Pondichery's plush and stylish White Town, as chalk from cheese. The core of the story is of course Pondicherry's French history, and the differences, subtle and strong, between those who speak proper French, such as the narrator's family and those who speak Creole, like their domestic help Lourdes. "Pondicherrian Creole is French compounded with Tamil and Portuguese words, spoken in a Tamil style," explains the writer.

The protagonist's father, who had once fought in the French army, is now settled comfortably with a Frenchman's military pension in a respectable house with a predominant *thinnai* (Tamil word for a shaded verandah or sit-out with built-in seating). It is the fragnance of the French style cooking in this house, that draws the weary and colourful traveller Gilbert *Thatta* to the *thinnai*. The *Durai* (white person), dressed in a dirty coat, accompanied by little Gilbert, is welcomed in the *thinnai*, given ample food and liquor by the generous owner and the rest of the story is Gilbert *Thatta's* colourful story about a rare diamond… the Stone of Sita… in his possession.

An interesting passage in the book is the history of how the local residents of Pondicherry renounced their Indian citizenship and embraced French citizenship. "On 3 January 1882, my great grandfather Nalanda presented himself at Pondicherry's newly built City Hall…. Two hundred years ago, one of its ancestors had converted to Catholicism to escape untouchability. Now Nalanda was able to dive into another new world seeking a better life for himself and his children. He would become a French citizen."



Polio, The Eradication Imbroglio

Author : **T Jacob John and Dhanya Dharmapalan**
Publisher : **Notion Press**
Pages : **274; ₹650**

This book is a reminder of the war against polio and the continuing battle as its total eradication takes a back seat while the world fights Covid-19. The global programmes to root out polio are now facing an existential crisis, say experts. Helping the readers understand the global combat against the disease, the book talks of past milestones and the way forward. It has a detailed account of the challenges Albert Sabin, the first developer of oral polio vaccine, faced when he and Dr Olitsky grew a strain of poliovirus in a lab. The authors warn that "this is not the time to make more gambles," as it would deflect from the primary aim of eradicating polio and suggest a logical way forward.



The Cursed Treasure

Author : **Anu Pillai**
Publisher : **Notion Press**
Pages : **102; ₹150**

Set in Kollam during the British Raj, the book narrates the story of Keshu, a man of high morals. His journey from rags to riches is pebbled with trials and tribulations including the sudden twist that claimed his fortunes under mysterious circumstances. Stretching over two centuries, from 1880 to 2020, the book narrates the history of Keshu's descendants in a lucid style. It keeps the reader hooked on to the question: Will Keshu's lost treasure ever be found?

Compiled by Rasheeda Bhagat and Kiran Zehra

RC சேலம் மெட்ரோபோலிஸ் — RID 2982

மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவ மனையில் கோவிட் நோயாளி களுக்குச் சேவை செய்த 500 செவிலியர்கள் பெருமைப் படுத்தப்பட்டார்கள்.

RC பில்குவா சிட்டி — RID 3012

DG அசோக் அக்கர்வால் முன்னிலையில், மாற்றுத்திறனாளி களுக்கு மூன்று சக்கர வண்டிகள் நன்கொடையாக அளிக்கப் பட்டன.

RC புதுக்கோட்டை சிட்டி — RID 3000

கீரனூர் அரசு மருத்துவ மனைக்கு ஆக்சிஜன் உருளைகள் நன்கொடையாக அளிக்கப் பட்டன.

RC புசாட் — RID 3030

DG Dr ஆனந்த் ஜூன்ஜூன்வாலா ஒரு மர நடுதல் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்தச் சங்கம் 1,000க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நடவுள்ளது.

RC டெல்லி சவுத் சென்ட்ரல் — RID 3011

ஃபரீதாபாதில் தலசீமியா குழந்தை களுக்கான ரூ.5 லட்சம் மதிப்புள்ள ரத்த மாற்று மையத்தை DG அனுப்மிட்டல் தொடங்கி வைத்தார்.

RC அகமதாபாத் சுப்ரீம் — RID 3054

பாராலிம்பியன்கள் பவீனா படேல், சோனல் படேல் (படகு ஓட்டும் வல்லுனர்கள்) ஆகியோரை இச்சங்கம் ஊக்குவித்தது. டோக்கியோ பாராலிம்பிக்ஸில் பவீனா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

செய்திகள்

RC சூரத் ரவுன்ட்-டவுன் — RID 3060

மான்ட்வி-யில் உள்ள தேஜஸ் கண் மருத்துவ மனையின் கிராமப்புறப் பார்வை மையங்களுக்கு மருத்துவக் கருவிகள் வழங்கப் பட்டன.

RC ஸ்ரீ கங்காநகர் — RID 3090

வர்த் ஆசிரமம் என்ற முதியோர் இல்லத்தில் உள்ள மூத்த குடிமக்களுக்குச் சங்கம் ஊட்டச்சத்து மிக்க உணவு வழங்கியது.

RC ஃபக்வாரா மிட்-டவுன் — RID 3070

ஹதியாபாத்-இல் உள்ள St சோல்ஜர் கல்லூரியில் சங்கத் தலைவர் மனோஜ் குமார் தலைமையில் ஒரு மரம் நடும் நிகழ்ச்சி நடத்தப் பட்டது.

RC பிசௌலி — RID 3110

இந்தச் சங்கமும் அதன் இன்னர் வீல் சங்கமும் இணைந்து பிசௌலியில் ஒரு மிகப் பெரிய மரம் நடும் நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

RC ஷாஹாபாத் மர்கன்டா — RID 3080

முகல் மஜ்ரா கிராமத்தில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில் நான்காவது நீர் குளிர் விப்பான் நிறுவப்பட்டது.

ரோட்டரி ஈ-கிளப் புணே டைமன்ட் — RID 3131

கொத்ரூடில் பொம்மைகள், கணினிகள், எலக்ட்ரானிக் பொருட்கள், துணிகள், காலணிகள், ஆடை ரகங்கள், பைகள், மிதிவண்டிகள், மெத்தைகள், குஷன்கள் உள்ளிட்ட பல குப்பைகள் திரட்டப்பட்டன.

RC அம்பர்நாத் ஸ்மார்ட் சிட்டி — RID 3142

பொலாட்பூர் வட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு ரூ.1.65 லட்சம் மதிப்புள்ள 300க்கும் மேற்பட்ட மளிகைப் பொருள் பொதிகள் வழங்கப்பட்டன.

RC குந்தாபுரா — RID 3182

குந்தாபுரா அரசுக் கல்லூரியில் சங்கத் தலைவர் சசிதரா ஹெக்டே CET தேர்வுகளில் கலந்து கொள்ளும் 500 மாணவர்களுக்கு முகமூடிகள், தூய்மைப் படுத்திகளை வழங்கினார்.

RC குல்பர்கா சன்சிட்டி — RID 3160

குல்பர்கா-வில் உள்ள ரோட்டரி பள்ளியில் சாது வாஸ்வானி மிஷன், புணே, RC இசல்கரன்ஜி டெக்ஸ்டைல் சிட்டி-யுடன் இணைந்து நடத்தப்பட்ட செயற்கைக் கை, கால் பொருத்தல் முகாமில், சுமார் 170 பேர் பயனடைந்தனர்.

RC பலரிவட்டொம் — RID 3201

இச்சங்கம் கணவரை இழந்த ஒரு பெண், அவருடைய இரு மகள் களுக்காக ஒரு வீடு கட்டிக் கொடுத்துள்ளது.

RC ஹெரிட்டேஜ் சிட்டி ஷிரோல் — RID 3170

மாதோஸ்ரீ சிறுவர் மருந்தகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட பரிசோதனை முகாமில் Dr ஸ்ரீனிவாஸ் படீல், Dr அதுல் படீல் இருவரும் 100க்கும் மேற்பட்ட குழந்தைகளை பரிசோதித்தார்கள்.

RC திருவனந்தபுரம் சவுத் — RID 3211

இந்தச் சங்கம் பெரியாரம் கிராமத்தைத் தத்தெடுத்து, அங்கு கிராமத்து மக்களுக்கு பல முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

செய்திகள்

RC திருநெல்வேலி சென்ட்ரல் — RID 3212

நோய்ப்பரவலால் பாதிக்கப்பட்ட ஒடுக்கப்பட்டோர், மாற்றுத்திறனாளி மக்களுக்கு 250 கிலோ அரிசிப் பைகள், மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

RC ராய்கர் ஸ்டீல் சிட்டி — RID 3261

சங்கத்தினர் ப்ரசாதா கிராமத்தில் 1,500 மரக்கன்றுகளை நட்டனர். இவற்றை இரண்டு ஆண்டுகள் பராமரிக்கவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

RC வந்தவாசி டவுன் — RID 3231

இந்தச் சங்கம் ஆன்னெட்ஸ், இன்டராக்ட், ரோட்டராக்ட் சங்கங்களை நிறுவியது. நோய்ப்பரவலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரிசி, மளிகைப் பொருட்களை வழங்கினார்கள்.

RC பத்ராக் — RID 3262

பத்ராக்-ல் உள்ள சலண்டி மருத்துவமனையில் நடைபெற்ற கண் புரை அறுவைச் சிகிச்சை முகாமில் 20 நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. மேலும் 500 கண்புரை அறுவைச் சிகிச்சைகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளது.

RC குவஹாத்தி சிட்டி — RID 3240

டாக்டர் பொரூவா புற்றுநோய் மருத்துவமனையில் சுமார் 400 மக்களுக்கு RC குவஹாத்தி மெட்ரோ-வுடன் இணைந்து, அன்னரத்னம் திட்டத்தின்கீழ் உணவு வழங்கப்பட்டது.

RC கல்கத்தா மிட்டவுன் — RID 3291

நரேந்திரப்பூரில் 10ம் வகுப்பு பயிலுகிற, பார்வைக் குறைபாடுள்ள 17 மாணவர்களுக்கு ஸ்மார்ட் ஃபோன்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

வயதானால் வரும் மன அழுத்தம்!

TCA ஸ்ரீனிவாச ராகவன்

இது கற்றுக்கொள்வதற்கு எளிதான பாடம் அல்ல, குறிப்பாக நீங்கள் நீண்ட காலமாக இருந்தும், நீங்கள் சொல்வது ஒன்றுக்கும் உதவாத செய்தியாக இருந்தாலும் அதை கேட்க பலரும் இருப்பார்கள். ஆனால், ஒவ்வொருவரும் வயதாகும்போது கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று உள்ளது. இன்றைய இளைஞர்கள் உங்கள் மீது கவனம் செலுத்துவதில்லை. இது உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தும். அவ்வப்போது என்னைப்போலவே. சில வருடங்களுக்கு முன்பு நான் அப்படித்தான் இருந்தேன் என்று எனக்கு நானே சொல்லிக்கொள்வேன்.

பழைய சாக்கள் அல்லது உறவினர்கள் ஒன்றுகூடி பேசும் நிகழ்வுகளை நான் நினைத்துப் பார்க்கிறேன். அப்போது இளைஞர் களாகிய நாம் அவர்கள் சொல்வதை அரைகுறை மனதுடன் காது கொடுத்து கேட்க வேண்டியிருக்கும். நாம் சமகாலத்தவர்களுடனேயே பேச முற்படுவோம். ஆனால், அப்போது வயதானவர்களின் முகத்தை பார்க்கவேண்டுமே. அவர்களுக்கு தயக்கம் இருந்தாலும் விடமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் நள்ளிரவுவரை தங்குபவர் ஒருவருடன் வந்திருப்பார். பின்னர் மாலை நேர உணவு, பானம் இரண்டையும் தவிர்த்துவிட்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டு நாம் பேசுவதை கவனித்துக் கொண்டிருப்பார். எப்போதாவது ஒருசிலர் அவர்களுடன் சில நிமிடங்கள் பேசுவார்கள். மொத்தத்தில் அவர்கள் தனிமையில்தான் இருப்பார்கள்.

நான் இப்போது அந்த நிலையை அடைந்திருக்கிறேன். ஏன் உங்களில் பலரும் அந்த நிலையை அடைந்திருக்கக்கூடும். நான் எப்போதும் அது தனிப்பட்ட முறையிலான நிகழ்ச்சிகளாக இருந்தாலும் சரி, தொழில்முறையான கூட்டங்களாக இருந்தாலும் சரி தேர்ந்தெடுக்கப்பட்ட சில நிகழ்ச்சிகளில் மட்டுமே பங்கேற்பேன். ஆனால், நான் இப்போது அதையும் நிறுத்திவிட்டேன். நீங்கள் வந்திருக்கிறீர்களா இல்லை என்றுகூட கவனிக்காத ஒரு இடத்துக்கு போவதில் என்ன லாபம்? நீங்கள் வரவில்லை என்று அவர்களிடம் கூறுவது மோசமானது. அதற்கு அவர்கள், 'நான் புரிந்துகொண்டேன் சார் அல்லது ஐயா' என்று கூறிவிட்டு உடல்நிலையை பார்த்துக்கொள்ளுங்கள் என்று பதில் அளித்தால் பரவாயில்லை.

இது சரியானதல்ல என்றாலும் - சரியாக இருக்க வேண்டும். உங்கள் குழந்தைகள் உங்களை பெயரளவுக்கு கவனிக்கும்போது, மன்னிக்கவும் ஒரு கட்டத்தில் உங்களை முழுவது மாக புறக்கணிக்கும்போது நீங்கள் எதையாவது சொல்ல முற்படுவீர்கள். அவர்கள் செய்வது தவறு என்று நீங்கள் சொல்ல முற்பட்டாலும் அதை பொருட்படுத்தாமல் பேசி கொண்டிருப்பார்கள். அவர்கள் செய்வது தவறாக இருந்தாலும் அதைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். தாங்கள் செய்வதுதான் சரி என்று நினைப்பார்கள். அவர்களுக்கு அந்த ஒரு விஷயம்தான் முக்கியம். நாம் அனைவரும் இளமையாக இருந்தபோது அதைத்தானே செய்தோம்.

மிக மோசமான அதேநேரத்தில் புத்திசாலியான நான், ஒரு கொடூரமான பழிவாங்கும் திட்டத்தை வகுத்தேன். ஆண்டுக்கு ஒன்று அல்லது இரண்டு முறை தொழில்முறையிலோ அல்லது தனிப்பட்ட முறையிலோ விருந்து நிகழ்ச்சி நடத்தி அதில் சராசரியாக 70 வயதானவர்களை அழைப்பேன். அத்துடன் ஒன்றிரண்டு இளைஞர்களுக்கும் அழைப்பு விடுப்பேன். வயாதனவர்கள் கூட்டத்தில் பங்கேற்கும் இளைஞர்களை வெயிட்டர்கள் போல் நடத்தினேன். தனிப்பட்ட விருந்து நிகழ்ச்சிகளில் இளம் உறவினர்களை அழைத்து அவர்களை பணியாளர்களைப் போல் நடத்தினேன். நம்பினால் நம்புங்கள். அவர்கள் சலிப்படைவதை பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும். இதில் நான் பின்பற்றும் தந்திரம் என்னவென்றால் மூன்று பேருக்குமேல் அழைப்பு விடுக்கமாட்டேன். அதில் இருவர் ஆண்களாகவும் ஒருவர் பெண்ணாகவும் அல்லது இருவர் பெண்ணாகவும் ஒருவர் ஆணாகவும் இருப்பார்கள். இந்த மாதிரி சமயத்தில் பெண்கள் நகைச்சுவையுடன் அன்றைய மாலைப் பொழுதை சமாளித்து விடுவார்கள். ஆனால், ஆண்கள் சுவர் ஏறிக்குதித்து வெளியில் செல்ல தயாராக இருப்பார்கள். சிலர், மனைவி அருகில் இல்லாததால் இலவசமாக கிடைக்கும் மதுவை குடித்துவிட்டு தள்ளாடுவார்கள். அதை பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கும்.

சில காரணங்களால் ஓய்வுபெற்ற பெண்களுக்கு இளைஞர்கள் கூட்டத்தில் மரியாதை இருக்கும். இளைஞர்களின் கவனத்தையும் ஈர்ப்பார்கள். 'நாங்கள் வாழ்நாள் முழுவதும் புறக்கணிக்கப்பட்டதால் அதை எப்படிக் கையாள்வது என்பதை தெரிந்துவைத்துள்ளோம்'என்று வயதான பெண்மணி ஒருவர் என்னிடம் தெரிவிக்கும் வரை இதை வாழ்க்கையில் ஒரு மர்மமாகவே நான் நினைத்து வந்தேன். முதுமையை நாங்கள் கண்ணியத்துடன் ஏற்றுக் கொண்டோம். ஆண்களாகிய நீங்களும் அதற்கு முயற்சி செய்யுங்கள் என்றார் அவர்.■

செய்தித் துளிகள்

தங்க நாக்கு கொண்ட மம்மிகள்

2,000 ஆண்டு வயதான, தங்கள் வாய்களுக்குள் தங்க நாக்குகளைக் கொண்ட மம்மிகளைக் கண்டறிந்துள்ளது எகிப்திய-டொமினிக்கத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்களுடைய குழு ஒன்று. வடக்கு எகிப்தில் உள்ள அலெக்ஸான்ட்ரியா-வின் டபோசிரிஸ் மாக்னா கோயிலில் கண்டறியப்பட்ட இந்த 16 மம்மிகள் கிரேக்க மற்றும் ரோமக் காலகட்டங்களில் புகழ் பெற்றிருந்த, பாறையில் வெட்டப்பட்ட கல்லறைகளில் புதைக்கப்பட்டிருந்தன. நாக்கு வடிவத்தில் அமைந்த ஒரு தங்கப் படல அமுலெட் ஒரு மம்மியின் வாயில் வைக்கப்பட்டிருந்தது கண்டறியப்பட்டது. இது, மறுவாழ்வில், கீழுலகின் கடவுளான ஒசிரிஸுக்கு முன்னால் அவர்களால் பேச இயலுவதை உறுதி செய்வதற்கான ஓர் ஆன்மிகச் சடங்காக இருந்தது.

குட்டி போட்ட கன்னிச் சுறா

இத்தாலியில் உள்ள காலா கொனொனெ நீர்வாழ் உயிரிகள் காட்சிச்சாலையில் இஸ்பெரா (மால்திய மொழியில் நம்பிக்கை) என்ற சுறா கன்னிக்குப் பிறந்துள்ளது. இவ்வகையில் இது உலகின் முதல் உயிரியாக இருக்கலாம் என்று அறிவியலாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஸ்மூத்-ஹவுண்ட் வகையைச் சேர்ந்த இப்பெண் குட்டிச் சுறாவின் தாய் கடந்த பத்தாண்டுகளாக இன்னொரு பெண் சுறாவுடன் தொட்டியில் இருந்துள்ளது, எந்த ஆண் சுறாவையும் சந்தித்ததில்லை. பார்தெனோஜெனிசிஸ் என்னும் இந்த அரிய நிகழ்வு, காலநிலை மாற்றம், மிகுதியாக மீன் பிடித்தல் அல்லது வேட்டையாடுதல் மற்றும் நோய் போன்ற இயற்கைத் தேர்ந்தெடுத்தல் அழுத்தங்கள் கிடைக்கும் அனைத்து ஆண்களையும் அழித்துவிடுகிற தீவிரமான சூழல்களில் பெண்களால் தங்களுடைய முட்டைகளைத் தாங்களே கருவுறச்செய்ய இயலுகிற திறனின் விளைவாகும்.

ஆஃப்கானியக் குழந்தைக்கு மீட்பு விமானத்தின் பெயர் சூட்டப்பட்டது

ஆகஸ்ட் 21, ரீச் 828 என்ற அழைப்புச் சின்னத்தைக் கொண்ட ஜெட் விமானம் ஆஃப்கானிஸ்தானைச் சேர்ந்த பலரை ஜெர்மனியில் உள்ள ரம்ஸ்டெய்ன் விமானத் தளத்திற்கு அழைத்துச் சென்றது. இந்த விமானத்திலிருந்த ஒரு பெண் அங்கு குழந்தை பெற்றார், அவர் தன்னுடைய மகளுக்கு ரீச் என்று பெயர் சூட்டியுள்ளார். பாதுகாப்புக் கவலைகளால், இந்தக் குடும்பத்தைப்பற்றிய பிற தகவல்களை ராணுவம் வழங்கவில்லை. US விமானப்படை தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில் பகிர்ந்துகொண்ட புகைப்படங்களில் தாயின் முகம் டிஜிட்டல் முறையில் மங்கலாக்கப்பட்டிருந்தது.

சூழலியல் பூங்காவாக மாறிய விமான நிலையம்

ஃபிரெஞ்சு நிலப்பகுதிக் கட்டுமானக் கலைஞர் மோஸ்பாக் பய்சாகிஸ்டெஸ் தொழில்நுட்பம், இயற்கையைக் கலந்து முன்னாள் டாய்சங்க் விமான நிலையத்தை சூழலியல் சோலையாக மாற்றியுள்ளார். தத்துவ அறிஞர் ருடால்ஃப் ஸ்டெய்னருடைய 12 உணர்வுகள் கொள்கையை ஓரளவு அடிப்படையாகக் கொண்ட இந்தப் பூங்கா 12 வெவ்வேறு களங்களைக் கொண்டுள்ளது, ஒவ்வொரு களமும் ஓர் உணர்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஏரிக்கு அருகில் வடிவமைக்கப்பட்ட, எதிரொலிகளை உருவாக்குகிற பேச்சுக் களம், நறுமணத் திரவங்களை நினைவுபடுத்துகிற, பூச்செடிகள் நிறைந்த ஒரு நறுமணக் களம் உள்ளிட்ட பலவும் இங்கு இடம்பெற்றுள்ளன.

காற்றிலிருந்து CO2ஐ நீக்கும் ஐஸ்லாந்து நிறுவனம்

க்ளைம்வொர்க்ஸ் என்ற ஸ்விஸ் நிறுவனம் காற்றிலிருந்து கார்பன் டை ஆக்ஸைடை உறிஞ்சி அதைப் பாறையாக மாற்றும் ஓர் ஆலையை அமைத்துள்ளது. தன்னுடைய ஆர்க்கா ஆலையால் ஒவ்வோர் ஆண்டும் 4,000 டன், அதாவது, சுமார் 870 கார்களுடைய ஆண்டு உமிழ்வுக்குச் சமமான கார்பன் டை ஆக்ஸைடை (CO2), உறிஞ்ச இயலும் என்று இந்த நிறுவனம் தெரிவிக்கிறது. விசிறிகளைப் பயன்படுத்திக் காற்று ஒரு திரட்டிக்குள் இழுக்கப்படுகிறது, Co2 திரட்டப்படுகிறது, சூடாக்கப்பட்டுத் திரட்டப்பட்டு நீரில் கலக்கப்படுகிறது. பிறகு அருகிலுள்ள பசால்ட் பாறையில் 1,000 மீட்டர் ஆழத்தில் செலுத்தப்படுகிறது.

ஒருங்கிணைப்பு: கிரண் ஜெஹரா; வடிவமைப்பு: S. கிருஷ்ணப்ரதீஷ்.

Registered No. TN/CCN/677/2019-2021
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2019-2021
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372 Rotary News Tamil Published on the first week of every month

ADVT.

REGULAR CLASSES
ALREADY COMMENCED

www.iisuniv.ac.in

IIS (deemed to be UNIVERSITY) JAIPUR

Admissions Open 2021-22

For UG/PG/Ph.D./Professional programmes

Option-1 : Apply Offline
Visit our Campus between 9.30 am & 4.00 pm on all working days

Option-2 : Apply Online

Direct Admission for **UG/PG & Professional** programmes

Admission to **Ph.D.** programmes through **Research Entrance Test (RET)**

UNDERGRADUATE PROGRAMMES

- **B.A.**
- **B.A. Hons.**
- **B.A.** (Journalism and Mass Communication)
- **B.F.A.** (Applied Art, Painting, Sculpture)
- **B.B.A.**
- **B.C.A.**
- **B.Com.**
- **B.Com. Hons.**
- **B.Sc.**
- **B.Sc. Hons.**
- **B.Sc. Hons.** (Home Sc.)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc. Fashion Design**
- **B.Sc. Jewellery Design & Technology**

INTEGRATED COURSES

- **B.A. B.Ed.***
- **B.Sc. B.Ed.***

*Approved by NCTE

SPECIALIZED PROGRAMMES

- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/ Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA, UK.

SPECIALIZED CERTIFICATE PROGRAMMES

- **ICAI sponsored Certificate** programme for Accounting Technicians.
- **University of Cambridge,** U.K.'s Business English Certificates Tests of English

BACHELOR OF VOCATION (B.VOC.) PROGRAMMES*

- **B.Voc.** (Office Management and Secretarial Practices)
- **B.Voc.** (Banking and Financial Services)
- **B.Voc.** (Entrepreneurship and Business Innovation)
- **B.Voc.** (Digital Marketing)

*Approved by UGC

POSTGRADUATE PROGRAMMES

- **M.A.**- Economics, English, French, Sociology, Geography, History, Political Science, Mathematics, International Relations, Public Administration, Psychology, Statistics
- **M.Sc.**- Biotechnology, Botany, Chemistry, Economics, Environmental Science, Geography, Information Technology, Mathematics, Microbiology, Physics, Psychology, Statistics, Zoology
- **M.Com.** - Accounting & Taxation, Business Studies, Financial Studies
- **M.Sc. Home Science** - Clothing and Textiles, Foods and Nutrition, Human Development
- **M.F.A.** - Applied Art (Graphic Design/Illustration), Print Making, History of Art, Painting, Sculpture (Portraiture, Creative Sculpture)
- **M.A.** Journalism & Mass Communication
- **M.A./M.Com./M.Sc.** Fashion Design
- **M.S.W.** (Master of Social Work)
- **M.B.A. (Semester Based)** Human Resource Management; International Business; Retail Management; Travel & Tourism Management; Finance; Advertising & Brand Management; Business Analytics; Innovation, Entrepreneurship and Venture Development
- **M.B.A.** (**Dual Specialization, Trimester based**) - Marketing, Finance, Human Resource, International Business, Information Technology Management **(Co-Educational)**
- **M.C.A.** (Master of Computer Applications - Two years semester based programme) **(Co-Educational)**

RESEARCH PROGRAMMES

- **Ph.D.**

  Faculty of Arts & Social Sciences: English, History, Political Science, Mathematics, Statistics

  Faculty of Science : Environmental & Life Sciences (Botany, Biotechnology, Environmental Science, Microbiology, Zoology), Chemistry, Computer Science, Home Science (Human Development), Mathematics, Physics, Statistics
- **D.Sc./D.Litt.**

CAREER ORIENTED & SKILL DEVELOPMENT PROGRAMMES, 3-LEVEL CERTIFICATE/DIPLOMA /ADVANCED DIPLOMA ALONG WITH DEGREE PROGRAMMES

IIS (deemed to be **UNIVERSITY)**
Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur -302 020 (India)
0141-2397906-07, +91 141 2400160, 2401008

50% SCHOLARSHIP
OFFERED TO THOSE WHO HAVE LOST AN EARNING PARENT / GUARDIAN TO COVID-19